November 2020

தமிழ்

11-ம் ஆண்டில்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

தீபாவளி மலர்


VARSHA™
IDLI/DOSA BATTER
Eat Fresh!
Eat the Best!
VARSHA
Ready to Cook
Idli / Dosa Wet Mix
1Kg
Traditional taste that Lingers

iதமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு

November 2020

சுவடி— 10
ஓலை— 9

வணக்கம் பல

மாற்றம் ஒன்றே மாறாதது என்றாலும், மனித சமுதாயம் இரு பெரும் மாற்றங்களை எதிர்கொள்கின்றது. இயற்கை நிகழ்த்துகின்ற வினோதங்களும் விபரீதங்களும் ஒரு மாற்றம் என்றாலும், அரசியல் சூழல் மாற்றங்களே மிகப்பெரிய மாற்றங்களாகும்.

இயற்கை மாற்றங்களை எதிர்கொள்ளத் தயங்கும் மனிதர்கள், செயற்கையான அரசியல் மாற்றங்கள் மனித சமுதாயத்திற்கு பயன் விளைவிக்க வேண்டும் என்ற நம்பிக்கையில்தான் என்றாலும், அந்த மாற்றங்கள் பாதகம் தருவதாகவும் அமைந்துவிடுகிறது.

அமெரிக்காவில் ஏற்பட்ட அரசியல் தலைமை அந்நாட்டை எவ்விதத்தில் வழிநடத்தி வருகிறது என்பதும், இப்பொழுது மீண்டும் அங்கே ஒரு அரசியல் மாற்றம் நிகழ வேண்டும், அந்த மாற்றமாவது வல்லரசை நல்லரசாகச் செய்யட்டும் என்பதே எதிர்பார்ப்பு!

நியூஸிலாந்து நாட்டுக்கு மீண்டும் பிரதமராக அமர்பவர் அரசியலை உண்மையிலேயே மக்கள் தொண்டாக நினைக்கிறார் என்பதை அந்நாட்டு மக்கள் அளித்த தீர்ப்பு வெளிப்படுத்தி இருக்கிறது.

ஒவ்வொரு அரசியல் தலைவரும் தங்கள் பதவியை மக்களுக்கு பயன் தரக்கூடிய வகையில் பயன்படுத்துவார்களேயானால், அவர்களுடைய பெயர் அந்நாட்டின் வரலாற்றில் அழுத்தமான தடமாகப் பதிந்துவிடும்! புது சகாப்தம் படைத்திருக்கும் பிரதமருக்கு வாழ்த்துக்கள்!

தீப ஒளித் திருநாள் சிறப்பிதழான இம்மாத 'அய் தமிழ்' இதழ், தமிழ் இலக்கிய உலகுக்கு இளம் எழுத்தாளர்களை அடையாளப்படுத்துகிறது.

நல்ல ஆக்கங்கள், மனிதச் சிந்தனைகளை மேம்படுத்தி உயர்வான செயல்களுக்கு வழிவகுக்கும்! அத்தகைய நற்சிந்தனைகளோடு வரும் படைப்பாளிகளை வரவேற்பதில் மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிற 'அய் தமிழ்', பயன்மிகு பனுவல்களை உங்கள் முன் வைக்கிறது!

இனிய தீப ஒளித் திருநாளில் அனைவரின் இல்லங்களிலும் ஒளி துலங்க வேண்டும்! மகிழ்ச்சி மலர வேண்டும் என்ற வாழ்த்துக்களுடன் மலர்கின்ற 'அய் தமிழை' வாசியுங்கள்! வரவேற்று மகிழுங்கள்!

அனைவருக்கும் தீபத்திருநாள் நல்வாழ்த்துக்கள்!

நேசப்பகிர்தலுடன்

ஆசிரியர் குழு

உள்ளே...

IThamil Monthly Magazine

Chief Editor & Publisher
Sivanesan

Editor
Khottravan

Editorial Team
Ganesan
Navani
Shanthakumar

Art Editor
Sriram

Art & Marketing Director
Jaya

Printers
Kanagam Pathippagam

Contact us:
editor@ithamil.com

*இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது

தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

வெல்கிறது
எதிர்ப்பு அலை

மீண்டும் களத்தில்

மாற்றம் ஏமாற்றம்

கொலு தார்ப்பரியம்

தனிப் பெரும் கருணை

தமிழர் பெருமை

உயிர் உணர்ந்தோர்

அணுவே ஆதாரம்

இணையம் கவனம்
தேவை

கவிதைகள்

சிறுகதைகள்

சினிமா
பாலிவுட், கோலிவுட், டோலிவுட், மாலிவுட்

வெல்கிறது எதிர்ப்பு

அமெரிக்க அதிபர் தேர்தல்:

அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு வெள்ளை மாளிகையில் இருக்கப் போவது யார் என்பதற்கான போட்டியில் குடியரசு கட்சியின் வேட்பாளர் டிரம்ப்புக்கு எதிராகக் களம் காண்கிறார் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோ பைடன். வெள்ளை மாளிகையில் அதிபர் டிரம்ப் மேலும் 4 ஆண்டு காலம் தங்கி இருப்பதற்கு இப்போதைக்கு தடங்கலாக இருக்கும் ஒரே நபராக ஜோ பைடன் இருக்கிறார்.

பராக் ஒபாமா அதிபராக இருந்தபோது துணை அதிபராக இருந்த ஜோ பைடன், வரும் நவம்பர் மாதம் நடைபெற உள்ள அதிபர் தேர்தலில் ஜனநாயக கட்சியின் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். அவர் வெளியுறவுக் கொள்கையில் நிபுணத்துவம் பெற்றவர், வாஷிங்டனில் பல தசாப்தங்கள் பணியாற்றியவர், சொல்லாற்றல் மிக்கவர், சாதாரண மக்களை எளிதில் ஈர்க்கும் தன்மை கொண்டவர், தனிப்பட்ட துயரங்களை துணிச்சலுடன் கடந்து வந்தவர் என்று அவருடைய ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

அதிபர் பதவி வகிப்பதற்கான வயதைத் தாண்டிவிட்டவர், பதவியை தக்க வைத்துக் கொள்ள எதையும் செய்யக் கூடியவர் (பெண்கள் மீது நாட்டம் கொண்டவர்) என்று அவருடைய எதிர்ப்பாளர்கள் கூறுகின்றனர்.வெள்ளை மாளிகையில் இருந்து டிரம்ப்பை வெளியேற்றுவதற்கான தகுதிகள் அவருக்கு உள்ளதா? பிரசார பயணம் பைடனுக்குப் புதியது கிடையாது. அமெரிக்க செனட் உறுப்பினராக வாஷிங்டனில் 1973—ல் (47 ஆண்டுகளுக்கு முன்பு) வாழ்க்கையைத் தொடங்கியவர் அவர். முதன்முறையாக அதிபர் பதவிக்கான போட்டியில் 1987—ல் (33 ஆண்டுகளுக்கு முன்பு) அவர் போட்டியிட்டார். வாக்காளர்களை ஈர்க்கக் கூடியவராகவும், ஒரு டைம்பாம் போன்ற ஆபத்தானவராகவும் அவர் கருதப்படுகிறார். முதன்முறையாக அதிபர் பதவிக்கான போட்டியில் பங்கேற்றபோது, கூட்டத்தினர் மத்தியில் பேசுகையில், நிதானம் தவறும் போக்கு காரணமாக அந்த வாய்ப்பு அவருக்கு பறிபோனது. இப்போது மூன்றாவது முறையாக அவர் களத்தில் இருக்கிறார்.

``என் முன்னோர்கள் பெனிசில்வேனியாவில் வடகிழக்குப் பகுதியில் நிலக்கரி சுரங்கங்களில் வேலை பார்த்தார்கள்'' என்று பிரசாரங்களில் அவர் சொல்லத் தொடங்கினார். தங்களுக்கு உரிய வாழ்க்கையை வாழ்வதற்கான வாய்ப்புகள் அவர்களுக்கு ஒருபோதும் கிடைக்கவில்லை என்று அவர் கோபம் காட்டினார். ஆனால் அவருடைய முன்னோர்கள் யாருமே நிலக்கரி சுரங்கங்களில் வேலை பார்க்கவில்லை. பிரிட்டன் அரசியல்வாதி நீல் கின்னோக் என்பவருடைய உரையில் இருந்து

அலை

பிட்டர் பால்

அந்த வரியை (மற்றும் பல வரிகளை) அவர் எடுத்து பயன்படுத்தியுள்ளார். கின்னோக்கின் உறவினர்கள் உண்மையிலேயே சுரங்கத் தொழிலாளர்களாக இருந்தனர்.``ஜோவின் வெடிகுண்டுகள்" என கூறப்பட்ட பலவற்றில், முதலாவது விஷயமாக அது அமைந்தது.

தன்னுடைய அரசியல் அனுபவம் பற்றி 2012—ல் பெருமையாகக் குறிப்பிட்ட பைடன், குழப்பமாக இருந்த ஒரு கூட்டத்தில் இவ்வாறு கூறினார்: ``மக்களே, எனக்கு எட்டு அதிபர்களைத் தெரியும். அதில் மூன்று பேரை அந்தரங்கமாக அறிவேன்" என்று கூறினார். நெருக்கமான நட்பு



கொண்டிருந்தேன் என்பதற்குப் பதிலாக, அவர்களுடன் பாலியல் உறவு கொண்டிருந்தேன் என்ற அர்த்தத்தை அவர் ஏற்படுத்தி விட்டார். பராக் ஒபாமா அதிபராக இருந்த காலத்தில் 2009 முதல் 2017 வரையில் துணை அதிபராக பைடன் இருந்தார். 2009ல் பராக் ஒபாமா அதிபராக இருந்த காலத்தில் இவர் துணை அதிபராக இருந்தார். பொருளாதாரத்தில் ``நாம் தவறாகப் போவதற்கு 30 சதவீத வாய்ப்புகள் உள்ளன" என்று அப்போது பைடன் கூறினார். முதலாவது கருப்பர் இன அதிபருடன் சேர்ந்து போட்டியிட இவர் தேர்வு செய்யப்பட்டதே அதிர்ஷ்டமான விஷயம்.` ஆப்பிரிக்க — அமெரிக்கர்களில் தெளிவாகப் பேசும், பளிச்சென்று, சுத்தமாக, நல்ல தோற்றம் உள்ள முதலாவது முக்கிய நபராக இருக்கிறார்" என்று ஒபாமா பற்றி கூறியதன் பிறகும்

அவருக்கு அந்த வாய்ப்பு தரப்பட்டது. இந்த கருத்துக்குப் பிறகும், இப்போதைய வேட்பாளர் தேர்வுக்கான வாக்கெடுப்பில் பைடனுக்கு ஆதரவாக கருப்பர் இன வாக்காளர்கள் அதிகமாக வாக்களித்தனர். ஆனால் சார்லமேக்னே தா காட் என்ற கருப்பர் வானொலி நிகழ்ச்சியாளரின் சந்திக்கும்போது பைடன் சௌகரியமாக பேசக் கூடியவரல்ல. ஆனால் அவருடைய பேச்சாற்றலில் கெடுதலான ஒரு பக்கம் இருக்கிறது. அரசியல்வாதிகள் கவனமாக தேர்ந்தெடுத்த வார்த்தைகளில் பேட்டிகள் தரும் தொழில்நுட்பம் நிறைந்த காலத்தில், அவர்



நிகழ்ச்சியில் பங்கேற்ற அவர், ``நீங்கள் என்னை ஆதரிப்பதா அல்லது டிரம்பை ஆதரிப்பதா என்பதை முடிவு செய்வதில் பிரச்சினை இருந்தால், நீங்கள் கருப்பர் கிடையாது'' என்று கூறியது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

அந்த ஒற்றை வரியைக் கொண்டு ஊடகங்களில் சர்ச்சை விவாதங்கள் நடைபெறுகின்றன. இதையடுத்து ஆப்பிரிக்க — அமெரிக்கர்களின் வாக்குகள் தனக்கு தான் கிடைக்கும் என்ற அதீத நம்பிக்கை கொண்டவராக இல்லை என்று பைடனை காட்டுவதற்கு அவருடைய பிரச்சார துறையினர் முயற்சிகள் செய்து வருகின்றனர். ``பிரசாரங்களில் தயாரிப்பு இல்லாமல் பைடன் பேசும் கருத்துகள், எப்படியாவது ஆதரவு வாக்குகள் மாறாமல் தடுத்துவிட வேண்டும் என்ற நோக்கிலேயே உள்ளன'' என்று கடந்த ஆண்டு நியூயார்க் இதழின் செய்தியாளர் ஏன் எழுதினார் என்பதை இப்போது எளிதில் புரிந்து கொள்ளலாம்.

பிரசார அனுபவம் மிக்கவர்

சில அரசியல் வாதிகளைப் போல அல்லாமல், வாக்காளர்களை எதார்த்தமான அரசியல்வாதியாக இருக்கிறார். குழந்தைப் பருவத்தில் கஷ்டப்பட்ட காலத்தின் நினைவுகள் உள்ள நிலையில், அலங்கரிக்கப்பட்ட வார்த்தைகளைத் தேர்வு செய்து பேசுவது தனக்குப் பிடிக்காது என்றும், மனதில் பட்டதைப் பேசுவதாகவும் அவர் கூறுகிறார்.

அமெரிக்காவின் தொழிலாளர்கல் மத்தியில், முன்தயாரிப்பு இல்லாத உரைகள் மூலம் பேசி அவர்களை ஈர்க்கும் திறன் உள்ளவராக பைடன் இருக்கிறார். பிறகு கூட்டத்தில் இறங்கி கை குலுக்குதல், தட்டிக் கொடுத்தல், செல்பிக்கள் எடுத்துக் கொள்வது போன்ற வெள்ளித்திரை நட்சத்திரத்தைப் போன்ற செயல்பாடுகளிலும் ஈடுபடுகிறார். ``தொழிலாளர்களை அரவணைக்கும் வகையில் பேசுகிறார், சில நேரம் உடல் ரீதியாகவும் அணைத்துக் கொள்கிறார்'' என்று அமெரிக்க வெளியுறவுத் துறை முன்னாள் செயலாளர் மற்றும் அதிபர் பதவிக்கான வேட்பாளராக இருந்த ஜான் கெர்ரி நியூயார்க் இதழுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார். ``அவர் மிகவும் தந்திரசாலி அரசியல்வாதி. எல்லாமே உண்மையானவை. எதுவும் நடிப்பு கிடையாது'' என்று அவர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் எந்த அளவுக்கு உணர்வுப்பூர்வமாக இருக்கிறார் என்பது ஒரு பிரச்சனையாக இருக்கிறது.

தன்னுடைய நடத்தை குறித்து பெண்களின் பல புகார்களுக்கு பைடன் ஆளாகியுள்ளார். தன்னுடைய நடத்தை குறித்து பெண்களின் பல புகார்களுக்கு பைடன் ஆளாகியுள்ளார். பைடன் முறைதவறி தொடுதல், கட்டி அணைத்தல் அல்லது முத்தமிடுதல் செயல்களில் ஈடுபட்டார் என்று கடந்த ஆண்டு எட்டு பெண்கள் குற்றஞ் சாட்டினர். பொது நிகழ்ச்சிகளில் பெண்களுக்கு வாழ்த்து சொல்லும் போது பைடன் எந்த அளவுக்கு நெருக்கமாக காட்டிக் கொள்கிறார் என்பது குறித்து அமெரிக்க செய்திச் சேனல்கள் வீடியோக்களை ஒளிபரப்பு செய்தன. சில நேரங்களில் தலைமுடியின் வாசனை தெரியும் அளவுக்கு நெருக்கமாக செல்வதாகவும் காட்சிகள் வெளியாயின.

தன்னுடை கலந்தாடல்களில் ``அதிக கவனம் செலுத்துவதாக" பைடன் உறுதி அளித்தார். இருந்தபோதிலும், 30 ஆண்டுகளுக்கு முன்பு பைடனின் அலுவலகத்தில் உதவியாளராக வேலை பார்த்த காலத்தில், சுவரின் மீது சேர்த்து பிடித்துக் கொண்டு பாலியல் ரீதியாக அத்துமீறி நடந்து கொண்டார் என்று கடந்த மார்ச் மாதம் தாரா ரீடே என்ற பெண்மணி புகார் கூறியுள்ளார். இந்தப் புகாரை பைடன் மறுத்துள்ளார். ``நிச்சயமாக அப்படி நடக்கவில்லை" என்று அவருடைய பிரச்சாரத் துறையினர் கூறியுள்ளனர். அதிபர் டிரம்ப் மீது ஒரு டஜனுக்கும் மேற்பட்ட பெண்கள் இதுபோன்ற பாலியல் அத்துமீறல் புகார்களைக் கூறியுள்ளதை, பைடனின் ஆதரவாளர்கள் சுட்டிக்காட்டுவார்கள். அதற்காக எத்தனை பேர் இப்படி கூறினார்கள் என்ற போட்டியாக இதை வைத்துக் கொள்ள முடியுமா என்று அவர்கள் கேட்கக்கூடும்.

#MeToo இயக்கம் தீவிரம் அடைந்த பிறகு, பெண்களை சமூகம் நம்ப வேண்டும் என்று பைடன் உள்ளிட்ட ஜனநாயகக் கட்சியினர் கூறி வருகின்றனர். எனவே, இந்தப் புகார்களைப் புறக்கணிக்க முயல்வது, இயக்கவாதிகளுக்கு அசௌகர்யமான நிலையை ஏற்படுத்தும். ரீடே சமீபத்தில் அளித்த டி.வி. பேட்டியில், ``என்னைப் பற்றி அவருடைய ஆதரவாளர்கள் மோசமாகப் பேசுகின்றனர், சமூக ஊடகங்களில் கருத்துகள் கூறுகின்றனர்" என்று கூறியுள்ளார்.

``அவராக சொல்லவில்லை. ஆனால் பாதுகாப்பாக இருப்பதாக பிரச்சாரம் செய்வது கபட நாடகமாக உள்ளது — பாதுகாப்பான நிலை கிடையாது" என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தப் புகார்களை பைடனின் ஆதரவு பிரசார அணியினர் மறுத்துள்ளனர்.கடந்த காலத்தில் இது பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது என்றாலும், பைடனின் செயல்பாட்டின் ஸ்டைல் குறித்து அவருடைய ஆதரவாளர்கள் நம்பிக்கையாக உள்ளனர். எளிதில் அணுக முடியாதவராக இல்லாமல், சாதாரண மக்களுடன் கனிவாகப் பழகும் தன்மை, அதிபர் பதவிக்கான தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் முந்தைய வேட்பாளர்கள் சிக்கிக் கொண்ட அதே வலையில் சிக்காமல்

காப்பாற்றும் என்கிறார்கள்.

பைடனுக்கு வாஷிங்டனில் நிறைய அனுபவம் இருக்கிறது. செனட்டில் 3 தசாப்த காலமாக இருந்துள்ளார். ஒபாமா காலத்தில் எட்டு ஆண்டுகள் துணை அதிபராக இருந்துள்ளார். ஆனால் இதுபோன்ற பெரிய பணித் திறன் விவரங்கள் எப்போதும் உதவிகரமாக இருப்பது கிடையாது. அல் கோரே (பிரதிநிதிகள் சபையில் எட்டு ஆண்டுகள், செனட்டில் எட்டு ஆண்டுகள், துணை அதிபராக எட்டு ஆண்டுகள்), ஜான் கெர்ரி (செனட்டில் 28 ஆண்டுகள்), ஹிலாரி கிளின்டன் (முதல் குடிமகளாக எட்டு ஆண்டுகள், செனட்டில் எட்டு ஆண்டுகள்) ஆகியோர், சமீப கால அதிபர் தேர்தல்களில், குறைந்த அனுபவம் கொண்ட குடியரசுக் கட்சி வேட்பாளர்களை தோற்கடிக்க முடியாமல் போனது.

பைடன் அடிமட்ட அளவில் மக்களை ஈர்க்கக் கூடியவர் என்பதால், அதுபோன்ற பின்னடைவு அவருக்கு ஏற்படாது என்று அவரது ஆதரவாளர்கள் நம்புகின்றனர். வாஷிங்டனில் பணியாற்றியவர்களைக் காட்டிலும், வெள்ளை மாளிகையில் புதிதாகக் குடியேறி நிர்வாகத்தை மாற்றக் கூடியவருக்கு வாக்களிப்போம் என்பதை அமெரிக்கர்கள் பல முறை நிரூபித்திருக்கிறார்கள். ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகள் உயர்நிலை அரசியல் ஈடுபாடு கொண்டவர் என்ற நிலையில், பைடன் அதுபோல கூறிக் கொள்வது சாத்தியமற்றது. அவர் நீண்டகாலம் வாஷிங்டனில் இருந்து பணியாற்றியுள்ளார் என்பதை அவருக்கு எதிராகப் பயன்படுத்துவார்கள்.

நீண்ட வரலாறு

கடந்த சில தசாப்தங்களில் ஒவ்வொரு முக்கிய நிகழ்வுகளிலும் பைடன் ஈடுபாடு கொண்டிருக்கிறார் அல்லது அதுபற்றி ஏதாவது கூறியிருக்கிறார். இப்போதைய அரசியல் சூழ்நிலையில், அந்த முடிவுகள் நல்லவையாக பார்க்கப்படாமல் போகலாம். 1970களில், அரசுப் பள்ளிக்கூடங்களில் இன ஒற்றுமையை உருவாக்கும் வகையில், அருகில் உள்ள நகரங்களுக்குப் பேருந்தில் குழந்தைகளை அழைத்துச் செல்லும் நடைமுறைகளை எதிர்த்த பிரிவினைவாதிகளை அவர் ஆதரித்துள்ளார். அவருடைய பிரச்சாரத்தில் அவருக்கு எதிராக இந்த விஷயம் திரும்பத் திரும்ப பயன்படுத்தப் படுகிறது.

பைடன் ``விரும்புதலுக்கு உகந்தவர் அல்ல'' என்று ஒபாமாவின் பாதுகாப்புத் துறை செயலாளர் ராபர்ட் கேட்ஸ் கூறியதை குடியரசுக் கட்சியினர் சுட்டிக்காட்டுவதில் ஆர்வம் காட்டுகின்றனர். ``கடந்த தசாப்தங்களில் ஏறத்தாழ ஒவ்வொரு முக்கியமான அரசியல் கொள்கை மற்றும் தேசிய பாதுகாப்பு விஷயங்களில் அவர் தவறாக செயல்பட்டிருக்கிறார்'' என்று ராபர்ட் கேட்ஸ் கூறியதையும் குடியரசுக் கட்சியினர் சுட்டிக்காட்டுகின்றனர். பிரசாரம் சூடுபிடிக்கும் போது இதுபோல பல விஷயங்களை ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் எதிர்கொள்ள

வேண்டியிருக்கும்.

அதிகாரம், ஊழல் மற்றும் பொய்கள்?

ஹன்டர் வழக்கறிஞராகி, அதிகார வட்டத்தில் செல்வாக்கு செலுத்துபவராக இருந்தார். பின்னர் அவருடைய தனிப்பட்ட வாழ்வு தாறுமாறாகிப் போனது. அவர் போதை மருந்துகள், மது அருந்துவதாகவும், உடைகளைக் களையும் நடனம் நடைபெறும் கிளப்களுக்கு செல்கிறார் என்றும் கூறி அவருடைய முதல் மனைவி விவாகரத்து பெற்றார். கொக்கைன் போதை மருந்து பயன்படுத்தியதாக ஆய்வில் தெரிய வந்ததை அடுத்து அமெரிக்க கடற்படை ரிசர்வ் பிரிவில் இருந்து அவர் நீக்கப்பட்டார். சீனாவைச் சேர்ந்த எரிசக்தி தொழிலதிபர் தனக்கு ஒரு வைரம் கொடுத்ததாக நியூயார்க் இதழுக்கு அளித்த பேட்டியில் அவர் ஒப்புக்கொண்டுள்ளார். அந்தத் தொழிலதிபர் ஊழல் செயலில் ஈடுபட்டதாக பிறகு சீனா விசாரணை நடத்தியது.

தனது தனிப்பட்ட வாழ்க்கையை ஹன்டர் பொதுவான செய்திகளாக்கிவிட்டார் (கடந்த ஆண்டு இரண்டாவது திருமணம் செய்து கொண்டார். ஒரு வாரத்துக்கு முன்பு அந்தப் பெண்ணை அவர் சந்தித்திருந்த நிலையில் திருமணம் நடந்தது.) ஹன்டர் ஏராளமாக பணம் சம்பாதித்தது, அவருடைய தந்தைக்கு எதிரான செய்திகளாக மாறின.

பதவிநீக்க தீர்மானம்

உக்ரைனில் நல்ல சம்பளத்தில் அவர் வேலையில் இருந்தார். ஹன்டர் மீது ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்து அதிபர் டிரம்ப் விசாரிக்கும் நிலை வரை அது சென்றது. அந்தத் தொலைபேசி அழைப்பு டிரம்ப்பை பதவி நீக்கம் செய்வதற்கு அவருக்கு எதிராக சமீபத்தில் பதவி நீக்கத் தீர்மானம் வருவதற்குக் காரணமாக இருந்தது (அது தோல்வி அடைந்துவிட்டது) இந்த அரசியல் குழப்பத்தில் தனக்கு ஈடுபாடு இல்லை என்பதை பைடன் சாதகமாகக் கருதக்கூடும்.

வெளிநாட்டு விவகாரங்கள்

தூதரக உறவில் அனுபவம் மிகுந்தவராக பைடன் கருதப்படுகிறார். எனவே வெளிநாட்டில் ஊழல் புகார் என்பது பைடனுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக இருக்கும். முன்பு இவர் வெளிநாட்டு உறவுகள் செனட் கமிட்டியின் தலைவராக இருந்தார். ``கடந்த 45 ஆண்டுகளில் உலகின் முக்கிய தலைவர்கள் அனைவரையும் சந்தித்திருக்கிறேன்" என்று அவர் பெருமையாக சொல்லியிருக்கிறார். அதிபர் பதவி வகிப்பதற்கான அனுபவம் கொண்டவராக பைடன் இருக்கிறார் என்ற நம்பிக்கையை வாக்காளர்களிடம் ஏற்படுத்துவதாக இது இருக்கும். ஆனால் அந்தத் துறையில் அவருடைய செயல்பாடுகள் எந்த அளவுக்கு வாக்காளர்களை ஈர்க்கும் என்பதை ஊகிப்பது சிரமமான விஷயமாக இருக்கிறது.

அவருடைய அரசியலின் பெரும்பகுதியைப் போல, இதுவும் மிதமான நடுத்தர நிலையிலானதாகவே கருதப்படுகிறது. 1991 வளைகுடா போருக்கு

எதிராக அவர் வாக்களித்தார், 2003ல் இராக்கில் நுழைவதற்கு ஆதரவாக வாக்களித்தார். அதில் அமெரிக்கா ஈடுபட்டதை விமர்சித்தார்.

இயல்பாகவே எச்சரிக்கையுடன் இருக்கும் பைடன், ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்ட சிறப்பு அதிரடிப் படையினரின் தாக்குதல் வேண்டாம் என ஒபாமாவுக்கு ஆலோசனை கூறினார். பைடன் பற்றி அந்த அல்—காய்தா தலைவருக்கு பெரிய எண்ணம் எதுவும் இல்லை என்று தெரிகிறது. சி.ஐ.ஏ. வசப்படுத்தி வெளியிட்ட ஆவணங்களைப் பார்த்தால், ஒபாமாவை குறிவைத்து செயல்படுமாறு தனது கொலைப்படையினருக்கு பின்லேடன் அறிவுறுத்தினாரே தவிர, அப்போது துணை அதிபராக இருந்த பைடன் பற்றி எதுவும் சொல்லவில்லை என்று தெரிகிறது. ``அதிபர் பதவியைக் கையாள பைடன் ஆயத்தமாக இல்லாதவர், அதனால் அமெரிக்காவில் நெருக்கடி ஏற்படும்'' என்று பின்லேடன் கருதியதாகத் தெரிகிறது. போருக்கு எதிரான தீவிர கருத்துகளைக் கொண்ட ஜனநாயகக் கட்சியின் இளம் ஆதரவாளர்களுக்கு பைடனின் கருத்துகள் பிடிக்காமல் போகலாம். பெர்னி சான்டர்ஸ் அல்லது எலிசபெத் வாரென் போன்ற சிந்தனை கொண்டவர்களாக இளைஞர்கள் இருக்கிறார்கள். ஈரானின் ராணுவ ஜெனரல் குவாசிம் சுலைமானி கடந்த ஜனவரி மாதம் டிரோன் விமான தாக்குதல் மூலம் கொல்லப்பட்ட சமயத்தில், அதிபர் ட்ரம்ப் செயலைக் கொண்டாடியவர்களுக்கு, பைடன் போருக்கு எதிரானவராகத் தோன்றுகிறார்.

கொள்கை சார்ந்த அவருடைய திட்டங்கள் அதிகமாக இதுபோலவே இருக்கின்றன. ஜனநாயக கட்சியினரை உற்சாகப்படுத்துவதாக இல்லை. நடுத்தர அளவிலானதாகவே இருக்கின்றன. ஆனால், யாருக்கு வாக்களிப்பது என முடிவு செய்யாத வாக்காளர்களின் ஆதரவைப் பெற்றுவிட முடியும் என்று பைடன் நம்பிக்கை கொண்டிருக்கிறார். நவம்பர் மாதம் மக்கள் ஆர்வத்துடன் வாக்களிக்க வேண்டியதில்லை, அவருக்கு வாக்களித்தால் போதும். வெள்ளை மாளிகைக்கான போட்டியில் அதிபர் டிரம்ப்பை விட 5 முதல் 10 புள்ளிகள் வரை பைடன் முன்னிலையில்

இருப்பதாக வாக்கெடுப்பு முடிவுகள் தொடர்ந்து காட்டி வருகின்றன. ஆனால் நவம்பர் தேர்தலுக்கு இன்னும் நீண்ட அவகாசம் இருக்கிறது. நிச்சயமாக பல கடுமையான களங்களை காண வேண்டியிருக்கும்.

கருப்பு அமெரிக்கர்களுக்கு எதிராக காவல் துறையின் வன்முறைகளைக் கண்டித்து நடந்த போராட்டங்களை ஆதரிப்பதில் இரு வேட்பாளர்களும் மோதிக் கொண்டனர். கொரோனா வைரஸ் தாக்குதலை அரசு கையாண்டது குறித்தும் இருவரும் மாறுபட்ட கருத்துகளைக் கொண்டுள்ளனர். முகக்கவச உறைகள் கூட அரசியல் பிரச்சினையாகியுள்ளது. பைடன் எப்போதும் முகக்கவச உறை அணிந்து கொண்டு வெளியில் செல்லும் படங்கள் வெளியாகின்றன. ஆனால் டிரம்ப் முகக்கவச உறை அணிவதற்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறார்.

சிலநேரங்களில் சிறிய விஷயங்கள் பேசப்படுவது, நற்பெயரை ஏற்படுத்தும் வகையில் பிரச்சாரம் செய்வதைக் காட்டிலும், பெரிய விஷயங்களும் இருக்கும். பைடன் வெற்றி பெற்றால், நீண்ட கால அரசியல் வாழ்விற்கு மகுடம் சூட்டியது போல இருக்கும்; அவர் தோல்வி அடைந்தால், ``அமெரிக்காவின் அதிபராக இருக்கத் தகுதியற்ற முழுமையான நபராக'' மற்றும் ``நம்பகத்தன்மை அற்றவராக'' அவர் கருதும் ஒருவரிடம் வெள்ளை மாளிகையை மேலும் 4 ஆண்டுகளுக்கு ஒப்படைப்பதாக இருக்கும்.

சில ஆண்டுகளுக்கு முன்பு 2016 அதிபர் தேர்தலுக்கான போட்டியில் ஈடுபடுவது பற்றிக் குறிப்பிட்ட பைடன், ``அதிபராக இல்லாமல் மகிழ்ச்சியாக சாக விரும்புகிறேன்'' என்று கூறியுள்ளார். இனிமேலும் அவரால் அப்படி சொல்ல முடியாது.

கருத்துப் ப(ர)டம்



சொல்றாங்க...

"2009—ம் ஆண்டு என் வாழ்க்கையின் மகிழ்ச்சியான நாள் எனக் கூறியது ஏன்? இலங்கைத் தமிழனாக பிறந்தது என் தவறா?"

முரளிதரன்

(வேலியில் போன ஓணானை வேட்டியில் எடுத்து விட்டுட்டு விளக்கம் வேறயா?)

"நான் தோற்றால் அமெரிக்காவை விட்டு வெளியேற வேண்டியிருக்கும்": ட்ரம்ப்

(அதைத்தான் அமெரிக்கா விரும்புகிறது என்றால், தேர்தல் முடிவிலும் அது தானே வெளிப்படும்!)

"தமிழக மக்களுக்கு இலவசமாக கரோனா தடுப்பூசி"

கே.பழனிச்சாமி

(மூன்று நாளில் கரோனா ஓடிவிடும் என்ற விஞ்ஞானியே! கண்டுபிடித்த மருந்தை உடனே உலக சுகாதார மையத்துக்குக் அனுப்புங்க! அடுத்த நோபல் பரிசு உங்களுக்குத்தான்!)

"இங்கிலாந்தில் விடுதலைப் புலிகள் மீதான தடை தொடர வேண்டும்"

ராஜபக்சே

(இன்னுமா இந்த மனிதருக்கு உதறல் போகலே! இந்தப் பயத்தை வைச்சுக்கிட்டுத்தான் ஊரெல்லாம் பல்லைக் காட்டி உளறுறாரா?)

மாற்றம்

இலங்கை அரசியலமைப்பின் 20ஆவது திருத்தம்

இலங்கை அரசியலமைப்பில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தத்திற்கு எதிராக எதிர்க் கட்சிகள் மற்றும் இலங்கை மக்கள் பலர் உயர்நீதிமன்றத்தை நாடியுள்ளனர். அரசியலமைப்பின் 20ஆவது திருத்த சட்டமூலம், நாடாளுமன்றத்தில் சமீபத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், அந்த சட்டமூலத்திற்கு எதிராக எதிர்கட்சிகள் மற்றும் தனி நபர்கள் என பலரும் உயர்நீதிமன்றத்தை நாடியுள்ளனர். 1978ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட இலங்கை அரசியலமைப்பில் அதிகாரங்களை குறைத்தல், சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு அதிகாரங்களை வழங்குதல் உள்ளிட்ட முக்கிய சரத்துக்களை உள்ளடக்கிய வகையில் 19ஆவது திருத்தம் கடந்த ஆட்சியாளர்களினால் கொண்டு வரப்பட்டது.

எனினும், 19ஆவது திருத்தத்தின் மூலம் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு பல்வேறு தடைகள் காணப்படுவதாக தெரிவித்து, கோத்தாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் 20ஆவது திருத்த சட்டமூலத்தை கொண்டு வந்துள்ளது. இந்த சட்டமூலத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கிய நிலையில், அது தற்போது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த

இதுவரை 19 திருத்தங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இந்த நிலையில், நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கு காணப்படுகின்ற மனுக்களில் பிரதிவாதியாக, சட்ட மாஅதிபர் பெயரிடப்பட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்ஜித் மத்துமபண்டார, மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையத்தின் நிறைவேற்று பணிப்பாளர் கலாநிதி பாக்கியஜோதி

ஏமாற்றம்

சரவணமுத்து, முன்னாள் ஆளுநரும் கெபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளருமான கீர்த்தி தென்னக்கோன், ட்ரான்பெரன்ஸி இன்டர்நெஷனல் இலங்கை அமைப்பு, மனித உரிமை செயற்பாட்டாளரான கீம் அப்துல் சனுத், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எஸ்.சி.சி.இளங்கோவன் ஆகியோர் மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

அத்துடன், இலங்கை பிரஜைகள் என்ற

ரீதியில் அனில் காரியவசம், நாகானந்த கொடிதுவக்கு, மரின் லொஹினி பெர்ணான்டோ, லக்மால் ஜயகொடி ஆகியோரும் மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.அரசாங்கத்தினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அரசியலமைப்பின் 20ஆவது திருத்த சட்டமூலத்தில் உள்ளடங்கியுள்ள சரத்துக்களினால், இலங்கை அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மீறப்படுவதாக உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

அதனால், 20ஆவது திருத்த சட்டமூலம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் மாத்திரம் நிறைவேற்ற முடியாது என்ற வகையில் தீர்ப்பை வழங்க வேண்டும் என மனுதாரர்கள் உயர்நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறிப்பாக 20ஆவது திருத்த சட்டமூலம் தொடர்பில் மக்கள் வாக்கெடுப்பொன்றை

நடத்தி, அதனூடாகவே 20ஆவது திருத்த சட்டமூலம் நிறைவேற்றப்பட வேண்டும் என உத்தரவு பிறப்பிக்குமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த நிலையில், புதிதாக முன்மொழியப்பட்டுள்ள திருத்தம், நாட்டின் எதிர்காலத்தின் மீது எத்தகைய விளைவுகளை கொண்டுவரும் என்று இலங்கை மற்றும் வெளிநாடுகளிலில் கவலைகள் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் பல முக்கிய அம்சங்கள் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், ஏற்கனவே பலமாக உள்ள இலங்கை அதிபரின் அதிகாரத்தை மேலும் கூட்டும் வகையிலும், தன்னாட்சி ஆணையங்களின் அதிகாரங்களை பாதிக்கும் வகையிலும் இந்த சட்டதிருத்தத்தில் உள்ள விஷயங்கள் முக்கிய கவனம் பெற்றுள்ளன.

அரசியலமைப்பில் மேற்கொள்ளப்படும் புதிய திருத்தத்துக்கு எதிராக எதிர்கட்சிகள்,ஐக்கிய நாடுகள்

சபை மற்றும் அரசு சாரா அமைப்புகள் தொடர்ந்து குரல் எழுப்பி வருகின்றன. ஆளும் இலங்கை பொதுஜன பெரமுன அரசின் கூட்டணியில் உள்ள கட்சிகள், இந்த திருத்தம் குறித்து கவலை தெரிவித்துள்ளதோடு, கையெழுத்திடப்பட்டுள்ள முதல் வரைவு பரிசீலனை செய்யப்பட வேண்டும் என கோரியுள்ளன.

புதிய திருத்தம் என்ன சொல்கிறது?

இது குறித்து செய்தி வெளியிட்டுள்ள, தனியாரால் நடத்தப்படும், ஆங்கில நாளிதழான எஃப்டி, "இந்த சட்டதிருத்தம், அதிபரின் பழைய நிர்வாக அதிகாரங்களை மீண்டும் கொண்டு வருவதுடன், அரசியலமைப்பு கவுன்சிலுக்கு பதிலாக வலுவிழந்த நாடாளுமன்ற கவுன்சிலை உருவாக்க வகை செய்கிறது. இரட்டை குடியுரிமை பெற்றவர்கள், நாடாளுமன்ற உறுப்பினராகவும், அமைச்சரவையில் கேபினட் அமைச்சர்கள், துணை அமைச்சர்கள் எத்தனை பேர் இருக்க வேண்டும் என்ற கட்டுப்பாட்டை விலக்கிக்கொள்ளவும் அது வகை செய்கிறது" என அந்த நாளிதழ் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிங்கள நாளிதழான மவுபிமா, "புதிய திருத்தம் மூலம் நாடாளுமன்றத்துக்கு தேர்தல் நடந்த ஒரே ஆண்டிலேயே நாடாளுமன்றத்தை கலைப்பதற்கான அதிகாரம் அதிபருக்கு உள்ளது என்றும், முன்பு போல நான்கரை ஆண்டுகள் கட்டாயமாக காத்திருக்க வேண்டிய தேவை இல்லை" என்றும் கூறியுள்ளது. 19ஆவது அரசியலமைப்பில் கொண்டு வரப்பட்ட சில அம்சங்கள் இதிலும் தொடர்கின்றன. அதிபர் பொறுப்பிற்கு வருபவரால் இரண்டு முறை மட்டுமே பதவியில் இருக்க முடியும் என்பன போன்ற அம்சங்கள் புதிய வரைவிலும் இடம் பெற்றுள்ளன.

சுயாதீன ஆணையங்கள் செயல்பட அனுமதிக்கப்படும் அதே சமயம், தணிக்கை சேவை ஆணையம், தேசிய கொள்முதல் ஆணையம் ஆகியவற்றை நீக்க 20ஆவது திருத்தம் வகை செய்கிறது. புதிதாக பரிந்துரைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற கவுன்சில், மனித உரிமைகள் ஆணையம், தேர்தல் ஆணையம் உள்ளிட்ட தன்னாட்சி ஆணையங்களுக்கான தலைவர்கள் தேர்வு செய்யப்படுவது குறித்த முடிவுகளை மேற்பார்வை செய்யும். ஆனால், முன்புள்ள அரசியலமைப்பை போல இல்லாமல், அரசியலமைப்பு கவுன்சில், நாடாளுமன்ற கவுன்சில் ஆகிய இரண்டிலுமே நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே அங்கம் வகிப்பர். இந்த சட்டசதிருத்தம் என்பது அரசியலமைப்பை மாற்றி அமைப்பதற்கான ஒரு ஆரம்பமாகவே அரசும் பார்க்கிறது. அரசால் நடத்தப்படும் தமிழ் நாளிதழான தினகரனில் செப்டம்பர் 15ஆம் தேதி வெளியான செய்தியில், இந்த திருத்தம் என்பது, நாட்டில் அரசியலமைப்பை மாற்றி அமைப்பதற்கான 'முதல்படி' என்று இலங்கையின் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

திருத்தத்தை யார் எதிர்க்கிறார்கள்?

புதிய திருத்தம், ஜனநாயகத்திற்கு எதிராக

அமையும் என எதிர்கட்சிகளை சேர்ந்த பல அரசியல்வாதிகள் தெரிவிக்கின்றனர்.தமிழ் தேசிய கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ம. சுமந்திரன், புதிதாக பரிந்துரைக்கப்படும் இந்த திருத்தம், அனைத்து அதிகாரங்களையும் கொண்ட ஒரு அதிபரை உருவாக்கும் என்று கடந்த செப்டம்பர் 6ஆம் தேதி எச்சரிக்கை விடுத்தார்

அவரின் கருத்துகளை குறிப்பிட்டுள்ள "தி டெய்லி மிரர்" நாளிதழ்,"நாட்டின் மேம்பாட்டிற்காக உழைக்கும் சக்திகளோடு இணைந்து, நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேவும் இந்த சட்டத்திற்கு எதிராக நாங்கள் அயராது போராடுவோம்." என்று அவர் கூறியதாக தெரிவித்துள்ளது. பல தன்னார்வலர் தொண்டு நிறுவனங்கள் மற்றும் சமூக குழுக்களும்கூட இது குறித்து கவலை தெரிவித்துள்ளன.இலங்கை நாடாளுமன்றத்தில் அரசியலமைப்பின் 20ஆவது திருத்தம், மூன்றில் இரண்டுக்கும் அதிகமான பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்ட நிலையில், அதற்கு எதிர்கட்சியினரும் ஆதரவாக வாக்களித்திருக்கும் தகவல் தெரிய வந்துள்ளது.

மொத்தம் 156 வாக்குகள் திருத்தத்துக்கு ஆதரவாக கிடைத்தன. எதிராக 65 உறுப்பினர்கள் வாக்களித்திருந்தனர். ஆளும் பொதுஜன பெரமுன கட்சியினதும், அதன் பங்காளிக் கட்சிகளினதும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் — மேற்படி திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்தார்கள். அதேவேளை எதிரணியிலிருந்தும் இந்த திருத்தத்துக்கு ஆதரவாக 8 வாக்குகள் கிடைத்தன. 5 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 4 உறுப்பினர்கள், இந்த திருத்தை ஆதரித்து வாக்களித்தனர். அந்தக் கட்சியின் தலைவர் ரஊப் ஹக்கீம் மட்டுமே திருத்தத்தை எதிர்த்து வாக்களித்தார்.

எதிர்கட்சிகள் குற்றம்சாட்டு

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இளைய சகோதரர் பஷில் ராஜபக்ஷவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வழங்குவதற்காகவே, 20ஆவது திருத்தத்தில் இரட்டைப் பிரஜாவுரிமை ஷரத்து சேர்க்கப்பட்டுள்ளதாக, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுர குமார திஸாநாயக்க நாடாளுமன்றத்தில் நடந்த 20ஆவது திருத்தம் மீதான விவாதத்தில் பங்கேற்றபோது குற்றம்சாட்டினார். பஷில் ராஜபக்ஷ, அமெரிக்கா மற்றும் இலங்கை பிரஜாவுரிமைகளை தற்போது கொண்டிருக்கிறார்.

எதிர்ப்பு ஏன்?

ஜனாதிபதிக்குரிய அதிகாரங்களை மிக அதிகளவில் அதிகரித்துக் கொள்ளும் வகையில் அமைந்துள்ள மேற்படி 20ஆவது திருத்தத்துக்கு, தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தும் வகையில், நேற்றைய தினம் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், அந்தக் கட்சியின் பங்காளிக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் 20க்கு எதிரான வாசகங்கள் எழுதப்பட்ட பட்டிகளை கைகளிலும், மார்பில் ஸ்டிக்கர்களையும் அணிந்திருந்தார்கள். அவர்கள் அணிந்திருந்த முகக் கவசங்களிலும் 20ஆவது திருத்தத்துக்கு எதிரான வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன.

இவ்வாறு 20ஆவது திருத்தத்துக்கு எதிரான வாசகத்தைக் கொண்ட கைப்பட்டியினை சபையில் அணிந்திருந்த முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக், வாக்கெடுப்பு நடவடிக்கையின் போது, இருபதாவது திருத்தத்துக்கு ஆதரவளித்தமை குறிப்பிடத்தக்கது.

மீண்டும்

மீண்டும் நியூசிலாந்து பிரதமர்

கிரைஸ்ட் சர்ச் தீவிரவாத தாக்குதல், எரிமலைச் சீற்றம், இப்போது கொரோனா தொற்று என அனைத்திலும் நியூசிலாந்து நாட்டை வழிநடத்தி சென்ற ஜெசிந்தா ஆர்டெர்ன் அந்நாட்டின் பிரதமராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு தனது முதல் குழந்தையை பெற்றெடுத்த ஜெசிந்தாவை பார்த்து, உங்களால் தாயாக இருந்துகொண்டு, பொது வாழ்விலும் வென்று காட்ட முடியுமா என்று கேட்கப்பட்டது. இப்போது அந்தக் கேள்வியே நகைப்புள்ளாகி இருக்கிறது.

ஜெசிந்தா ஆர்டெர்ன் தலைமையிலான தொழிலாளர் கட்சி அந்த நாட்டில் நடந்த பொதுத் தேர்தலில் 120 இடங்களில் 60க்கும் மேலான இடங்களைப் பெற்று பெரும்பான்மை வெற்றியைப் பெற்றுள்ளது. நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் பதிவான வாக்குகள் பெரும்பாலும் எண்ணப்பட்டுவிட்ட நிலையில், ஜெசிந்தாவின் தொழிலாளர் கட்சி 49 சதவீத வாக்குகளை பெற்றுள்ளது. இதன் மூலம், நியூசிலாந்து நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையுடன் இவர் மீண்டும் ஆட்சியமைக்கிறார்.

கடந்த செப்டம்பர் நடந்திருக்க வேண்டிய இந்த பொதுத்தேர்தல் கொரோனா வைரஸ் நோய்த் தொற்று பரவலின் காரணமாக ஒத்திவைக்கப் பட்டிருந்தது. 1980ஆம் ஆண்டு ஹேமில்டனில் பிறந்த ஜெசிந்தா, தன்னுடைய குழந்தை பருவத்தை சிறு கிராமப்புற பகுதிகளில் கழித்தார். அவருடைய தந்தை காவல்துறை அதிகாரியாக இருந்தார். அவரது தாய் பள்ளிகளில் சமையலர் பணி செய்து வந்தார்.

சிறு கிராமங்களில் அவர் பார்த்து வளர்ந்த வறுமை, அவரது அரசியல் சிந்தாந்தத்தை வடிவமைத்தது. தனது 17 வயதில் தொழிலாளர் கட்சியின் ஆதரவாளரானார் ஜெசிந்தா. அரசியல் மற்றும் பொது தொடர்புத் துறையில் பட்டம் பெற்ற அவர், அப்போதைய பிரதமர் ஹெலன் கிளர்க்கிடம் பணிபுரிய தொடங்கினார். 2006ல் பிரிட்டர் கேபினட் அலுவலகத்துக்காக பணிபுரிந்தார். பின்னர் 2008ஆம் ஆண்டு நியூசிலாந்து திரும்பிய அவர், நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது குழந்தை வறுமை ஒழிப்பு, ஒருபாலினத்தவர்களின் உரிமைகள் தொடர்பான சட்ட மசோத்தக்களை ஆதரித்தார். 2017ஆம் ஆண்டு நியூசிலாந்து தேர்தல்

நடக்கவிருந்த ஏழு வாரங்களுக்கு முன்புதான் ஜெசிந்தா தொழிலாளர் கட்சியின் தலைவரானார். அப்போது அவர் வெற்றிபெற வாய்ப்பு குறைவு என்றே கூறப்பட்டது. அவருக்கு பெரும்பான்மை கிடைக்கவில்லை என்றாலும், அந்நாட்டின் தேசியவாத கட்சியுடன் இணைந்து ஆட்சி அமைத்தார் ஜெசிந்தா. அதனைத் தொடர்ந்து அவர் பிரதமராக இருக்கும்போது குழந்தை

பெற்றுக் கொண்டது, உலகத்தை அவர் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்தது. குழந்தை பெற்றெடுத்த ஆறு வாரங்களில் ஜெசிந்தா பணிக்கு திரும்பினார்.

"நான் ஒன்றும் 'சூப்பர் உமன்' அல்ல, என் கணவர் வீட்டில் இருந்து குழந்தையை பார்த்துக் கொள்வதால் மட்டுமே என்னால் பணியைப் பார்க்க முடிகிறது. நானும் சாதாரண பெண்தான். எனக்கு சூப்பர் உமன் போன்ற தோற்றம் தேவையில்லை. பெண்கள் எல்லாம் அப்படி இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருக்கக்கூடாது," என்று 2018ஆம் ஆண்டு த ஃபினான்சியல் டைம்ஸ் பத்திரிகைக்கு பேட்டியளித்த ஜெசிந்தா தெரிவித்திருந்தார்.

2019ஆம் ஆண்டு கிரைஸ்ட்சர்ச் தீவிரவாத தாக்குதல் சம்பவத்தை அவர் அணுகிய விதம், ஜெசிந்தாவை வலிமையான, அதே நேரத்தில் இரக்கமுள்ள தலைவராக உலக அரங்கில் பதிவு செய்தது. கொலை யாளியின் பெயரைக்கூட வெளிப் படையாகக் கூற மறுத்த ஜெசிந்தா, அவர் நியூசிலாந்து மக்களை பிரதிநிதித்துவப் படுத்தவில்லை என்றும், அவரை அந்நாடு

ஏற்காது என்றும் தெரிவித்தார். அடுத்த ஒரு சில நாட்களில் அந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவரது உறவினர்களுக்கு நேரில் சென்று ஆறுதல் கூறினார். அதோடு, அந்நாட்டின் துப்பாக்கி வைத்திருத்தல் தொடர்பான சட்டங்களை மாற்றி அமைத்தார். இதனால், அமெரிக்கா போன்ற நாடுகளிலும் துப்பாக்கிச் சட்டங்களை மாற்ற வேண்டும் என்ற குரல் எழுந்தது.

பின்னர் 2019ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், அந்நாட்டில் எரிமலைச் சீற்றம் சம்பவம் நிகழ, அதில் ஆஸ்திரேலியா, அமெரிக்க நாட்டினர் உள்பட 17 பேர் உயிரிழந்தனர். அப்போதும் ஜெசிந்தா தனது பொறுப்பை சரியாக செய்தார் என்று பாரட்டப்பட்டது. அதற்கு அடுத்து வந்த கொரோனா பெருந்தொற்றை நியூசிலாந்து கையாண்ட விதத்திற்கு உலகளவில் ஜெசிந்தாவுக்கு பாராட்டுகள் குவிந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்

தமிழக கோயில்கள்: பண்பாட்டுப் பெருமிதத்தின் உச்சம்

உலகில் உள்ள பழமையான வழிபாட்டுத் தலங்களில் பெரும்பாலானவை, மிகச் சிறப்பான, வியக்கத்தக்க கட்டுமான அமைப்பைக் கொண்டவை. இந்தியாவிலும் இப்படி வழிபாட்டுத் தலங்கள் உண்டு என்றாலும், தமிழ்நாட்டில் உள்ள பெருங்கோயில்கள் தனித்துவம் மிக்கவை. தமிழர் கட்டடக் கலை வளர்ச்சியின் உச்சத்தைக் காட்டுபவை.

ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் ஒரு கோவில் கட்டடக் கலை மரபு உண்டு. அதேபோல தமிழகத்திற்கும் இதுபோன்ற மரபு உண்டு. இந்தியாவில் கிடைக்கக்கூடிய 80 விழுக்காடு கல்வெட்டுகள் தமிழக கோயில்களில்தான் கிடைத்திருக்கின்றன. ஒருவகையில் இவை இறைவனை வழிபடும் இடங்கள் மட்டும் அல்ல. அந்தக்கால அருங்காட்சியங்களும்கூட. தமிழ் மக்களின் கலாசாரம், பண்பாடு, வாழ்கை முறை ஆகியவற்றை தமிழகக் கோயில்களில் தொடர்ந்து பிரதிபலித்து வந்திருக்கின்றன. தமிழில் சங்க காலப் பாடல்களிலேயே கோயில்களைப் பற்றிய குறிப்புகள் உண்டு.

"நூலறி புலவர் நுண்ணிதில் கயிறிட்டுத்
தேளங் கொண்டு தெய்வம் நோக்கிப்
பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்து"
—என நெடுநல் வாடையில் கோவில் குறித்து குறிப்பிடப்படுகிறது.தமிழ்நாட்டில் பல்லவ மன்னனான மகேந்திர வர்ம பல்லவனின் காலத்திற்குப் பின்பு கட்டப்பட்ட கோவில்களே தற்போது கிடைக்கின்றன என்றாலும் அவரது காலத்திற்கு முன்பும் கோயில்கள் உண்டு.

அவை அழியக்கூடிய பொருட்களால் கட்டப்பட்டதால் காலத்தால் அழிந்து போயின. காவிரி பூம்பட்டினத்தில் இருந்த பல்லவனீச்வரம் என்ற கோயில் இம்மாதிரி செங்கலால் கட்டப்பட்டு அழிந்த கோவில் என சுட்டிக்காட்டுகிறார் மயிலை சீனி. வேங்கடசாமி.

மகேந்திரவர்மப் பல்லவனின் காலத்தில்தான் கருங்கற்களைக் குடைந்து கோவில்களை அமைப்பது துவங்கியது. மகேந்திரவர்மன் இம்மாதிரி குகைக்கோவில்களைத் தவிர பிற கோவில்களை அமைத்திருந்தாலும் அவை பிற்காலத்தில் அழிந்துபோயின. அவன் அமைத்த குடவரைக் கோயில்கள் மட்டுமே எஞ்சி

தமிழே

நின்றன. மகேந்திரவர்ம பல்லவன் மட்டுமல்லாது அவனுக்குப் பின்னால் வந்த பல மன்னர்களும் குடவரைக் கோயில்களை உருவாக்கினர். தமிழ்நாட்டில் இதுபோல 45க்கும் மேற்பட்ட குடைவரைக் கோயில்கள் இப்போதும் உள்ளன. மகேந்திரவர்மப் பல்லவனைப் பொருத்தவரை அவனுடைய கோயில்களில் விமானங்கள் போன்றவை கிடையாது.

அவனுடைய மகனான நரசிம்மவர்மனே கருவறை, முன் மண்டபம், விமானம் ஆகியவற்றுடன் கூடிய குடைவரைக் கோயில்களை உருவாக்க ஆரம்பித்தான். இதற்குப் பிறகு ராஜசிம்மன் காலத்தில்தான் கற்களை ஒன்றின் மீது ஒன்றாக அமைத்து கட்டும் 'கற்றளி' என்ற வகையிலான கோவில்கள் தமிழகத்தில் கட்டப்பட ஆரம்பித்தன.

"கோயில் கட்டடக் கலைகளில் நாகரம்,வேசரம், திராவிடம் மூன்று விதங்கள் உண்டு. வட

முரளிதரன் காசி விஸ்வநாதன்

இந்தியாவிலும் மத்திய இந்தியப் பகுதியிலும் தற்போது உள்ள கோவில்கள் நாகரம் என்ற பாணியில் கட்டப்பட்டவை. திராவிட கட்டடக் கலையின் அடிப்படையில் அமைந்த கோயில்கள், பெரும்பாலும் தமிழகத்தில் அமைந்துள்ளன. இந்தத் திராவிட கோயில் கட்டடக் கலையில் ஒரு முக்கியமான அம்சம் இருக்கிறது. அதாவது, 'எங்கே நீ கோயிலைக் கட்டுகிறாயோ அதற்கேற்றபடி

மூலப்பொருளையும் கட்டுமானங்களையும் மாற்றிக்கொள்' என்பதுதான் இதன் அடிப்படை" என்கிறார் மாமல்லபுரம் அரசு கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியின் முதல்வரான டாக்டர் ஜே. ராஜேந்திரன். நம்முடைய பழங்காலக் கோயில்கள் மிகுந்த நுண்ணுணர்வுடன், நீண்ட காலம் நிலைத்திருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் கட்டப்பட்டவை. பல தொழில்நுட்பங்களை உள்ளடக்கியவை. "தமிழக கோயில்களில் அகச்சுவருக்கும் புறச்சுவருக்கும் இடையே இடைவெளி விட்டு கட்டும் தொழில்நுட்பம் இருந்தது. இந்தத் தொழில்நுட்பம்தான் எகிப்தில் பிரமிடுகளைக் கட்டுவதிலும் பயன்பட்டது. கீழடியிலும் இதுபோல கட்டமைப்பு கண்டுபிடிக்கப்பட்டது, கைலாசநாதர் கோயிலும் இதுபோலத்தான் சுவர்கள் இருக்கின்றன. இதனால், கர்ப்பகிரகத்தின் வெப்ப நிலை மாறாமல் இருக்கும்" என்று சுட்டிக்காட்டுகிறார் ராஜேந்திரன்.

மதுரை மீனாட்சி அம்மன் கோயில்

இந்திய கோயில்களில் தமிழ்நாட்டு கோயில்களை வேறுபடுத்திக் காட்டுபவைகளில் மிகவும் முக்கியமானவை அதன் கோபுரங்கள். கோபுரங்களைப் பொருத்தவரை, ஊரில் எங்கிருந்து பார்த்தாலும் கோயில் தெரிய வேண்டும் என்பதற்காக உயரமாகக் கட்டப்பட்டன. பல்லவர் காலத்திலும் சோழர் காலத்திலும் கட்டப்பட்ட கோயில்களில் கோபுரங்கள் உயரமானவையாக அமைக்கப் படவில்லை. மாறாக, கர்ப்பகிரகங்களுக்கு மேல் அமைக்கப்படும் விமானங்கள்தான் உயரமாக அமைக்கப்பட்டன. மாமல்லபுரம் கடற்கரைக் கோயில், தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயம், கங்கை கொண்ட சோழபுரம் போன்றவற்றில் பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டிருப்பவை கோபுரங்கள் அல்ல; விமானங்கள்தான்.

பிற்கால பாண்டியர்களின் ஆட்சிக்காலத்தில்தான் விமானங்களை உயரமாக அமைப்பது குறைந்து கோபுரங்களை உயரமாக கட்டி எழுப்புவது துவங்கியது. இதற்குக் காரணம் இருக்கிறது. மூலவர் அமைந்துள்ள கருவறையைக் கட்டி, அதற்கு மேல் விமானமும் அமைக்கப்பட்டுவிட்டால், அதில் மாற்றங்கள் ஏதும் செய்ய முடியாது. ஆகவே பின்னால் வந்த அரசர்கள், மூலவரின் சன்னிதியைச் சுற்றி பிரகாரங்களைக் கட்டி, அவற்றில் கோபுரங்களைக் கட்ட ஆரம்பித்தார்கள். அப்படித்தான் கோபுரங்களை பெரிதாக கட்டும் பழக்கம் உருவானது.

தமிழ்நாட்டில் திருவரங்கம், மீனாட்சியம்மன் கோயில் உள்ளிட்ட பல கோயில்களில் பல கோபுரங்கள் உண்டு. இருக்கும் கோபுரத்திலேயே பெரிய கோபுரம் ராஜகோபுரம் என்று அழைக்கப்படுகிறது. தென்னிந்தியாவிலேயே மிகப் பெரிய கோபுரமாக அமைந்திருப்பது திருவரங்கத்தின் ராஜகோபுரம்தான்.

திருவரங்கத்தின் ராஜகோபுரம்

13 நிலைகளுடன் அமைக்கப்பட்ட இந்தக் கோபுரம், தமிழ் கோபுரக் கட்டுமானக் கலையின்

உச்சத்தைக் காட்டுகிறது. தமிழ்நாட்டில் இருப்பதிலேயே பழமையான கோபுரம் காஞ் சிபுரத்தில் உள்ள கைலாசநாதர் கோயில் கோபுரம். ஒரே ஒரு நிலையைக் கொண்ட மிகச் சிறிய கோபுரம் இது.

பல்லவர் காலத்தில் துவக்கம் பெற்ற கோயில் கலை, சோழர் காலத்தில் அதன் உச்சத்தை அடைந்தது. பிற்காலப் பாண்டியர்களின் காலத்தில் கோபுரங்கள் அமைக்கப்பட்டு இந்தக் கோயில்கள் கம்பீரத் தோற்றத்தைப் பெற்றன. இதற்குப் பின்வந்த நாயக்க மன்னர்களின் காலத்தில் கோயில்கள் அளவில் பெரிதாக விரிவடையத் துவங்கின. ஏற்கனவே உள்ள பழைய கோயில்களில் புதிய திருச்சுற்றுகள் சேர்க்கப்பட்டன. புதிய மண்டபங்கள் கட்டப்பட்டன. பிறகு, இவற்றை உள்ளடக்கி புதிய மதில் சுவர்கள் கட்டப்பட்டு கோயில் விரிவாக்கப்பட்டது.

இதற்குப் பிறகு தமிழ்நாட்டில் கோயில் கலையில் பெரிய வளர்ச்சி ஏதும் இல்லை. பல்லவர் காலத்தில் துவங்கிய கோவில் கலை இப்படியாக நாயக்கர் காலத்தில் ஒரு தேக்கத்தை வந்தடைந்தது.

ஆனால், தமிழ்நாட்டில் கோயில்கள் என்பவை வெறும் வழிபாட்டுத் தலங்கள் மட்டுமல்ல; அவை அந்தந்த பகுதிகளின் கலைக்கூடங்கள். பண்பாட்டுச் சின்னங்கள். அப்பகுதி மக்களின் மனநிலையை ஒருங்கிணைக்கும் தொன்மங்கள்.

கவிதை

நன்றி கொரோனா நன்றி!

லஞ்சப் பணத்தின் மூலம் வந்துவிடுவாயோ
என அஞ்சி ஒரு காவல்துறை அதிகாரி
வாங்க மறுக்கிறார்!

பைசாவுக்கு பொறாத சினிமாவுக்கு
குடும்பத்தோடு பார்க்கப் போய்
அஞ்சு ரூபா பாப்கானுக்கு ஐம்பது ரூபாய்
அழவேண்டிய அவசியம் ஏற்படவில்லை...

கிராமங்களில்கூட கரியமிலக் காற்றையே
சுவாசித்து பழகிய நாசிகள்,
ஊரடங்கால் மூலிகைக் காற்றில்
மூச்சுவிட்டுக் கொண்டிருக்கிறது...

வயிற்றை கிழித்து வெளிவரும்
குழந்தைகளின் எண்ணிக்கை குறைய
முள் குத்தியதற்கெல்லாம் ஸ்கேனுக்கு
அறிவுறுத்தும் தனியார் மருத்துவமனைகள்
பல் குத்திக் கொண்டிருக்கின்றன...

அரசாங்கம் தடைசெய்தும் குறையாத
பாலிதீன் பயன்பாடு உன் வருகையால்
கணிசமாய் குறைந்திருக்கிறது!

கல்வி, எதிர் காலம் என பாவ்லா காட்டி
குழந்தைகளை வைத்து பெற்றோர்களிடம்
காசு கறக்கும் கல்வி நிறுவனங்கள்
மாற்றி யோசித்துக் கொண்டிருக்கின்றன...
எப்படி வசூலிக்கலாமென்று!

'ஆன்' செய்த டி.வியை உர்ரென்று பார்த்தே
கொறித்துக் கொண்டிருந்த வீடுகள்
சமைத்து குடும்பத்தோடு ஒன்றாய்
உட்கார்ந்து சிரித்து பரிமாறி
ருசித்துக் கொண்டிருக்கின்றன...
ஒருவழியாய் பச்சிலைக் காய் கனி
கிழங்குகளை உண்ட மூதாதையர்களின்
உன்னதங்கள் உணரத் தொடங்கியிருக்கிறது

கச்சா எண்ணெய் விலை நாள்தோறும்
குறைந்தாலும் எதிர்த் திசையிலேயே
விலைவாசியை செலுத்தும் அரசுகளால்
கட்டுப்படுத்த முடியாத வாகன வெள்ளோட்டம்
தேவைக்கு மட்டும் வெளியில் செல்வது
'நல்லது' என மாறியிருக்கிறது...

எப்போதும் அடுத்த நாடுகளின்
அந்தரங்கங்களிலேயே
மூக்கை நுழைக்கும் வல்லரசு
கொஞ்ச நாள் சொந்த நாட்டின்
மக்களை நினைத்து கண்ணீர் வடிக்கிறது...

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., எதிர்க் கட்சி எம்.எல்.ஏ.,
ஆளும்கட்சி அமைச்சரென —எந்த
அதிகார எல்லையிலும் உன் சமதர்ம
பாரிபாலனம் நடுநடுங்க வைக்கிறது!

விவேகானந்தரும், பாரதியும்
சொன்னதுபோல ஆன்மிக வழியில்
மட்டுமல்ல, மருத்துவ ரீதியாகவும்
நாளைய உலகை
இந்தியா வழிநடத்தும் என்கிற
நம்பிக்கை மிக உறுதியாய்
எங்களுக்குள் விதைக்கப்பட்டிருக்கிறது.

புவனகிரி கல்யாண்

தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
தீபாவளி
HAPPY
Diwali
FESTIVAL OF LIGHTS
வாழ்த்துக்கள்

சரித்திரத் தொடர்

சேரமான் கனவு

6

6. கல்விக்கூடக் கலவரம்

பேரியாற்றில் கரைதளும்ப ஓடும் நீரில் ஆம்பலும், ஆவாரையும், குவளையும் கொன்றையுமாய் மிதந்த எண்ணிலடங்கா மலர்கள் அந்தப் படித்துறையில் ஒதுங்கிக் கிடந்தன.

படித்துறையை ஒட்டியிருந்த சோலையில் இளைஞர்கள் சிறுசிறு குழுக்களாகப் பிரிந்து தேகப்பயிற்சியில் இருந்தனர்.

ஒருபுறம் சிலம்பம் சுழற்றும் 'டண் டண்' எனும் ஓசையும், இன்னொருபுறம் குறிபார்த்து வேலெறியும் 'விர்ர்'ரெனும் ஓசையும், மற்றோர்புறம் வாளும் கட்கமும் ஏந்தித் தாக்கியும் தடுப்பதுமான போர்ப் பயிற்சியில் எழும் 'டணார் டணார்' என்ற சத்தமுமாக 'ஆகா! ஓ!'வெனும் ஆர்ப்பரிப்பும் ஆரவாரத்துடனும் இருந்தது அந்த ஆற்றங்கரைச் சோலை...

அம்மாணவர்கள், வீரர்கள் மேற்கொள்ளும் பயிற்சியில் இருந்தாலும், சாதுக்களைப் போல் காவியுடை தரித்த அவர்களது தோற்றம் சற்று முரணாகவே இருந்தது.

அச்சோலைக்குச் சற்று உள்ளடங்கியிருந்த கல்விச்சாலைக்குள் இருந்து வேகமாய் வெளிப்பட்டார் பரணர்.

பயிற்சி நடக்கும் சோலைக்குள் விறுவிறுவென நுழைந்த பரணரைக் கண்டதும் இளைஞர்கள் அனைவரும் பயிற்சியை நிறுத்திவிட்டு மிகுந்த பணிவுடன் வணக்கம் தெரிவித்தனர்.

அங்குள்ளவர்களைக் உற்று நோக்கி ஆராய்ந்தபடியே எல்லோருக்குமாகச் சேர்த்து கைகூப்பிவிட்டு, பரணர் கேட்டார். "இங்கே யாராவது வெளியாட்கள் வந்தார்களா?"

இளைஞர்கள் ஒருவருக்கொருவர் முகத்தைப் பார்த்துக் கொண்டு, "இல்லையே" எனத் தலையாட்டினர்.

"உங்களில் யாராவது ஆற்றைக் கடந்து போய் வந்தீர்களா?"

"நிச்சயமாக இல்லை ஐயா!"

உடனே க்கத் தொடங்கினார் வேகமாக ஆற்றங்கரையை நோக்கி நடந்த பரணர். அவரைத் தொடர்ந்து மாணவர்களும் பரபரப்புடன் நடந்தனர். "நமது பாடசாலையருகே சிலர் படகில் வந்து கரையேறுவதைப் பார்த்தேன்." அவரது வார்த்தைகளில் தெரிந்த விறுவிறுப்பு மாணவர்களிடத்திலும் தொற்றிக் கொண்டது.

கொற்றவன்



"எங்கள் பார்வையில் படாமல் இங்கே யாரும் வரமுடியாதே ஐயா!"

"ஆமாம் ஆசானே! நாங்கள் அதிகாலை முதற்கொண்டே பயிற்சியில் இருக்கிறோம்."

"வெளிச்சம் வந்தபின்பு இங்கு யாரும் வந்திருக்க வாய்ப்பில்லை ஐயா!"

"உங்கள் பார்வையில் படாமல் வந்திருக்கலாம் அல்லவா?" என்ற பரணர் ஆற்றங்கரையருகே வந்து நின்று நோட்டமிட்டார்.

வந்தவர்களின் படகைக் காணோம்! ஆற்றில் எந்தப் படகும் திரும்பிச் செல்லவும் காணோம்! இவ்வளவு விரைவாக படகு மாயமானது எப்படி? பரணர் தன் நெற்றியைத் தடவியபடி யோசித்தார்.

"ஆமாம், வில்லவன் எங்கே?"

"அவன் நேற்றிரவு பரதவர் குடியிருப்புக்குச் சென்று தன் நண்பனைப் பார்த்து வருவதாகக் கூறிச் சென்றான்."

"தங்களிடமும் அதுகுறித்து அனுமதி பெற்றுவிட்டதாகச் சொன்னானே! அப்படியானால் தங்களிடம் அதைத் தெரிவிக்கவில்லையா?" என்றவொரு மாணவன் வினாவுடன் தன் நண்பர்களை நோக்கினான்.

"ஆமாம், சொன்னான்.

முன்னிரவுப் பொழுதே வந்துவிடுவதாக அல்லவா வாக்குறுதி தந்தான். இன்னமும் வந்துசேரவில்லையா?"

"இன்னமும் வந்துசேரவில்லை." அதைச் சற்று எள்ளலுடன் கூறினான் ஒருவன்.

பரணர் அங்குள்ள வில்லவன் குடிலைப் பார்த்தார். கதவு வெளியே இழுத்து கட்டப்பட்டு சிலம்பக் கம்பு சொருகப்பட்டிருந்தது.

"ஆசானே! இதைச் சொல்வதற்காக என்னை மன்னிக்க வேண்டும்!" ஒரு மாணவன் அந்த வார்த்தைகளைச் சொல்லிவிட்டு வலக்கையால் வாய்பொத்தியபடி அடுத்து பரணரின் உத்தரவுக்குக் காத்து நின்றான்.

அவனைத் தீர்க்கமாகப் பார்த்த பரணரின் பார்வையில் என்ன சொல்லப் போகிறாய் சொல் சீக்கிரம் என்ற குறிப்பு தெரித்தது. அதை உணர்ந்த அம்மாணவன் விடுவிடுவெனச் சொன்னான்.

“வரவர வில்லவனின் போக்கு அவ்வளவாகச் சரியில்லை!”

அவனைத் தொடர்ந்து இன்னொருவனும் கடகடவென ஒப்பித்தான். “ஆமாம் ஆசானே! சில தினங்களுக்கு முன்பு கூட ஆற்றங்கரையோரம் பேச்சுக்குரல் கேட்டது. யாரென்று பார்த்தால் வில்லவன் மட்டும்தான் இருந்தான்.”



“இதெல்லாம் ஒரு செய்தியா?” எனக் கண்டிப்பதுபோல் கேட்டான் அவனருகில் இருந்தவொரு மாணவன்.

“நான் அவனைப் பார்த்தது நள்ளிரவுப் பொழுதில்! அந்த நேரத்தில் ஆற்றங்கரையில் அவனுக்கென்ன வேலை?”

“அப்படியானால் யோசிக்க வேண்டிய செய்திதான் இது!” என்றான் ஒரு மாணவன்.

“வாயை மூடுங்கள்! இங்கே யாராவது வந்ததைக் கவனித்தீர்களா என்றால் வில்லவனைப் பற்றிப் பேசி நேரத்தை வீணடிக்கிறீர்கள். நான் தெளிவாகப் பார்த்தேன். நமது படித்துறையருகே படகில் சிலர் வந்து கரையேறினார்கள். அதை உங்களில் ஒருவரும் கவனிக்கவில்லை என்கிறீர்கள்.” பரணரின் சினந்த வார்த்தைகளுக்கு அங்கே கனத்த அமைதி நிலவியது. அடுத்து அவரிடம் பேசுவதற்கு அனைவரும் தயங்கியபடி நின்றார்கள்.

“தேடிப்பாருங்கள். கரையோரத்தில் எங்கேனும் படகு தென்படுகிறதா எனப் பாருங்கள்” அவர் உத்தரவிட்ட அடுத்த நொடியே அனைத்து மாணவர்களும் மூட்டைப் பிரிந்த நெல்லிக்கனிகளென தெறித்தோடினர்.

பரணருக்குள் இரண்டு கேள்விகள் உருண்டு திரண்டு எழுந்து நின்றன.

முதல் கேள்வி, இரவே வருவதாகச் சொன்ன வில்லவன் இன்னமும் கல்விச்சாலை திரும்பவில்லை! என்ன ஆயிற்று அவனுக்கு?

இரண்டாவது கேள்வி, பெரியானின் கடையில் இருந்தபடி அவ்வளவு தெளிவாகப் தெரிந்த அப்படகு மாயமானது எப்படி?

படித்துறையில் வந்து நின்ற பரணர், மீண்டும் ஆழமாக ஆற்றங்கரையை ஊடுருவிப் பார்த்தார்.

படகில் வந்தவர்கள் இங்கேதான் வந்தார்களா? அல்லது மாணவர்கள் பயிற்சியில் இருப்பதை அறிந்து, பக்கத்திலிருக்கும் தென்னை மரத் தோப்புக்குள் வந்து கரையேறியிருப்பார்களா?

ஆற்றங்கரையோரம் அடர்ந்திருந்த புன்னையும், வஞ்சியும் அதற்கு இடம் கொடுக்க வாய்ப்பில்லையே!

ஆனாலும், கல்விச்சாலை அருகே யாரோ

வந்தது உண்மை! அந்த உண்மையை இன்றைய பொழுதுக்குள் கண்டுபிடித்தே ஆகவேண்டும் எனத் தீர்மானித்தபடி, யோசனையுடன் படித்துறையருகிலேயே நின்றிருந்தார் பெரும்புலவர் பரணர்.

சிறிது நாழிகைக்கெல்லாம் அங்குமிங்கும் அலசி ஆராய்ந்து விட்டு அங்கே வந்து சேர்ந்த மாணாக்கர் அனைவரும், படகு வழியாக யாரும் அந்தச் சோலைக்குள் நுழைந்ததற்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை என்பதை உறுதியாகத் தெரிவித்தனர்.

பரணர் சில நொடிகள் சிந்தித்துவிட்டு "எங்கோ சிக்கல் இருக்கிறது என்பது மட்டும் திண்ணம்! வேற்றாட்களின் நடமாட்டம் இருக்கிறதா என்பதைக் கவனித்துக் கொள்ளுங்கள்! சரி, எல்லோரும் சென்று அவரவர் வேலைகளைப் பாருங்கள்!" எனக் கட்டளையிட்டார்.



அதைக் கேட்டதும், மாணவர்கள் களைந்து செல்லத் தொடங்கினர்.

பரணர் மட்டும் அங்கேயே நின்று சுழித்தோடும் நீரின் போக்கையும் அதில் துள்ளிக் குதிக்கும் வெண்ணிறக் கெண்டை மீன்களையும் வெறித்தபடி சிந்தனையில் ஆழ்ந்தார்.

அப்பாடசாலையில் ஒவ்வொரு மாணவனுக்கும் தனித்தனியே குடில்கள் இருந்தன. அவரவர் சமைத்துச் சாப்பிட்டு தத்தமது வேலைகளைத் தானே செய்து கொள்ளவே தனிக் குடில் ஏற்பாட்டினைச் செய்திருந்தார் பரணர்.

சிலம்பக் குச்சி சொருகப்பட்டிருக்கும் வில்லவனின் குடிலைக் கடந்த மாணவர்களில் ஒருவன், அக்குடிலுக்கருகில் வந்து நின்று சாருகப்பட்டிருக்கும் குச்சியினை எடுக்க முயன்றான். அதைக் கண்ட இன்னொருவன், "பூட்டிய வீட்டுக்குள் யாரேனும் புகுந்திருக்கிறார்களா என்று பார்க்கும் புத்திசிகாமணியே! இப்படிக் கொஞ்சம் வருகிறீரா?" என்றபடி அவனைக் கைப்பற்றி இழுத்தான்.

"அதில்லையப்பா, குச்சி சரியாகத்தான் சொருகப்பட்டிருக்கிறதா என்றுதான் பார்த்தேன்" என மழுப்பியவாறு நடையைத் தொடர்ந்தான்.

சற்றைக்கெல்லாம் அந்த இடம் வெறிச்சோடியது.

அங்கு நடந்த அனைத்தையும் அந்தக் குடிலின் உள்ளிருந்து கதவிடுக்கின் வழியே உன்னிப்பாக இருந்தான் வில்லவன்

இளைஞர்கள் தன் குடிலைக் கடந்து அகன்றதையும், பரணர் படித்துறை சென்றுவிட்டதையும் உறுதிசெய்து கொண்டு முகம் திரும்பினான்.

"இங்கே குடிலின் கதவருகே வந்த ஒருவன்தான் சற்றுக் கலவரப்படுத்தி விட்டான். நல்லவேளையாகத் தப்பித்தோம்" எனப் புன்னகைத்தான்.

அதைக் கேட்டபடியே அந்த இரண்டு யவன அழகிகளும் அங்குள்ள நாணல்

நாற்காலிகளில் அமர்ந்திருந்தார்கள்.

"எங்களால் தங்களுக்குத்தான் வீண் தொல்லை!" தாலியாவின் குரலில் கவலை வழிந்தது.

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை! இப்படியொரு



வாய்ப்பு கிடைத்ததற்காக கடவுளுக்கு நான்தான் நன்றி சொல்ல வேண்டும்!" என்றவனின் பார்வை தன் கனவுக் கன்னியின் மீதே பதிந்திருந்தது.

"ஏன் உங்கள் தோழி அதிகம் பேசுவதில்லை? சரிவரத் தமிழ் தெரியாததன் காரணமாகவா?"

"இல்லை, அவளுக்கு நன்றாகத் தமிழ்த் தெரியும்! ஆனால், இவ்வளவு இன்னல்களும் தன் காரணமாகவே அமைந்து விட்ட அதிர்ச்சியில்தான் பேசவில்லை என நினைக்கிறேன்."

"நடந்ததை மறந்துவிடுங்கள்! உங்கள் நாட்டுக்கு உங்களைக் கொண்டுபோய் சேர்ப்பது என் பொறுப்பு! அதை நான் வெற்றிகரமாக நிறைவேற்றுவேன். அதுகுறித்து நீங்கள் இருவரும் எள்ளளவும் ஐயம் கொள்ளத் தேவையில்லை! உங்களுக்குத் தேவையான அனைத்துக்கும் நான் ஏற்பாடு செய்கிறேன். கவலைவேண்டாம்! போதுமா?" வில்லவனின் உறுதியான வார்த்தைகள் அவ்விருவருக்கும் நம்பிக்கை தந்தது.

தாலியாவின் கையைப் பற்றி அழுத்தினாள் யவனப் பேரழகி. அவள் சைகையில் எதையோ தன் தோழிக்குத் தெரிவிக்கிறாள் என்பது வில்லவனுக்குப் புரிந்தது.

"தங்கள் தோழி ஏதோ சொல்ல நினைக்கிறாரோ..." தயங்கியபடி வினவினான் வில்லவன்.

"உங்கள் வார்த்தைகளில் நம்பிக்கை இருக்கிறது. எங்களுக்குச் சம்மதம் என்கிறார்." என்றாள் தாலியா.

"தங்கள் தோழியின் பெயர்... இன்னமும்..." என்றவாறே வில்லவன் அந்தப் பேரழகுப் பாவையின் பக்கம் திரும்பினான்.

"இன்னமும் மனதில் பதியவில்லையா?" அந்தக் கேள்வியை யவன சுந்தரியே கேட்பாள் என்று எதிர்பாராத வில்லவனுக்குச் சில கணங்கள் புத்தியே பேதலித்தது போல இருந்தது.

ஆகா!... என்ன இனிமையான குரல்! குயிலும் குழலும் தோற்றுவிடும் இனிமையான குரல்!

அடடா, இவளது செவ்வதரங்கள் வழியே கொஞ்சு தமிழ் கேட்கும்போது நெஞ்சைக் கொத்தாக அள்ளுகிறதே!...

தமிழின் இனிமையை எண்ணிலடங்கா புலவர்கள் பாடும்போதெல்லாம் கூட புத்தியில் பதியாதது, இந்த செங்கனியாள் செப்பும்போது, எவ்வளவு இனிப்பாய் மனத்தில் பதிக்கிறது!

"தியோதாரா!..." அந்தப் பொற்சிற்பமே மீண்டும் மொழி பகன்றாள்.

அந்தப் பெயரை அவளே சொல்வதைக் கேட்கும்போது, வில்லவனுக்குத் தேன் குடித்தது போலிருந்தது.

"தியோதாரா!..." தனக்குள் சொல்லிப் பார்த்துக் கொண்டவனைப் பார்த்து குறுநகை புரிந்தாள் தியோதாரா.

அவளது இளநகை வில்லவனின் நெஞ்சை சுண்டியிழுத்தது. இந்தப் பேரழகு வதனத்தைத்தான் நான் கனவில் கண்டேனென இவர்களிடம் சொன்னால் நம்புவார்களா? இதென்ன புத்தி பேதலித்தத்தனம் என்று இவர்கள் இங்கிருந்து வெளியேறிடவும் வாய்ப்பிருக்கிறது.

தன் தாடையைத் தடவியபடி தரைபார்த்திருந்தவனை தாலியாவின் குரல் குலுக்கியது.

"வீரரே என்ன சிந்தனை?"

ஒன்றுமில்லை என்பதாகத் தலையசைத்தவன் தன் தடுமாற்றத்தைக் காட்டிக் கொள்ளாமல், "உங்களுக்கு என்ன உணவு ஏற்பாடு செய்யலாம் என யோசிக்கிறேன்" எனப் புன்னகைத்தான்.

"என் தோழி சேரநாட்டுக்கு வரவேண்டும் என்ற எண்ணம் கொண்ட நாளிலிருந்து தமிழ்க் கற்றுக் கொண்டிருக்கிறார். அத்துடன் சேரநாட்டு உணவு வகைகளும் எங்களுக்கு பிடித்தமானதுதான்!" தாலியா சொல்ல, அவள் தோளில் செல்லமாய்த் தட்டினாள் தியோதார. நாம் என்ன விருந்தினராகவா வந்திருக்கிறோம் என்ற பார்வையை வீசினாள்.

"தங்கள் தோழி என்ன சொல்ல வருகிறார்?" வில்லவன் வினவ, அதற்கு அழகாக மடைமாற்றி மறுமொழிக் கூறினாள் தாலியா.

"இப்போது உணவா முக்கியம்? எப்போது இங்கிருந்து வெளியேறப் போகிறோம் எனக் கேட்கிறார்."

"இன்று இரவு உங்களை மிகவும் பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் செல்கிறேன். அங்கு சென்றபின் உங்கள் நாட்டுக்கு பயணப்படுவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்துவிடுகிறேன்."

"எங்களுக்காக உயிரைப் பணயம் வைத்த தங்கள் வாக்கை நம்புகிறோம்" என்றாள் தாலியா.

"நன்றி தாலியா! நான் முன்பே சொன்னதுபோல, இங்கே பிறர் பார்வையில் நீங்கள் படக்கூடாது. இக்குடிலைவிட்டு வெளியே வரவேண்டாம்., நாம் புறப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டு

விரைவில் திரும்புகிறேன். அதுவரை எச்சரிக்கையாக இருங்கள்" கூறிய வில்லவன், குடிலின் கதவருகே கண்வைத்து வெளியே நிலவும் சூழலை நோட்டமிட்டான். பின்னர் குடிலின் பக்கவாட்டில் இருந்த ஒரு பலகையை நகர்த்தி குடிலுக்கு வெளியே இருக்கும் ஒரு சிறு புதர் மறைவுக்குத் தாவினான்.

குடிலிலிருந்து வெளியேற இப்படியும் ஒரு வழியா என்று அப்பெண்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்தபடி, வில்லவன் விரைந்த திசையை வெறித்தனர்.

புதரிலிருந்து பேரியாற்றங்கரையை அடைந்த வில்லவன், தண்ணீரைத் தொட்டபடி வளைந்திருந்த ஒரு புன்னை மரக்கிளைக்குத் தாவி அங்கிருந்து ஆற்றில் பாய்ந்தான்.

(கனவு தொடரும்...)

ஆனந்த யோகா

கொற்றவன்

பாரத கண்டம் உலகிற்கு வழங்கிய பெருங்கொடை 'யோகா' எனப்படும் யோகக் கலை!

சமீபகாலமாக யோகக் கலை உலக அளவில் மிகவும் பிரசித்தி பெற்று வருகிறது.

ஒரு அரை நூற்றாண்டுக்கு முன்பு வரை யோகா என்பது பாமர மக்கள் மட்டுமல்ல, படித்தவர்களுமே கூட அதிகம் அறிந்திடாத ஒரு பூடகமான கலையாகவே இருந்து வந்தது. ஆனால் கடந்த 50 ஆண்டுகளில் யோகா அசாத்திய உயரம் எட்டியிருக்கிறது.

தற்போது உலகெங்கும் 'யோகா' என்ற சொல் புழங்கி வருகிறது என்றால், அதன் மகத்துவம் உலகுக்கு தற்போதுதான் புரிபடத் துவங்கியிருக்கிறது என்பது புலனாகிறது. அதுவும் இன்றைய 'பாண்டாமிக்' காலத்தின் நோய்த் தொற்றில் இருந்து தன்னைத் தற்காத்துக்கொள்ள யோகா மிகவும் உதவிகரமாக இருக்கிறது என்பதனை உலகம் உணரத் தொடங்கியிருக்கிறது.

ஒருபுறம் உலகெங்கும் யோகா உயர்வாகப் போற்றிப் புகழப்பட்டு, அதன் அருமை பெருமைகளை உணர்ந்து கொள்கிறார்கள் என்றாலும், இதே நேரம் யோகா ஒரு தொழில்முறை வாய்ப்பாகவும் மாறி, காலப்போக்கில் இது ஒரு உடற்பயிற்சியைப் போல மாறிவிடுமோ என்கிற ஆதங்கமும் எழுகிறது.

இந்தச் சூழலில் யோகாவைத் தனது ஆரம்ப காலம் முதல் இலவசமாக சொல்லிக்கொடுத்து, இளைய தலைமுறையினரை யோகத்தின் பக்கம் திருப்பி அவர்களை நல்வழிப்படுத்தும் உன்னதப் பணியினைத் தனது கடமையாகவே செய்து வரும் யோகாச்சாரியார் திரு.ஆனந்த் அவர்களை 'அய் தமிழ்' இதழுக்காகச் சந்தித்தோம்.

திரு.யோகா ஆனந்த் அவர்கள் வயதானவர்களுக்கு யோகா எப்படி உதவிகரமாக இருக்கிறது என்ற



தலைப்பில் முனைவர் பட்டம் பெற்றவர். எண்ணிலடங்கா எண்ணிக்கையில் யோக சிகிச்சையை அளித்து பெரும்பான்மையான மக்கள் பயன்பெறக் காரணமாய் இருப்பவர். ஆனால் அத்தகைய தனது சாதனைகளையோ, யோகாவில் தான் பெரிய வித்தகர் என்பதையோ பெரிதாய் வெளிப்படுத்திக் கொள்ளாமல் மிகவும் அமைதியாக தான் உண்டு! தன் யோகா உண்டு! என்ற நிலையில் அந்த யோகத்தை தியானம் போல் மேற்கொண்டுவரும் திரு. யோகா ஆனந்த் அவர்களுடனான சந்திப்பே ஒரு யோகம்தான்!

தனக்கு யோகக் கலையின் மீது ஆர்வம் உண்டான தனது இளமைக்கால நினைவுகளில் பேச்சைத் துவங்குகிறார்.

"1970 காலகட்டம். என் தாயாருக்கு அடிக்கடி

கடுமையான முதுகுவலி ஏற்படும். அதற்காக சுமார் 7 ஆண்டுகாலம் அலோபதி மருத்துவம் எடுத்தும், அவரது முதுகு பிரச்சினை தீர்ந்தபாடில்லை! இந்த நேரத்தில் சென்னை திருவல்லிக்கேணியில் டாக்டர் ஜி.நரசிம்மாச்சாரி என்பவர் என் தாயாரைப் பரிசோதித்துப் பார்த்துவிட்டு, "உங்களுக்கான பிரச்சினை அலோபதி மருத்துவத்தை விட யோகாவில் மிகச் சிறப்பாக இருக்கிறது." என்று கூறி அங்கேயே சில ஆசனங்களையும் அவர் செய்து காட்டினார்.

அப்போது எனக்கு ஒரு 12, 13 வயதிருக்கலாம். அந்த ஆசனங்களை என் தாயார் இரண்டு மாதங்கள் செய்தபோது, தன்னுடைய முதுகுவலி பிரச்சினை முற்றிலுமாக தீர்ந்து விட்டதை உணர்ந்தார். அது அவருக்கு மிக ஆச்சரியமாக இருந்தது. அதை விடவும் எனக்கு அந்த இளம் வயதில் மிகமிக ஆச்சரியமாக இருந்தது. என் தாயார் பட்ட வேதனை, அது தீர்ந்த பிறகு கிடைத்த மகிழ்ச்சி இவை இரண்டையும் நேரடியாக நான் உணர்ந்தபோது, இந்த யோகா என்பது என்ன என்ற ஒரு தேடல் என்னுள் எழுந்தது.

இந்தச் சமயத்தில் என்னுடைய தந்தையார் 'ஆனந்த ரகசியம்' என்ற ஒரு புத்தகத்தைக் கொடுத்தார். திரு.சுந்தரம் என்பவர் 1938—ல் எழுதிய புத்தகம் அது. அதைப் படிக்கும்பொழுது யோகா என்பது மிகப்பெரிய உன்னதக் கலை என்பது புரிந்தது. அத்துடன் மனித குலத்துக்கு அது மிகப்பெரிய பயனைத் தரும் என்பதையும் உணரத் தொடங்கினேன். அந்தச் சமயத்தில் யோகாவை முறையாக கற்றுக்கொள்ள வேண்டும் என்று விரும்பியபோது, எனக்கு ஆர்.எஸ்.எஸ் மூலமாக உடல்நிலை கலைகளில் ஆர்வம் பிறந்தது.

அப்போது என்னுடைய கராத்தே மாஸ்டர் ஒருவர் "உன் முகத்தில் கோபம் தெரிகிறது. நீ

தியானம் பயின்றால் இந்த கராத்தே கலை உனக்குச் சிறப்பாகப் பயன்படும்." என்று சொன்னார். எனவே தியானம் கற்றுக் கொள்ள முயற்சித்தபோது, சிறந்த யோகப் பயிற்சிப் பள்ளி எது என்று தேடி கிருஷ்ணமாச்சாரி யோக சாலைக்கு சென்று "தியானம் கற்றுக் கொள்ள வேண்டும்!" என்றேன். முதலில் என்னை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அதை என் மாஸ்டரிடம் சொன்னபோது "அவர்கள் என்ன கற்றுக் கொடுக்கிறார்களோ அதைக் கற்றுக் கொள்!" என்றார்.

மீண்டும் சென்று "இங்கே என்ன கற்றுக்கொடுக்கிறீர்களோ, அதைக் கற்றுக் கொள்கிறேன்!" என்று சொன்னேன். எனக்கு தியானம்தான் வேண்டுமென்று முன்பு சொல்லி இருந்தேன். இப்போது அவர்கள் என்ன கற்றுக் கொடுக்கிறார்களோ அதை நான் கற்றுக் கொள்கிறேன் என்று சொன்ன போது, என்னை ஏற்றுக்கொண்டு பயிற்சி அளித்தார்கள்.

அங்கே யோகா பயில்வது என்பது அவ்வளவு எளிதான காரியமல்ல! ஒரு நூறுபேர் விண்ணப்பித்தால், அந்த 100 பேரில் இறுதி வகுப்புக்கு 30 பேர்தான் செல்ல முடியும். அந்த முப்பது பேரில் ஓரிருவர்தான் தேர்ச்சி அடையமுடியும். அவர்களுடைய பயிற்சிகள் அப்படி இருக்கும். நான் அங்கு சேர்ந்தபோது நூறு பேர் சேர்ந்தார்கள். அதில் 50 பேர் முதல் கட்டத்தில் வெளியேற்றப்பட்டு இறுதியாக 30 பேர் பயிற்சிக்குத் தயாரானார்கள். அந்தப் 30 பேரில் 7 பேர் தான் தேர்வு செய்யப்பட்டார்கள். அந்த ஏழு பேரில் நானும் ஒருவன்! சிறந்த யோகா பயிற்சியை அவர்கள் வழங்கினார்கள்.

அந்தப் பயிற்சிகளை முறையாகக் கற்று 1989 ஆம் ஆண்டு நான் தேர்ச்சி அடைந்தேன். யோகக் கலையைச் சிறப்பாகப் பயின்றதனால், யோகாவை சொல்லிக் கொடுக்கக் கூடிய ஒரு ஆசிரியர் பயிற்சியையும் பெற்றேன். அப்போது 'இங்கே பணியாற்ற முடியுமா?' என்று கேட்டார்கள். அதன்படி நான் சிறிது காலம் அங்கேயே யோகா ஆசிரியராகவும் இருந்தேன்.

எனக்கு கிருஷ்ணமாச்சாரியா யோக சாலையில் பயிற்சி அளித்தவர் திரு.கிருஷ்ணமாச்சாரியா அவர்களின் புதல்வர் திரு.தேசிகாச்சாரியா. அவரிடம் பயிற்சி பெற்றது என் பாக்கியம்! அதுபோல நாங்கள் பயிற்சி நடத்திய இடத்திற்கு திரு. பி.கே.எஸ் அய்யங்கார் அவர்கள் வந்து என்னை வாழ்த்தி இருக்கிறார் என்பதும் எனக்கு கிடைத்த பாக்கியம்! "மிகச் சிறப்பாக செய்கிறாய்" என்று என்னை வாழ்த்தியது எனக்குக் கிடைத்த ஒரு பாக்கியம்!"

கிருஷ்ணமாச்சாரியா யோக சாலையில் பயிற்சி பெற்றபோதுதான் எனக்கு உள்ளபடியே யோகா என்பது என்னவென்றே புரிந்தது. இப்படிப்பட்ட அருமையான ஒரு கலையை நாம் மற்றவர்களுக்கும் சொல்லித்தர வேண்டும் என்ற ஒரு எண்ணம் தோன்றியபோது, பச்சையப்பன் கல்லூரியில் 1992—ல் இலவசமாக நான் யோகா சொல்லிக் கொடுக்கத் தொடங்கினேன். சுமார் 8 ஆண்டுகாலம் அங்கே இலவசமாக பயிற்சி அளித்தேன். அப்போதுதான் நீங்கள் பயிற்சி பெற்றீர்கள் சந்தித்தோம் இல்லையா?" எனக் கேட்கையில் எனக்குள் நினைவுகள் மலர்கின்றன.

அவர் பயிற்சி அளித்த காலத்தில்தான் அவரது மாணவனாக நானும் அங்கு சேர்ந்தேன். அவரிடம் நான் ஒரு மூன்று ஆண்டுகாலம் (1997—2000) யோகா பயின்று வந்தேன். அந்த வகையில் யோகாசன குருவானவரைப் பேட்டி எடுப்பதில் பெரும் மகிழ்ச்சி!

ஆச்சாரியா ஆனந்த அவர்கள் தொடர்கிறார்.

"இந்தச் சமயத்தில் யோகா மூலமாக வருமானம் என்பதை நானும் எதிர்பார்க்கவில்லை! ஆனால் அதிகப்படியான நேரங்களை நான் யோகாவுக்கு ஒதுக்க வேண்டிய ஒரு சூழ்நிலை வந்தது. மாணவர்கள் அதிகமானார்கள். எனவே என்னிடம் பயின்ற சிறந்த மாணவர்களான திரு.மோகன், திரு.மகேஷ் போன்றவர்களை வைத்து மேலும் இரண்டு இடங்களில் யோகா சொல்லிக் கொடுக்கத் தொடங்கினேன். அதன் மூலமாக வரும் வருமானத்தை அந்தந்த யோக நிலையங்களுக்கான செலவினங்களுக்கே பயன்படுத்திக் கொண்டோம்.

2011—ம் ஆண்டு டாக்டர் ஹண்டே மருத்துவமனையில் எங்களுக்கு யோக சாலை அமைத்துக் கொள்ள இடம் வழங்கினார்கள். அமைந்தகரையில் அதன்பின் நுங்கம்பாக்கத்தில் உள்ள அவர்களது மெடிக்கல் சென்டரிலும், யோகாவை சிகிச்சை முறையில் பயன்படுத்தத் தொடங்கினார்கள். அது பலபேருக்கு பெரும் பலன்களைக் கொடுத்திருக்கிறது" என்கிறார். இந்தச் சந்திப்பின்போது உடன் இருந்த யோகா ஆசிரியர் திரு.மகேஷ், "இதுவரையில் எங்களுடைய யோக சாலைகளின் மூலமாக பயன் அடைந்தவர்கள் எண்ணிக்கை லட்சக்கணக்கில் இருக்கிறது குறைந்தபட்சமான எண்ணிக்கை நான்கு லட்சம்

பேர் என்று சொல்லலாம்." எனப் புள்ளிவிவரம் தருகிறார்.

யோகாவை எவ்விதமாக எடுத்துச் செல்லவேண்டும் என்கிற கேள்வியை முன்வைத்தபோது, "முக்கியமான கேள்வி இது! இன்றைய நாட்களில் யோகா மிகவும் அவசியமான ஒரு தேவையாக இருக்கிறது. அதை ஒரு தொழில்முறை வாய்ப்பாகவோ, அல்லது உடற்பயிற்சி போன்றோ எடுத்துக் கொள்ளக் கூடாது. குறிப்பாக ஆசனங்கள் என்பதை ஒரு உடற்பயிற்சி செய்வது போல செய்து காட்டுகிறார்கள். அப்படித்தான் மேலைநாடுகளில் அதைப் பார்க்கிறார்கள்.

யோகா என்றால் யோகம் என்பது பொருள்! அதற்கு பல பொருள்கள் இருக்கிறது. யோகா என்ற வார்த்தைக்கு அகராதிப்படி ஐந்து பொருள்களை சொல்லமுடியும். அகராதியில் இல்லாமல் பல பொருள்களைச் சொல்ல முடியும்! எனவே யோகா என்றாலே ஏதோ ஆசனங்களையோ, தியான முறைகளையோ மட்டுமே குறிப்பதாக எடுத்துக் கொள்ளக் கூடாது! மனித வாழ்வியல் நெறிகளை உள்ளடக்கிய ஒரு தத்துவ ஞானத்தைத்தான் யோகா என்ற சொல் குறிப்பதாக நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்!

மேலை நாடுகளில் யோகா என்றாலே வெறும் உடலை வளைத்து செய்யக்கூடிய ஒரு ஜிம்னாஸ்டிக் கலையைப் போன்றது என்ற ஒரு பார்வை இருக்கிறது. அந்தப் பார்வை மாற வேண்டுமானால் உள்ளபடியே இந்தியத் தத்துவங்கள் யோகாவை எப்படி வெளிப்படுத்தியிருக்கிறது என்பதை நாம் ஆழ்ந்து பார்க்கவேண்டும்!" என்கிற ஆனந்த் அவர்களின் பேச்சில் யோகா மீதான அதீத அக்கறை வெளிப்படுகிறது.

யோகாவில் அவர் முனைவர் பட்டம் மேற்கொண்ட அனுபவத்தைச் சொல்லுங்கள் என்றபோது, "வயதானவர்களுக்கு இந்தக் யோகக்கலை எவ்விதத்தில் உதவிகரமாக இருக்கிறது என்கிற தலைப்பை நான் முனைவர் பட்டத்திற்காக எடுத்துக் கொண்டேன்.

உள்ளபடியே குழந்தைகள் முதல் முதியோர்கள் வரை செய்யக் கூடிய ஒரு கலைதான் யோகா என்றாலும், ஒவ்வொரு மனிதருக்கும், குழந்தைகளாக இருந்தாலும், முதியோர்களாக இருந்தாலும், அவர்கள் எந்த வயதினராக இருந்தாலும் சரி, அவர்களுக்கான உடல் அமைப்பும், அந்த உடல் யோகாவை எப்படிப் புரிந்துகொண்டு அதனை வெளிப்படுத்துகிறது என்பதை ஒரு யோக ஆசிரியராக இருந்து நாம் கவனிக்கும் பொழுது, ஒவ்வொரு உடலுக்கும் தக்கபடி யோகாசனங்கள் மாறுபடும்!

யோகாவில் இருக்கக்கூடிய படிநிலைகளை, ஒவ்வொரு உடலும் ஆன்மாவும் வெளிப்படுத்தக்கூடிய விதம் வெவ்வேறாக இருக்கும். இதனை அவர்களுக்கு தக்கபடி நாம் மாற்றிக் கொடுப்பதில்தான் யோகா அவர்களுக்கு உரிய முறையில் பயன் அளிக்கும்! அதை ஒரேவிதமாக அனைவருக்கும் கொடுத்து விடக்கூடாது!

அதுபோலவே யோகாவை ஏதோ உடற்பயிற்சி போலச் செய்வதும், எத்தனை மணி நேரம் செய்கிறோம் என்பதும் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்று! குறிப்பாக அரை மணி நேரம் அல்லது ஒரு மணிநேரம் என்று எடுத்துக் கொண்டால், அந்த நேரத்தில் எவ்வளவு ஆசனங்களை நாம் செய்து முடிக்கிறோம் என்பதல்ல யோகா! அன்றைய நிலையில் உடல் எப்படி இருக்கிறது? மனம் எப்படி இருக்கிறது என்பதைப் பொறுத்தே நாம் செய்யக்கூடிய யோகா இருக்கிறது!

குறிப்பாக, இன்று ஒரு மாணவர் சற்று மனக் கவலையுடன் இருந்தார். அவருக்கு யோகாவைப் பயிற்சியாக அளிக்க முடியவில்லை! காரணம், அவருக்கு மனதில் இருக்கக்கூடிய வலியை முதலில் நிவர்த்தி செய்ய வேண்டும்!" என்கிற யோகாச்சாரியார் தன் மாணவரைப் பார்க்கிறார்.

"அந்த அடிப்படையில் அவருக்கு சில ஆலோசனைகளை மட்டுமே வழங்கி இரண்டு ஆசனங்களை மட்டுமே செய்து அனுப்பி வைத்தோம்!" என்கிறார் அவரது மாணவரான யோகா ஆசிரியர் திரு. மகேஷ். இவரைப் போல மேலும் பல யோகா ஆசிரியர்களை உருவாக்கியதுதான் ஆச்சாரியா ஆனந்த் அவர்களின் சாதனை! ஆனால், அதைத் தனது சாதனையாக அவர் என்றுமே நினைப்பதில்லை!

இவரது மாணாக்கர்களில் குறிப்பிடத்தக்கவர்களாக மகேஷ், ஜுமானி, விஜய பிரியா, சுகுணா, ரேணுகா எனச் சிலர், யோகா பயிற்சி ஆசிரியர்களாக யோக சாலைகள் நடத்தி வருகிறார்கள்.

"யோகா ஒவ்வொரு மனிதனையும் மன ரீதியிலும், உடல் ரீதியிலும் பக்குவப்படுத்திக் கொண்டே செல்ல வேண்டும். அதுதான் சிறந்த யோகா! அப்படிப்பட்ட யோகத்தை அடையத்தான் ஒவ்வொரு ஆசிரியர்களும் மாணவர்களும் முயலவேண்டும்!" என்கிற திரு. ஆனந்த் அவர்களின் கூற்றில் உண்மையும் அக்கறையும் வெளிப்படுகிறது.

"இப்பொழுதெல்லாம் யோகாவில் புதுப்புது முறைகளைக் கொண்டு வந்து யோகாவை தங்களுடைய பங்களிப்பாக, ஒரு 'பிராண்ட்' அமைத்துக் கொண்டு இயங்குவதைக் காணமுடிகிறது. அது நிச்சயம் கூடாது! அது யோகாவுக்கு மட்டுமல்ல, அவர்களுக்கும் கூட நன்மை பயக்காது!

யோகக் கலைக்கு முதலில் ஒரு நல்ல மாணவனாக நாம் இருக்க வேண்டும்! அப்படிப்பட்டவர்கள்தான் நல்ல மாணவர்களை உருவாக்க முடியும்! வாழ்க்கைக்கு வசதி வேண்டும்தான்! ஆனால் வசதிக்காக மட்டுமே வாழ்க்கையை அமைத்துக் கொள்ளக் கூடாது

அல்லவா! அதுவேதான் யோகாவுக்குள்ளும் இப்போது நிகழ்ந்து கொண்டிருக்கிறது!

யோகாவை நாம் சரியான பாதையில் கொண்டு செல்ல வேண்டும். அதற்கான வழிகாட்டுதல் குழு தற்போது அமைக்கப்பட்டு இருக்கிறது. அது மிகச் சிறப்பாக 'ஆயுஷ்' அமைப்புடன் இணைந்து செயல்பட்டு வருகிறது. எனவே எதிர்காலத்தில் சிறந்த யோகா வெளிப்படும் என்று நம்புகிறோம். நாம் அனைவருமே ஏதோ ஒரு வகையில் இந்த பூமிப்பந்துக்கு நம்முடைய சேவையை, பங்களிப்பைச் செய்து வருகிறோம் என்றாலும், யோக ஆசிரியர்களாக இருக்கக் கூடியவர்களுக்கு அது பெரும் பாக்கியம்! காரணம் ஒருவருடைய வாழ்க்கையையே மாற்றிப் போடக் கூடிய விஷயம் யோகா!

ஒருவர் உடல் ரீதியாக எவ்வளவு நோயில் தாக்கப்பட்டு இருந்தாலும், மன ரீதியாக எவ்வளவு கவலையில் ஆழ்ந்திருந்தாலும், அதனைப் பக்குவமாக அவருக்கு விளக்கி, அதிலிருந்து விடுபட்டு அவர் உடலாலும் மனதாலும் வலியின்றி இந்த வாழ்க்கையைத் தொடர வேண்டும்! வாழ்க்கை என்பது கொண்டாட வேண்டிய உன்னதம் என்று உணர்ந்து கடை நிலையிலிருந்து இறைவனை அடையக்கூடிய உயர் நிலைக்கு கொண்டு செல்ல கூடிய அற்புதமான மார்க்கமே யோகா! அந்த மார்க்கத்தை எல்லோரும் பின்பற்ற வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை, நோக்கம், இலட்சியம்!" என்று புன்னகைக்கிறார்.

"என்னுடைய பெயரிலோ அல்லது என்னை வெளிப்படுத்தவோ நான் அப்போதும் சரி, இப்போதும் சரி முயன்றதில்லை! ஒரு சிறந்த யோக விற்பன்னராக விளங்க வேண்டும். இதன் மூலம் எண்ணிலடங்கா மக்களுக்கு நன்மை பயக்க வேண்டும் என்ற ஒரு எண்ணத்தை முன்னிலைப் படுத்த விரும்புகின்றேன். பெரிய அளவில் பேட்டிகள் கொடுப்பதையோ, முன்னிலைப் படுத்துவதையோ நான் விரும்புவதில்லை என்பது என்னைச் சார்ந்தவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

அந்த அடிப்படையில் ஏதோ ஒருவகையில் என்னால் சிலருக்கு இந்த யோகக் கலையைக் கொண்டு செல்ல முடிகிறது என்ற ஒரு நிறைவைத்தான், என் மாணவராகிய உங்களுடன் பரஸ்பரம் பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன்!" யோகாச்சாரியா ஆனந்த் அவர்கள் அடக்கமாக கூறினாலும், அளவற்ற மாணவர்களை உருவாக்கி அவர்களின் மனத்தில் அல்லவற்றை விலக்கி, நல்லவற்றை புகுத்தி யோகத்தை தரக்கூடிய ஒரு அற்புதமான ஆன்மா அவர் என்பதை உணர முடிகிறது.

ஆச்சாரியா ஆனந்த் அவர்களைப் போன்ற உயந்தவர்கள் யோகாவில் இருந்து உருவாக வேண்டும்!

ஆனந்த யோகா உருவாக வேண்டும்!

ஆனந்தம் எங்கும் பரவ வேண்டும்!

ரிப்போர்ட்டரின் ரிப்போர்ட்

இரா. செயபாலன்

ஸ்டார்' புலனாய்வு வாரப் பத்திரிக்கை சப் எடிட்டரிடமிருந்து போன் "என்ன ரமேஷ் மணி கொலை சம்மந்தப்பட்ட எக்ஸ் மேட்டரை இந்த இஷ்யூவில் போட்டுடலாமா! இந்த நேரம் போட்டா பரபரப்பா இருக்கும்"

"இன்னும் சில இன்வெஸ்ட்டிகேனும், சிலரிடம் என்கொயரியும் பாக்கி இருக்கு பாஸ். அதையும் முடிச்சு அனுப்புறேன். போட்டா பர்பெக்டா இருக்குனும்ன்னு நினைக்கிறேன்."

"சரி இதுக்கு ஏதாவது உதவி வேணுமா. இல்ல போலீஸ் தரப்புல ஏதாவது இன்பர்மேன் கேதர் பண்ணனும்ன்னா சொல்லு நமக்கு இன்பர்மேன் தர போலீஸ்ல நிறைய பேர் இருக்காங்க.."

"இல்ல பாஸ் இது சம்மந்தமா பல வியங்களை அவங்கமூலமாகத்தான் கலெக்ட் பண்ணியிருக்கேன். சம்மந்தப்பட்டவங்க தரப்புலேயிருந்து மேலும் சிலதை கலெக்ட் பண்றதுக்காக வெயிட் பண்றேன் பாஸ் "

"ஓகே.. ஓகே நீ தர ஒவ்வொரு நியூஸ்சும் அதிகமா மிகைப்படுத்தாம இருக்கிறதால பப்ளிக்கிட்ட நல்ல ரீச்சாகுது. அடுத்த கொஞ்ச நாள் எல்லா இடத்திலேயும் பேசப்படுவதுடன் சில ஊடகங்கள் விவாதம் நடத்துது. அந்த அளவு இம்பார்ட்மென்ட் ஆகுது. கீப் இட் அப்.."

"தேங்க்ஸ் பாஸ்"

"உன்னை ஸ்பெல் ரிப்போர்ட்டரா புரமோன் செய்துடலாம்ன்னு சீப் பாஸ் பிஏ சொல்லிகிட்டு இருக்காரு."

கேட்ட ரமேஷ் முகத்தில் மலர்ச்சி.

தமிழில் வெளிவரும் புலனாய்வு பத்திரிக்கைளில் இதுவும் ஒன்று. இதில் பெரும்பாலும் அரசியல் செய்திதான். கொஞ்சம் சினிமா, இடையிடையே காவல்துறை சம்மந்தப்பட்டது. இந்தப் பத்திரிக்கைக்கு மாவட்ட அளவிலும், மும்பை, டில்லி, கொல்கத்தா என தமிழர்கள் வசிக்கும் பகுதிகளிலும் நிருபர்கள் உண்டு. இவர்களுடன் ஸ்பெல் ரிப்போர்ட்டர்ஸ், சப் எடிட்டர், எடிட்டர் என பலரும் பணியில் உள்ளனர்.

ஒவ்வொரு இதழிலும் அரசுக்கு எதிரான செய்திகள் தான் அதிகம். அதிலும் குறிப்பிட்ட கட்சி, அரசியல்வாதி சம்மந்தப்பட்டது என்றால் அவரைப்பற்றி எழுதுவதுடன், அவரது குடும்பம், அரசியலுக்கு வந்த விதம், அப்போதிருந்த வசதி, இப்போதைய வளர்ச்சி, பிள்ளைகள், உறவினர்கள் என எல்லோரைப் பற்றியும் பத்தி பத்தியாக எழுதுவர். சிலரைப் பற்றி எழுதும்போது தொடரும் என அடுத்த வாரமும் வரும். மற்றோர் பிரதான கட்சியைப் பற்றியோ, அதன் செயல்பாடு அதன் தலைவர்களைப் பற்றி தப்பித் தவறி கூட தாழ்த்தி எழுதாது அக்கட்சியின் தவறான செயல்களை

கூட நியாயப்படுத்தி உயர்த்தி எழுதும்.

'திருமலை' கிராமத்தில் விவசாயம் தான் பிரதான தொழில். அங்கு பல குடிசை வீடுகள் சில கல் வீடுகள் மட்டும். இங்குள்ளோர் பலர் விவசாய கூலிகள். ஊரின் கடைகோடியில் இருக்கும் தனிவீட்டில் பெற்றோருடன் இருக்கும் +2 மாணவி லட்சுமி. சைக்கிளில் மூன்று கி.மீ தூரத்தில் உள்ள மேல்நிலைப்பள்ளிக்கு சென்று படித்துக் கொண்டு இருப்பவள். போகும் வழியில் பக்கத்து கிராமத்தைச் சார்ந்தவன் மலையன். சரியாக படிக்காமல் ஒரு காதில் கவரிங் தோடு மாட்டிக்கொண்டு, உடம்பு கலருக்கேற்ற மாதிரி கருப்பு டிர்ட், பெர்மடாஸ்பேண்ட், காலில் மட்டமான செருப்பு, டீவிலரில் தினமும் சுற்றி வருபவன் லட்சுமியிடம், தன்னை காதலிக்கும்படி வற்புறுத்துவான். பள்ளிக்கு போகும்போதும், வரும்போதும் மறித்து காதலைக் கூற மறுத்துவிட்டாள். இவன் தொல்லை நாளுக்கு நாள் அதிகமாக அவள் தன் பெற்றோரிடம் சொல்ல, பெற்றோர்கள் திகைத்து ஆவேசப்பட்டனர், கூலி வேலை செய்து வாழும் அவர்கள் ஊரார் சிலரிடம் சொன்னார்கள். மலையனைக் கேட்டால் சாதிப்பிரச்சனை வந்தால் என்னாவது. இப்போதுள்ள சட்டம் அவர்களுக்கு சாதகமா இருக்கிறது என நினைத்து பேசாமல் இருக்க, போலீசில் புகார் கொடுத்தார் லட்சுமி அப்பா. புகார் சம்மந்தமாக காலை மாலை போலீஸ் ஸ்டேசனுக்கு அலைஞ்சது தான் மிச்சம். இதனால் கூலி வேலைக்குப் போய் சம்பாதிக்கும் வருமானமும் போச்சு. வேறு வழியில்லாமல் சைக்கிளில் போய் படித்து வந்த லட்சுமியை பள்ளிக்கு அனுப்பாமல் நிறுத்தினர்.

பள்ளிக்கு அனுப்பவில்லை என்பதை தெரிந்த மலையன் யாரும் இல்லாத நேரம் பார்த்து தனிமையில் இருந்த லட்சுமி வீட்டுக்குள் நுழைந்து கையைப் பிடித்து இழுக்க, லட்சுமி கூச்சலிட சத்தம் கேட்டு, சிலர் ஓடிவர மலையன் ஓடிவிட்டான்.

பெற்றோர் ஊரார் சிலர் சேர்ந்து மாணவி தரப்பில் போலீசில் புகார் கொடுத்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதைக் கேள்விப்பட்ட அப்பகுதி எக்ஸ் எம்எல்ஏ 'புகார் எடுக்காததற்கு என்ன காரணம்' ன்னு போனில் கேட்க, ஸ்டேனில் இருந்த இன்ஸ்பெக்டர் "அந்தப் பெண்தான் அவனை வீட்டுக்கு கூப்பிட்டிருக்கா, அவன் போனதை சிலர் பார்த்ததை இவள் தெரிந்து கொண்டு கூச்சல் போட்டு தன்னை கெடுக்க வந்ததாக சொல்லி இவன் மீது பழியைப் போட்டு விட்டாள்'ன்னு புகார் எழுதி கொடுத்து இருக்கான். அவன் கொடுத்த புகாரை படிக்கட்டுமா" என்று கேட்டுவிட்டு 'பொண்ணு மைனர் என்பதால் ஹோம்க்கு அனுப்பாம இருக்கனும்ன்னு நல்ல எண்ணத்தால அவன்மீது சின்ன செக்னா போட்டு இருக்கோம். இல்லேன்னா சொல்லுங்க. அந்தப் பையன் மீது செக்ன மாத்திப்போட்டு அரஸ்ட் செய்துட்டு பொண்ணையும் ஹோம்ன்னு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யட்டுமா?" என்றார் அந்தப் பையன் சாதியைச் சார்ந்த இன்ஸ்பெக்டர்.

புகார் கொடுத்தது நடவடிக்கை என ஒரு நாளிதழில் சின்ன செய்தியானது.

அந்த மாணவிதான் அவனை தன்வீட்டுக்கு வரச்சொன்னது என்று இன்ஸ்பெக்டர் மற்றவர்களிடம் கூற அச்செய்தி அப்பகுதி முழுக்க எதிரொலிக்க அவமானம் தாங்காமல் லட்சுமி தூக்கில் தொங்கியதும் நாளிதழில் செய்தியானது.

அடுத்த பத்தாவது நாள் மலையன் துக்ஷிரத்து உறவினர் பக்கத்து ஊரைச் சார்ந்த 70 வயதான மணியை ஒரு கும்பல் வெட்டி கொலை செய்தது. இந்தக் கொலை உள்ளாட்சித் தேர்தல் முன்விரோதமா, குடும்பத்தாருக்குள் ஏற்பட்ட மோதல் காரணமா, லட்சுமி சாவின் எதிரொலியா இல்ல வேறு காரணமா என்று பல கோணத்திலும் விசாரித்து வருகிறோம் என்றார் இன்ஸ்பெக்டர்.

இந்தக் கொலையும் இன்ஸ்பெக்டர் சொன்னதும் தலைப்புச் செய்தியானது.

செய்தியைப் பார்த்ததும், கட்சி பெயரில் மட்டும் சாதி இல்லாமல், சாதிக்காரர்களுக்காகவே கட்சி நடத்தும் தலைமை அரசைக் கண்டித்து காட்டமான கண்டன அறிக்கை. அதில் 'இறந்துபோன மணி குடும்பத்துக்கு ஐம்பது லட்ச ரூபாயும், அரசு செலவில் பங்களா போன்று தோட்டத்துடன் கூடிய வீடு, ஐந்து ஏக்கர் நிலம், குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை' என இருந்தது. இவைகளை கட்சி சார்பில் தீர்மானமிட்டு முதலமைச்சர், கவர்னருக்கு அனுப்ப, அக்கட்சி வக்கீல் பிரிவு செயலாளர் மனித உரிமை ஆணையத்துக்கு மனு அனுப்பி கட்சி தலைமையிடம் அனுதாபத்தை தேடிக்கொண்டார்.

இதற்கு ஆதரவாக உதிரி சில ஜால்ரா கட்சிகள் கொடிபிடித்து கோம் போட்டு ஆர்ப்பாட்டம் செய்தன. மற்றோர் பெரிய கட்சி மணி குடும்பத்துக்கு ஒரு கோடி ருபாய் இழப்பீடு தருவதுடன் சாதி கட்சி கேட்ட அனைத்தையும் நிறைவேற்ற வேண்டும். இல்லையயன்றால் தானும் தன் கட்சியும், காற்றில் தனியே நின்று கத்தி சண்டை போடுவது போல் போராடுவோம்' என்று அறிக்கை. மணி கொலையைப் பற்றி சில நாளிதழ்கள் பத்தி பத்தியாக எழுதின. ஊடகங்கள் மட்டும் சளைத்ததா! பகல், இரவு என பல நாட்கள் விவாதங்கள் நடத்தின.

இந்த பரபரப்பான சூழலில் இதற்கு முதற்காரணமாக இறந்த லட்சுமி ஏன் தற்கொலை செய்து கொண்டாள்? என்பது காணாமல் போனது.

இது சம்மந்தமாக பலவழிகளில் பல வியங்களை சேகரித்த ரிப்போட்டர் ரமேஷ், பத்திரிக்கையில் வெளியிடப்படும் எந்த நியூஸ்க்கும் சம்மந்தப்பட்டவர்களிடம் நேரிலோ, அல்லது போனிலோ தொடர்பு கொண்டு கேட்டு எழுதுவது என்பது இந்தப் பத்திரிக்கையில் எழுதப்படாத சட்டம். அதன்படி ரமேஷ் செல்லில் சில நம்பரை டச் பண்ண.. எதிர்முனையில் எக்ஸ் எம்எல்ஏ.

"சார் நான் ஸ்டார் பத்திரிக்கை ரிப்போர்ட்டர் ஒரு தகவல் கேட்கனும், கேட்கலாங்களா.."

"கேளுங்க.."

"மணி கொலைப்பற்றி சொல்லுங்க.."

"பள்ளி மாணவி லட்சுமி குடும்பத்தார் கொடுத்த புகார் மனு மீது போலீசார் நடவடிக்கை எடுக்கலேன்னு இன்ஸபெக்டரை மிரட்டுனிங்களாம். அந்த மாணவி இறந்ததுக்கு போலீஸ்தான் காரணம்ன்னு அறிக்கை கொடுத்து இருக்கிங்க. பழிக்கு பழி வாங்க மலையன் உறவினரை உங்க துக்ஷிண்டுதலால்தான் கொலை செய்து இருக்காங்கன்னு பேசிக்கிறாங்க..."

"யாரு பேசிக்கிறாங்க...?"

"யார் யார்ன்னு எல்லாம் சொல்ல முடியாதுங்க. இதைப் பற்றி என்ன சொல்றீங்க?"

"யார் பேசிக்கிறாங்கன்னு கேட்டா சொல்லமாட்டேன்ங்கிறிங்க ஆனா நீங்க கேட்டா மட்டும் நான் சொல்லனுமா"

“சார் நான் ஒரு ரிப்போர்ட்டர். நீங்க சொன்னதை போடுவேன். பதில் சொல்லலேன்னா பதில் சொல்ல மறுத்துவிட்டார்ன்னு போடுவேன்.”

“இது பற்றி போலீஸ தரப்புலேயும், மற்றவங்க கிட்டேயும் கேட்டு போடுவீங்களா..”

“தேவைப்பட்டால் கேட்டு போடுவேன்.”

“அதென்ன தேவைபட்டால்... மணி கொலை செய்யபட்டதற்கு கண்டன அறிக்கை ஆர்ப்பாட்டம், குடும்பத்துக்கு இழப்பீடு கேட்டு ஆர்ப்பாட்டம், அறிக்கை என நடத்தியது போல் லட்சுமி குடும்பத்தைப் பற்றி அறிக்கை விடவோ ஆர்ப்பாட்டமோ செய்யவில்லையே ஏன்? என அவர்களிடம் கேட்டீரா? கேட்கமாட்டீர் அப்படியே கேட்டாலும் அவர்கள் பதிலே சொல்ல மாட்டார்கள் ஒருக்கால் பதில் சொன்னாலும் நீங்க உங்க பத்திரிக்கையில் போட மாட்டீங்க. ஏன்னா ஒரு சாராருக்கு ஆதரவு தரும் பத்திரிக்கை. தங்கள் குடும்பத்துக்குள் யார் பெரியவர் என்ற பிரச்சனைக்காக வேறு ஒரு பத்திரிக்கை ஆபீஸ்க்குள் புகுந்து சம்மந்தமில்லாத சிலரை கொலை செய்தது நாட்டுக்கே தெரியும். அது பற்றி பத்திரிக்கைள் எல்லாம் கண்டன தெரிவித்து கார சாரமாய் எழுதின. ஆள்பவர்கள் ஆதரவால் கேஸ் ஒன்னுமில்லாமல் போயின. கடைசியில் கட்சியில் தலைவர்களுக்கு குரூப் பாலிடிக்ஸ். இருதரப்பும் மாறி மாறி குற்றம் சுமத்தி அறிக்கைகள். அதை தொடர்ந்து கைகலப்பு சம்பவங்கள், கத்திக்குத்து நிகழ்வுகள். கட்சியின் முன்னணி தலைவர் ஒருவர் கோடிக்கணக்கில் லஞ்சம் வாங்கியதாக குற்றச்சாட்டு, வழக்கு விசாரணை. தமிழர்களுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்து வெற்றி பெற்ற நாட்டில் டிரில்லியன் கணக்கில் தொழிற்சாலை அமைக்க கட்சி

முக்கியஸ்தர் ஒருவர் ஒப்பந்தம் போட்டது.இப்படிப்பட்ட தகவல்களை மற்ற பத்திரிக்கைகள் பக்கம் பக்கமாக எழுதி வெளியிட்டாலும் இந்த செய்திகள் உங்கள் பத்திரிக்கையில் வெளியிடுவதேயில்லை. காரணம் இந்தப் பத்திரிக்கையின் பெரும்பான்மையான பங்குகளை குடும்ப கட்சியில் உள்ள ஒருவர் பல வருடங்களுக்கு முன்பே வாங்கிட்டதாக தகவல்.

உங்கள் பத்திரிக்கையை பொருத்தவரை பாதிக்கபட்டவர் சார்பாக கேட்டால் நாங்க குற்றவாளிகள். குற்றவாளிக்கு துணை போகும் காவல்துறை, ஒரு சில உதிர்கட்சிகள் எல்லாம் தர்மவான்கள்.

லட்சுமி கேசுல மலையனுக்கு சப்போர்ட் பண்ணி கடிதம் எழுதி வாங்கியது இன்ஸ்பெக்டர் சொல்லித்தான் நடந்ததுன்னு

உங்களுக்கும் தெரியும். அந்த இன்ஸ்பெக்டர்தான் லட்சுமி இறப்புக்கு காரணம்ன்னு ஊருக்கே தெரியும் இதையயல்லாம் ஒளிவு மறைவு இல்லாமல் எழுதுவீங்களா..

உங்கள மாதிரி ரிப்போர்ட்டர்ஸ் எல்லாம் அதிகாரிகள், அரசியல்வாதி, மற்றர்களிடம் குறுக்கு வழியில் எந்த சலுகையும் பெறாமல் இருக்கின்றீர்களா.."

"நான் இருக்கேன் சார்" ரமேஷ்

"சரி அப்படியா. அம்மா இரு சக்கர வாகன மான்ய திட்டத்துல வருட வருமானம் இரண்டரை லட்சத்திற்கு மேல் இருக்கக்கூடாது. இருந்தால் டூவீலர் வாங்க முடியாது இது சட்டம். ஆனால் உங்க மனைவி வருட வருமானம் மூனு லட்சத்திற்கு மேல். அதிகாரிகள் உதவியுடன் தொகையை திருத்தி வாங்கவில்லையா! உங்கள் உறவினருக்கு ரேன்கார்டு இல்லாமலே நீங்க சொன்னதன் பேரில் மாதாமாதம் பொருள் வாங்கிக் கொண்டு இருக்கிறாரே அது தவறில்லையா! உங்கள் தம்பி திருட்டு வழக்கில் கைதானவரை கோர்ட்டுக்கு போகாமல் ஸ்டேனோட கேஸ் இல்லாமல் கொண்டு வந்தீரே அது தப்பா படலியா..

ஆற்றுமணல் கொள்ளையில் டயர் வண்டிக்காரர்களை போலீசார் தாக்கினர். ஆனால் டயர் வண்டிக்காரர்கள்தான் போலீசை தாக்கினர் என்று நீங்கள் எழுதியதால் அவர்களில் சிலர் ஜெயிலில் அவர்கள் குடும்பம் நடுத்தெருவில் இதனால் காவல்துறை மூலம் சிபாரிசு செய்ய சொல்லி உங்கள் மகளுக்கு பால்டெக்னிக் சீட் வாங்கியது நியாயமா இப்படி நீங்க சட்டத்திற்கு புறம்பாக பெற்ற சலுகைகளை பட்டியலே போடலாம். ரிப்போர்ட்டர் என்ற அடையாளத்தால் தான் இப்படியயல்லாம் செய்து கொள்ள முடிகிறது.

நீங்க மட்டுமல்ல உங்களைப் போன்ற பெரும்பாலோர் எந்தக் கட்சி ஆண்டாலும் எந்தவித அலைச்சலும், பணமும் செலவுமின்றி எக்காரியத்தையும் முடித்துக் கொள்கிறீர்கள் உங்கள் லிஸ்ட்டில் அரசு அதிகாரிகளையும் சேர்த்துக் கொள்ளலாம்.

என்ன நம்மைப் பற்றி இவ்வளவு தெரிந்து வைத்திருக்காரே என எண்ணலாம். அரசியலில் இருக்கும் எங்களைப் போன்றோர் மற்றவர்கள் குறிப்பாக ரிப்போர்ட்டர்ஸ், காவல்துறை சார்ந்தோர் பற்றி தெரிந்து வைத்திருப்போம். ஆனால் தெரிந்த மாதிரி காட்டிக் கொள்ள மாட்டோம். இப்படிப்பட்ட உங்களுக்கு தெரிந்தே சில சலுகைகள் செய்றோம் என்றால் பயந்து அல்ல. எதுக்கு வீண் பிரச்சனை. இல்லாததை இருப்பது போலவும் நடக்காததை நடந்தது போவும் எழுதுவீர்கள். எழுதியது உண்மை என்று மக்களில் சிலர் சில நாள் பேசுவர். அதன்பிறகு அவர்களுக்கு உள்ள பிரச்சனையில் மறந்து விடுவர்.

இந்த கொலைவழக்கில் என்னை மாட்டிவிட வேண்டும் என்ற நிர்ப்பந்தம் உங்களுக்கு. அதுக்கு காவல்துறை உடந்தை. எனவே இப்போதும் சொல்கிறேன் எனக்கும் இந்தக் கொலைக்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை. நீங்கள் எப்படி வேண்டுமானாலும் எழுதுங்கள்.

கடைசியாக ஒன்று சொல்கிறேன். நாம் பேசியதை நீங்கள் உங்கள் செல்லில் பதிவு செய்து கொண்டு இருப்பது போல், நானும் என் செல்லில் பதிவு செய்து கொண்டு பேசிக் கொண்டு இருக்கிறேன் . நன்றி. வணக்கம்.

ஒரு வாரத்திற்கு பிறகுதான் ரிப்போர்ட்டை எழுத ஆரம்பித்தான். காலம் கடந்தால் போட மாட்டார்கள் என்ற நம்பிக்கையில்.

தேவி!

வானுலகில், பூவுலகில், வேறெங்கும்
தேடினாலும் கிடைக்காத

indian express foods

இட்லி / தோசை மா

இலண்டனில் மட்டுமே கிடைக்கும்

indian express foods

+44 20 8133 5144

+44 7878 89 68 37

கிழிசல்

உள்ளே கிழிந்துபோன வாழ்க்கையை
அணிந்து கொண்டு
வெளியே கிழியாத ஆடை
அணிந்தவனே கேள்!..

படித்துவிட்டு கிழிப்பது பள்ளிப் பாடம்!
கிழித்துவிட்டுப் படிப்பது வாழ்க்கைப் பாடம்!
திரும்பிப் பார்!
உன் வாழ்க்கையில்தான்
எத்தனைக் கிழிசல்கள்? —வாழ்க்கை
உன்னைக் கிழித்ததைக் காட்டிலும்
நீயே உன்னைக்
கிழித்துக் கொண்டதுதான் அதிகம்!

உன் கிழிந்த உதடுகளுக்குத்
தையல் போட மறுக்கிறாய்!
அதனால்தான் நீ கிழிபடுகிறாய்!
வாழ்க்கையில் சிலவற்றைக் கிழி!
அப்போதுதான்
சாதனைகள் உனக்குச் சாத்தியமாகும்!

சோம்பலைக் கிழி!
சுறுசுறுப்புக் கிடைக்கும்
கர்வத்தைக் கிழி!
கவுரவம் கிடைக்கும்!
வாழ்க்கையில் சிலவற்றால் கிழிபடு!
அப்போதுதான் ஞானியாவாய்!
வறுமையால் கிழிபடு!
உண்மையான நட்புகளை உணரமுடியும்!
முட்கிரீடங்களால் கிழிபடு!
உன் சீடர்களின் விசுவாசத்தை
விளங்க முடியும்!

தோல்விகள் மட்டுமல்ல
வெற்றியும் ஒரு வாள்தான்!
உடனே உறையில் போடு!
இல்லையென்றால்
அதுவே உன்னைக் கிழித்துவிடும்!

தேதித் தாள்களைப் போலவே
உன் ஆயுளின் தாள்களும்
காலத்தின் கரங்களால் கிழிக்கப்படுகின்றன!
அதற்கு முன்னர்
கிழிக்க வேண்டியவற்றைக் கிழி!

காற்றைக் கிழிப்பதால் தான்
விமானம் முன்னேறுகிறது!
கடலைக் கிழிப்பதால்தான்
கப்பல் முன்னேறுகிறது!
உன்னை எதிர்க்கின்ற எதிர்ப்பைக் கிழி!
நீ முன்னேறுவாய்!

ஜனனத்தில் தாயைக் கிழித்துக்கொண்டு
தரைக்கு வந்தவன் நீ!
வாழ்க்கையில் எதிர்ப்படும் தடைகளைக்
கிழிக்கத் தயக்கம் எதற்கு?
வாழ்க்கை என்பதே
கிழிப்பதும் கிழிபடுவதும் தான்!

இதில் உன் வெற்றி என்பது
நீ எதை கிழிக்கிறாய்?
எதனால் கிழிபடுகிறாய்
என்பதைப் பொறுத்தது!

அழகிரி பாண்டியன்

VARSHA™
தீபாவளி
வாழ்த்துக்கள்

மயானத்து மரம்

கரிகாலன்

அந்த நெடுஞ்சாலையின் ஓரம் அமைந்திருந்த சுடுகாட்டைப் பார்க்கப் பார்க்க கரிகாலனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

ஆளரவம் ஏதுமில்லாமல் கருவேலமும் பனைமரமும் அடர்ந்த காடாய்க் கிடந்த இடம், இப்படி அடையாளமே தெரியாமல் மாறிப் போகுமென்று அவன் கனவிலும் நினைக்கவில்லை. ஒற்றைக் கோடாய் நீளும் இந்த நெடுஞ்சாலைக்காக ஒரு காடே அழிந்து கிடக்கும் அவலத்தை அவனால் செரிமானிக்க இயலவில்லை.

சாலையில் விர்விர்ரென்று விரைந்தன வாகனங்கள். ஒதுங்குவதற்கு நிழலேதும் இல்லாத அந்த நெடுஞ் சாலையில், சுடுகாட்டுக்கு வெளியே வந்து விழுந்த ஒரு பனைமரத்தின் நிழலில் போய் ஒதுங்கினான்.

போர்வீரர்களின் நினைவுச் சின்னம் போல் நிற்கும் அந்த ஒற்றைப் பனைமரத்தையே வெறித்தபடி நின்றிருந்தான் கரிகாலன்.

"கிலீல்!... கிலீல்! கிலீல்!..."

பருந்தொன்று அம்மரத்திலிருந்து குரல் கொடுத்தது என்பது புரிந்தது.

அந்தச் சுடுகாட்டையும் பனைமரத்தையும் கரிகாலனால் மறக்கவே இயலாது. நாற்பது ரூபாய் கூலிக்காக ஒருநாள் முழுதும் அந்தச் சுடுகாட்டில் அவன் தன்னந்தனியனாய் கிடந்த அந்த நாள், அவன் நினைவில் நிழலாடத் தொடங்கியது.

"இனிமே இந்த மண்ணுல ஓட்ட முடியாதுப்பா! தள்ளிக்கிட்டுதான் போகணும்!" சொல்லியபடியே தன் சைக்கிளிலிருந்து 'பொத்'தெனக் குதித்து மணலில் நடக்கத் தொடங்கினார் பெரியண்ணன்.

ஆனால் பதினெட்டு வயது நிரம்பிய கரிகாலன், அந்த மணலில் சைக்கிள் ஓட்டுவதைத் தன்னுடைய திறமையை நிரூபிப்பதற்குக் கிடைத்த வாய்ப்பாக நினைத்தான். நம்பிக்கையும் மகிழ்ச்சியும் நிரம்பிய அவனது இளரத்தத்தில் எதையும் சாதிக்க முடியும் என்ற வேகம் இருந்தது. மணலில் சக்கரம் புதைய, நெளிந்து நெளிந்து அவனது பழைய சைக்கிள் முன்னேறிக் கொண்டிருந்தது.

"போ! போ! எவ்வளவுதூரம் போகறேன்னு பாக்கறேன்" சொல்லிச் சிரித்தார் பெரியண்ணன்.

பெரியண்ணனுக்கு வயது அறுபதைத் தாண்டி இருக்கும். முன்வரிசைப் பற்களை இழந்திருந்தாலும், அவரது சிரிப்பில் குழந்தைத்தனம் தெரியவரும். வாழ்க்கையில் பல கஷ்ட நஷ்டங்களைப் பார்த்தவர் என்றாலும், புன்னகை தவழும் அந்த முகத்தில் ஒரு குழந்தையின் பூரிப்பு தெரிந்தபடியே இருக்கும். பெரியண்ணனுக்கு கடந்த காலத்தைப் பற்றியோ, எதிர்காலத்தைப் பற்றியோ அக்கறை எதுவும் கிடையாது. அன்றையப் பொழுது

நல்லபடியாக போகவேண்டும், அவ்வளவுதான்! இருபது வயது நிறையாதவனுக்கு அறுபதைத் தாண்டிய தான், கையாளாகப் போகிறோமே என்ற அலுப்போ சலிப்போ அவருக்குக் கிடையாது.

சைக்கிளைத் தள்ளியபடி நடந்த பெரியண்ணன், தனக்கு முன்னால் செல்லும் கரிகாலன், மேற்கொண்டு மிதிக்க முடியாமல் சைக்கிளிலிருந்து தடுமாறி கீழே குதித்ததைப் பார்த்து சிரித்தார். மிகப் பிரயத்தனப்பட்டு சைக்கிளை மிதித்தவனுக்கு, மணல் தோல்வியைப் பரிசளித்தது.

என்னதான் மனிதன், மண்ணுடன் போராட்டத்தைத் தொடர்ந்தாலும் இறுதியில் மண்தான் அவனை வெல்லும் என்பதை உணர்ந்தவனாக நின்ற கரிகாலன், பெரியண்ணன் வரும்வரை காத்திருந்தான். சைக்கிளைத் தள்ளிக்கொண்டு வந்த பெரியண்ணன் வியர்த்து வழிந்தபடி இருந்தார். இருவரும் சைக்கிளைத் தள்ளிக்கொண்டு மணல் பாதையில் நடக்கத் தொடங்கினர்.

அந்தப் பாதையின் இருபுறங்களிலும் கண்ணுக்கெட்டிய தூரம்வரை கருவேல மரங்கள் காடாய் அடர்ந்திருந்தன. கருவேலங்காட்டின் நடுநடுவே நூற்றுக்கணக்கான பனை மரங்களும் நின்றிருந்தன. உயர்ந்து நின்ற அப்பனைமரங்கள், அங்குள்ள பறவைகள், பருந்துகளின் வாழ்விடங்கள் என்பதைப் பறவைகளின் சத்தம் காட்டியது. பனைமர மட்டைகள் எழுப்பிய ஓசைகளும் பறவைகளின் ஒலிகளும் தவிர வேறு எந்தவிதமான சத்தமும் இல்லை!

அந்த மணல் பாதையில் சிரமப்பட்டுப் பயணப்பட்டவர்கள் சென்று சேர்ந்த இடம் ஒரு மயானம். உள்ளே நுழைந்ததும் ஐந்தாறு கம்பிக் கட்டுகள் ஒரு சமாதியின்மீது கிடந்தன.

சட்டையைக் கழற்றி சைக்கிள் கேரியரில் மடித்து வைத்த பெரியண்ணன், சுற்றிலும் பார்வையைப் படரவிட்டார். அந்த மயானத்தில் ஆங்காங்கே சில மண்



மேடான சமாதிகளும், சில கல்லறைகளும் தெரிந்தன. அவரவர் வாழ்க்கையின் மேடு பள்ளங்களைப் போலவே அந்தச் சமாதிகளும் தெரிந்தன.

"இரு,நான் போய்ஏதாவது கல்லு கொண்டாறேன்!" கைலியை மடித்து கட்டியபடி நடந்த பெரியண்ணன், "இந்தப் பொத மண்ணுல கம்பிய எப்படி வெட்டப் போறோம்னுதான் புரியல..." புலம்பியபடியே சென்றார்.

கரிகாலன் தன் பங்குக்கு வேலையைத் துவக்கினான். கிடக்கும் கம்பிக் கட்டுகளைப் பிரித்து ஒவ்வொரு கம்பிகளாக நிமிர்த்தத்

தொடங்கினான். அன்றைக்கு அவர்கள் அங்கே ஒரு தகனமேடையின் மேற்கூரை கட்டுமானத்துக்கான கம்பி வேலையைச் செய்ய வேண்டும்.

'எவனும் சுடுக்காட்டு வேலைக்கு வர மாட்டேங்கிறான். பெரியண்ணன வைச்சுக்கிட்டு, எப்படியாவது இந்த வேலையை ஒரே நாளில் முடிச்சுடு தம்பி!' கம்பி பிட்டர் ராஜி மேஸ்திரி சொன்ன வார்த்தைகள் அவனுக்குள் ஓடியது. விறுவிறுவென கம்பிகளை நிமிர்த்தி நெளிவுகளை நீட்டிக் கிடத்தினான்.

சிறிது நேரம் கழித்து, எங்கிருந்தோ ஒரு கருங்கல்லைத் தோளில் சுமந்தபடி வந்த பெரியண்ணன், அவனுக்கு நேரே மணலில் தொப்பென்று போட்டார்.

சூரியன் சூட்டைக் கிளப்பியபடி வேகமாய் மேலேறியபோது கரிகாலனும் பெரியண்ணனும் தங்களது வேலையில் மும்முரமானார்கள்.

"அடியப் போடு! அடியப் போடு" உற்சாகப்படுத்தினார் பெரியண்ணன்.

வெட்டுவதற்கான கம்பியைப் பிடித்திருந்த அவரது கை சற்றே நடுங்குவதைக் கண்டு தூக்கிய சம்மட்டியை நிறுத்தினான் கரிகாலன். கம்பியை வெட்டுவதற்கு, பிடிக்கும் கையும் சம்மட்டி அடிக்கும் கையும் நேர்க்கோட்டில் இருக்கவேண்டும். சற்று தவறினாலும் அங்கே ரத்த காயம் ஏற்படுவது நிச்சயம் ஆகிவிடும்!

அவனுடைய தயக்கத்தைப் பார்த்த பெரியண்ணன், "என் கை நடுக்கத்தை பாத்து பயப்படாதே. அடியப் போடு! கம்பி ரெண்டா தெறிச்சு ஓடும் பாரு!" குழந்தைத்தனமான சிரிப்புடன் சொன்னார் பெரியண்ணன்.

நம்பிக்கையுடன் சம்மட்டியைத் தூக்கியவன், அந்தக் கம்பியின் மீது பலமாக இறக்கினான். 'டணால்' எனத் தெறித்து ஓடியது கம்பி. இடியென இறங்கிய அவனது சம்மட்டி அடி, அந்தச் சுடுகாட்டின் இறுகாத மண் மீது 'தொம்' என விழுந்து பரவியது.

"பாரு, அடியோட அதிர்வு தாங்காம சமாதிக்குள்ள கிடக்கிற செத்த பயலெல்லாம் வெளியே ஓடி வரப் போறானுக" பெரியண்ணன் பெரிய 'ஜோக்' அடித்துவிட்டதாக பலமாகச் சிரித்தார்.

அடுத்து வந்த ஒரு மணி நேரமும், கம்பி தெறிக்கும் ஓசை மட்டுமே அந்த மயானத்தில் எதிரொலித்தது.

இரண்டு நாள் செய்ய வேண்டிய அந்தத் தகன மேடையின் கூரைக் கட்டுமான வேலை, கரிகாலனின் கம்பி வெட்டும் வேகமும், கட்டும் வேகமும், வேலை நேர்த்தியும் அதனை ஒரே நாள் வேலையாக முடித்து விடும் என்பதை உணர்ந்தார் பெரியண்ணன்.

கரிகாலன் தானே எடுத்து பரப்பிக் கட்டிக் கொள்ளும் வகையில், வளைத்த கம்பிகளைக் கொண்டுபோய் பலகையில் சாய்த்து, நிற்க வைத்த பெரியண்ணன், ஒரு சமாதியின் மேல் படர்ந்திருந்த கோவைக்கொடியின் இலைகளைப் பறித்து கைகளில் கசக்கி இரும்புத்துரு போக சுத்தப்படுத்தினார். வழிந்த வியர்வையைத் துடைத்துவிட்டு, கைலியைச் சரி செய்தபடியே கேட்டார்.

"சரி, நான் போய் பசியாற ஏதாவது வாங்கிட்டு வர்றேன். எனக்கு ஒரே பசி!"

"பெரியண்ணே! போயிட்டு சீக்கிரம் வந்துடுங்க" ஐம்பது ரூபாய்த் தாளை அவர் கையில் கொடுத்தான் கரிகாலன். பெரியண்ணன் ஒரு மந்திரப் புன்னகையுடன் நடந்தார்.

உச்சி வெயில் சூடேற்றும் அந்த நேரத்தில், பதினைந்தடி உயரத்தில் மரப்பலகையிலான மேல்தளத்தில் கம்பிகளைப் பரப்பத் தொடங்கினான் கரிகாலன். அங்கிருந்து அவன் பார்வைக்கு எல்லா சமாதிகளும் தெளிவாகத் தெரிந்தன.

மயானத்தில் கூட மனிதன் வாழ்ந்து சென்ற சுவடு

தெரியும்படிதான் இருக்கிறது. மகிழ்ச்சியோடு வாழ்ந்து முடித்தவர்களும், வெறும் கஷ்டத்தை மட்டுமே பார்த்தவர்களும் ஒன்றாய் அடங்கிக் கிடக்கும் இந்த இடத்திலும் கூட, பணம் தன் பலத்தைக் காட்டியபடி இருப்பதை கண்கூடாகக் கண்டான். 'கல்லறை கூட சில்லறை இருந்தால் வாய் திறந்தேதான் பேசுமடா' என்ற வரி உண்மைதான் போலிருக்கிறது என்பதை உணர்ந்தான்.

உலகத்தையே சொந்தம் கொண்டாட நினைத்த மாவீரன் அலெக்சாண்டர், தன் இறுதி ஊர்வலத்தில் வெறும் கையைக் காட்டியபடி சென்றான் என்று அவன் படித்த வரலாற்றுச் செய்தி ஏனோ நினைவுக்கு வந்தது.

வேலையில் மும்முரமாய் இருந்தாலும், அவ்வப்போது தலை நிமிர்த்தி, பெரியண்ணன் வருகிறாரா என்று சுற்றுமுற்றும் பார்த்தபடியே இருந்தான்.

அந்த மயானத்தில் அவனைத் தவிர யாருமில்லை! எலும்புத் துண்டுகளும், கபாலங்களும் ஆங்காங்கே அவன் கண்களுக்கு தெரிந்தன. ஒருவேளைக் கூடு விட்டுப் பிரிந்த உயிர்கள் அந்த எலும்புகள் அருகே உலவிக் கொண்டிருக்குமோ என்ற எண்ணம் அவனுக்குள் திடுமெனத் தோன்றி மறைந்தது.

அவனுக்குப் பேய்ப் பிசாசு குறித்த பயமில்லை என்றாலும், அந்த மயானத்தில் தன்னந்தனியனாய் இருப்பதும், பனைமரத்தில் அமர்ந்திருக்கும் பருந்துகள் எழுப்பும் ஒலியும், அங்கே நிலவிய மயான அமைதியும் அவனுக்கு என்னவோ செய்தது. போதாக்குறைக்கு, அந்த மண்டையோடுகள் வேறு அவனைப் பார்த்து பல்லிளிப்பது போல் இருந்தது.

நேரம் போய்க்கொண்டே இருந்தது. சாப்பாடு வாங்கி வரச் சென்ற பெரியண்ணனைக் காணவே இல்லை. வேலை கவனத்தில் இருந்தவன் மீது திடீரென ஒரு பெரிய நிழல் படர்ந்ததில், மனம் 'திக்திக்'கென்று அடித்தது. நிமிர்ந்து பார்த்தான். பார்த்தவன் முகத்தில் பெருமிதத்துடன் ஒரு புன்னகை படர்ந்தது.

அந்த நிழல், அங்கிருந்த பனை மரங்களில் ஒன்றின் நிழல்! சுட்டெரித்த வெயிலிலிருந்து சற்றே அவனை ஆசுவாசம் கொள்ளச் செய்தது அம்மரத்து நிழல்! கரிகாலன் கையெடுத்துக் கும்பிட்டு நன்றி தெரிவித்தான். அம்மரத்தின் மேல் அவனுக்கு ஊற்றுநீர் போல அன்பு சுரந்தது.

'ஓ! பனைமரமே! மூவாயிரம் வருடங்களுக்கும் மேலாக நீ எங்கள் மொழியைக் காத்துக் கொண்டு இருக்கின்றாய். எங்கள் பண்பாட்டை, நாங்கள் பட்ட பாட்டை, புலவன் பாடிவைத்த பாட்டை, நீயல்லவா பாதுகாப்பாய் ஓலைச் சுவடிகளில் வாழ வைத்திருக்கிறாய்!

உன் ஓலைகளில் எழுதப்பட்ட காவியங்களை நாங்கள் வாசித்து நேசித்து வாழப் பழகிக் கொண்டிருக்கிறோம். எங்களுக்கு அருமையான வழிகாட்டியான உனக்கு, எங்கள் தமிழ்ச் சமூகம் கோடி நன்றிகளைத் தெரிவிக்க கடமைப் பட்டிருக்கிறது.'

கரிகாலனின் நெஞ்சுக்குள் நன்றி உணர்ச்சி வந்து அலைபோல மோதியதில், அந்தப் பனை மரத்தை மீண்டும் கையெடுத்துக் கும்பிட்டவன், கைகளைக் கீழே இறக்கியபோது சற்று தூரத்தில் கிடந்த ஒரு மண்டை ஓடு சிரிப்பதைக் கண்டான். அதைப் பார்த்தவனுக்குள் மேலும் எண்ணங்கள் அலைமோதின. இது என்ன சிரிப்பு? சந்தோஷமாய் வாழ்ந்ததனால் ஏற்பட்ட சிரிப்பா? வாழ்க்கையிலிருந்து மீண்டு தப்பித்து விட்டோம் என்ற சிரிப்பா? வாழ்ந்த காலகட்டத்தில் சிரிக்கும் வாய்ப்பு ஏற்படாததால், இப்போது நிரந்தரமாய் கிடைத்த சிரிப்பா?

சிரிக்கும் அந்த மண்டையோட்டைப் பார்த்து அவனும் ஒரு புன்னகையை வீசினான். அப்போதுதான் அவனுக்குச் சட்டென்று தூக்கி வாரி போட்டது. நான் என்ன செய்கிறேன்? யாரைப் பார்த்து சிரிக்கிறேன் இந்தச் சுடுகாட்டில்?

என்னவாயிற்று எனக்கு? எண்ணியவன், மீண்டும் வேலையில் கவனத்தைச் செலுத்த முற்பட்டான்.

அவனுக்குள் ஒரு குரல் எழும்பிச் சிரித்தது. எப்படி இருந்தால் என்ன? சிரிப்பதில் எந்தத் தப்பும், தவறும் இல்லை! இதைத்தானே பெரிய பெரிய முனிவர்களும் யோகிகளும் நமக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள்! தனியே இருக்கும்போதுதானே நாம் நாமாக இருக்கின்றோம். தனிமை கற்றுக்கொடுக்கும் பாடம் போல், வேறு எதுவும் கற்றுக் கொடுப்பதில்லை!

அடங்காத குதிரையைப் போல் ஓடிய அவன் மனதைக் கட்டுப்படுத்த முயற்சி செய்தான். வேலையில் மட்டும் கவனம் இருக்க வேண்டும் என்று தனக்குள் சொல்லிக் கொண்டவன், வேலையை நெருக்கி வேகம் கூட்டினான்.

ஒரு பெரிய பருந்து பனை மரத்தில் வந்தமர்ந்து குரல் கொடுத்தது. அவ்வப்போது அதைப் பார்த்தபடியே இருந்தவன், கதிரவன் வேகமாக மேற்கில் இறங்குவதையும் கவனிக்கத் தவறவில்லை.

இந்தப் பெரியண்ணன் எங்கே போய்த் தொலைந்தார்? நூறு முறைக்கு மேலாவது கேள்வி எழுந்திருக்கும்! இப்போது அவனுக்குப் பசி மறைந்து, பெரியண்ணன் இன்னமும் ஏன் திரும்பவில்லை என்ற கவலையே எழுந்திருந்தது. தனி ஒருவனாய் நின்று வேலையை முடித்து விட்டு, கீழே இறங்கத் தயாரான வேளையில் பெரியண்ணன் பனங்காட்டுப் பாதையின் வழியே வருவதைக் கண்டான்.

சாப்பாடு வாங்கி வரச் சென்ற பெரியண்ணன், நேராக சாராயக் கடைக்குச் சென்று குடித்துவிட்டு, அங்கேயே படுத்துக் கிடந்து பின்னர் இடம் தெரியாமல் அங்கும் இங்கும் அலைந்து வந்து சேர்ந்திருக்கிறார் என்பதைப் பார்த்த மாத்திரத்தில் புரிந்து கொண்டான்.

ஆனால் பெரியண்ணனோ தான் சாப்பாட்டிற்காக அலைந்ததாகவும், எங்கும் சரிவர ஒன்றும் கிடைக்காததால், ஒரு டீக்கடையில் தனக்காகக் காய்ந்த பன் ரொட்டி மட்டுமே இருந்தது என்று அவனிடம் இரண்டு காய்ந்த ரொட்டித் துண்டுகளை நீட்டினார். அவர் சொல்வதை அமைதியாய் செவிமடுத்த கரிகாலன், ஒரு சமாதி மீது முளைத்திருந்த செடியின் இலைகளைப் பறித்து கைகளில் வைத்துக் கசக்கி, இரும்புக் கறையை நீக்கிவிட்டு சட்டையை அணிந்துக் கொள்ளும்போது சொன்னான்.

"உங்க கதையெல்லாம் நான் ஒண்ணும் கேக்கலே. சைக்கிள எடுத்துக்கிட்டு கிளம்புங்க சீக்கிரம். இருட்டறதுக்குள்ள இந்தப் பனங்காட்ட தாண்டணும்."

அடுத்த சில நிமிடங்களில் சூரிய வெளிச்சம் முழுதாய் மறைந்த போது, அந்தப் பனங்காட்டுப் பாதையில் பாம்புகள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் நெளியத் தொடங்கின. அவர்களது சைக்கிள்களின் தடம், மணலில் நீண்ட பாம்பைப் போல் நெளிகோடுகளிட்டன.

"கிலீல்!... கிலீல்! கிலீல்!..."

அந்த மயானத்து மரத்திலிருந்து ஒரு பருந்து கத்தியதில், நிகழுலகுக்கு வந்தான் கரிகாலன்.

அங்கே சுடுகாடு இருப்பதற்கான அடையாளத்துக்கென கைகாட்டி மரமாக அந்தப் பனைமரத்தை வெட்டாமல் விட்டிருக்கிறார்களோ என நினைத்தான். அந்த மயானத்து மரம் தன் எல்லையில் மனித உடல்களை மட்டுமல்ல, எத்தனையோ நினைவுகளையும் புதைத்துக் கொண்டு நிற்பதாகப்பட்டது அவனுக்கு.

வாழ்க்கை இன்னதென்று தேடுபவர்களுக்கு, வாழ்வின் இருப்பு நினைவுகளில் மட்டுமே இருக்கிறது என்பதை அறிவுறுத்தும் விதமாக நின்றிருந்தது அந்த ஒற்றைப் பனை.

மீண்டும் அம்மரத்தைக் கைகூப்பி வணங்கிவிட்டு நடக்கத் தொடங்கினான் கரிகாலன்.

VARSHA™

Ready to Cook

Made with Quality Natural Products

Idli / Dosa Wet Mix

ఇడ్లీ దోస పిండి

இட்லி / தோசை மாவு

ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು

ഇഡ്ഡലി / ദോശ മാവ്

100% Pure Vegetarian

ઈડલી ડોસા નું ખીરું

इडली/ दोसा आटा

கனவுக்குள் ஒரு கனவு

வால்ட் விட்மன்

தமிழில் : சி. ஜெயபாரதன், கனடா

கனவுக்குள் ஒரு கனவு
கண்டேன் !

காசினியில் பிறர் எல்லாம்
தாக்கினும்
தோற்காத ஓர் நகரைக்
கண்டேன் !

அந்த நகரமே
என் நண்பர் வாழும்
புதியதோர் நகரம் !

எதுவும் மிஞ்ச வில்லை
உறுதியான
அதன் கவர்ச்சித்
தரத்துக்கு மேலாக !

பிற நகரங்களுக்கோர்
வழிகாட்டி அது !

மனிதச் செயல்களின்
ஒவ்வோர் கண நிகழ்ச்சியும்
ஒருமணி நேரத்தில்
தெரிந்து விடும்,
கண்ணோக்கிலும்,
வாக்கு மொழியிலும் !

படைப்பாளிகளுக்கு...
* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!
*இதழில் வெளியாகிற
கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள்
யாவும் படைப்பாளிகளின்
பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!
தொடர்புகளுக்கு
editor@ithamil.com

‘ரெமோ’ படத்தை இயக்கிய பாக்யராஜ் கண்ணனின் அடுத்த படம் ‘சுல்தான்.’ இப்படத்தில் கார்த்தியுடன் ஜோடியாக நடிகை ராஷ்மிகா நடிக்கிறார். சுல்தான் படத்தின் படப்பிடிப்பு தற்போது நிறைவு பெற்றுள்ளது. இதுபற்றி நடிகர் கார்த்தி ட்விட்டரில், ‘படப்பிடிப்பு முடிந்தது. என்னுடைய படங்களில் அதிகமாகச் செலவழிக்கப்பட்ட படங்களில் ஒன்றாகும். கஷ்டப்பட்டு உழைத்த படக்குழுவினருக்கு நன்றி!’ எனக் கூறியுள்ளார்.

சுல்தான் படப்பிடிப்பு நிறைவு!

சுல்தான் பண வசூலில் தருவாரா நிறைவு?!

கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் தனுஷ், ஐஸ்வர்யா லட்சுமி நடித்திருக்கும் 'ஜகமே தந்திரம்' திரைப்படம் ரிலீசுக்கு தயாராகி வருகிறது. கொரோனா வைரஸ் காரணமாக ஊரடங்கின் தளர்வுகள் அறிவிக்கப்பட்டு படப்பிடிப்புகள் தொடங்கப்பட்டுள்ளது. தற்போது அக்ஷய் குமார் நடித்து வரும் அத்ராங்கி ரே படப்பிடிப்பில் கலந்து கொண்ட நடிகர் தனுஷ், கேமராவை கட்டிப்பிடித்து புகைப்படம் எடுத்து, 'உண்மையான லவ், உன்னை ரொம்ப மிஸ் செய்தேன்!' என்று பதிவு செய்திருக்கிறார்.

‘பாகுபலி’ படத்துக்குப் பிறகு ராஜமௌலி இயக்கத்தில் உருவாகி வரும் படம் ‘இரத்தம் ரணம் ரௌத்திரம்‘. இதில் ராம்சரண், ஜூனியர் என்.டி.ஆர், ஆலியா பட், அஜய் தேவ்கன் உள்ளிட்ட பலர் நடிக்க, டிவிவி நிறுவனம் சுமார் 400 கோடி ரூபாய் பொருட்செலவில் தயாரித்து வருகிறது. ‘பாகுபலி’ படத்தைப் போலவே இந்தப் படமும் தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி மொழிகளிலும் வெளியாகிறது. இதற்கான காணொலியை ‘ஆர்.ஆர்.ஆர்’ படக்குழுவினர் ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளனர். இரண்டு மாத காலத்துக்கு தொடர் படப்பிடிப்பை நடத்த படக்குழுவினர் முடிவெடுத்துள்ளனர்.

அடே தேவுடு!
அக்கட ஏமி நடக்குடு!

இரத்தம் ரணம் ரௌத்திரம்‘
ஆரம்பம்!

ராதா கிருஷ்ணா இயக்கத்தில் பிரபாஸ், பூஜா ஹெக்டே உள்ளிட்ட பலர் நடிப்பில் உருவாகி வரும் படம் 'ராதே ஷ்யாம்'. 'சாஹோ' படத்தைத் தயாரித்த யு.வி. கிரியேஷன்ஸ் நிறுவனமே இதையும் தயாரித்து வருகிறது. தமிழ், தெலுங்கு, இந்தி உள்ளிட்ட மொழிகளிலும் ஒரே சமயத்தில் இப்படம் வெளியாகவுள்ளது. 'ராதே ஷ்யாம்' படக்குழுவினர், பூஜா ஹெக்டேவின் பிறந்த நாளுக்கு பிரத்யேக போஸ்டர் ஒன்றை வெளியிட்டுள்ளனர். அதில் 'ப்ரேரணா' என்ற கதாபாத்திரத்தில் பூஜா ஹெக்டே நடித்து வருவதை உறுதிப்படுத்தியுள்ளது. என்பதையே இப்படத்தின் கதைக்குக் கிடைத்த வெற்றி என்கிறார் இயக்குனர்.

இந்திய கிரிக்கெட் அணியின் 1983 உலகக் கோப்பை வெற்றிக் கதையைச் சொல்லும் '83', ஏப்ரல் மாதம் வெளியாகவிருந்தது. தற்போது இந்த வருடம் கிறிஸ்துமஸ் தினத்தன்று வெளியாகும் என்று கூறப்பட்டுள்ளது. அணியின் தலைவர் கபில் தேவ் கதாபாத்திரத்தில் ரன்வீர் சிங் நடித்துள்ளார். கபீர் கான் இயக்கியுள்ள இந்தப் படத்தில் ரன்வீர் சிங்கின் மனைவி தீபிகா படுகோன், கபில்தேவ் மனைவி கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

அக்ஷய் குமார், கேத்தினா நடிக்கும் 'சூர்யவன்ஷி' மார்ச் மாதம் வெளியாகத் திட்டமிடப்பட்டு கரோனா நெருக்கடியால் தள்ளிப்போனது. பின் தீபாவளிக்கு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தீபாவளி அன்று அக்ஷய் குமாரின் 'லட்சுமி பாம்' திரைப்படம் ஓடிடியில் வெளியாகவுள்ளது. எனவே, 'சூர்யவன்ஷி' 2021—ம் ஆண்டு ஜனவரியிலிருந்து மார்ச் மாதத்துக்குள் ஒரு தேதியில் வெளியாகும் என்று கூறப்பட்டுள்ளது. '83' மற்றும் 'சூர்யவன்ஷி' ஆகிய இரண்டு படங்களின் வெளியீட்டு உரிமையும் ரிலையன்ஸ் நிறுவனத்திடம் இருப்பது குறிப்பிடத்தக்கது.

கரோனா நெருக்கடியில் 'சூர்யவன்ஷி'

சூரியனுக்கே சூடு தரும் கரோனா!

வாரிசுகளை இணைக்கும் மரக்கார்!

வசூலையும் குவிக்கட்டும் மரக்கார்!

மோகன்லால் — பிரியதர்ஷன் கூட்டணி மீண்டும் இணைந்துள்ள படம் 'மராக்கர்: அரபிக்கடலிண்டே சிம்ஹம்.' பெரிய பட்ஜெட்டில் பிரமாண்டமாக தயாராகி வரும் இந்தப் படத்தில் மோகன் லாலின் இளவயது கதாபாத்திரத்தில் அவரது மகன் பிரணவ் மோகன்லால் நடிக்கிறார். அவருக்கு ஜோடியாக பிரியதர்ஷனின் மகளான கல்யாணி பிரியதர்ஷன் நடிக்கிறார். இந்த படத்தில் மோகன்லாலுக்கு ஜோடியாக நடிக்க கீர்த்தி சுரேஷ் ஒப்புக்கொண்டுள்ளார். தன்னை அறிமுகப்படுத்திய கூட்டணி என்பதால் நன்றிக்கடனுக்காக கீர்த்தி 5 ஆண்டுகள் கழித்து மலையாளத்தில் நடிக்கிறார்.

2019—ம் ஆண்டு நிவின் பாலியுடன் 'லவ் ஆக்ஷன் டிராமா' என்ற படத்தில் நடித்திருந்த நயன்தாரா, பிறகு எந்தவொரு மலையாளப் படத்திலும் ஒப்பந்தமாகாமல் இருந்தார். பல்வேறு படங்களுக்கு எடிட்டராக பணிபுரிந்து, கேரள அரசின் சிறந்த எடிட்டருக்கான விருதினையும் வென்றவரான அப்பு என்.பட்டாதிரி கூறிய 'நிழல்' படத்தின் கதை பிடித்துவிடவே, உடனே ஒப்பந்தமாகியுள்ளார். இதில் குஞ்சாகோ போபன், நயன்தாரா இவரும் பிரதான கதாபாத்திரங்களில் நடிக்கவுள்ளனர். இவர்கள் இருவரும் 12 ஆண்டுகள் கழித்து இணைந்து நடிக்கவுள்ளனர்.

நிழல் நிஜமாகட்டும்!

புதிய மலையாளப் படத்தில் நயன்தாரா!

எழுத்தாளன் அருணாசலம்

கடுங்கோன் சென்னி

"அத்தா! எனக்கு சோறு வேண்டாம். பள்ளிக்கூடத்துக்கு நேரமாச்சு!" என குடிசை வாசலில் நின்றிருந்த அருணாசலம் தன் அம்மாவிடம் தெரிவித்துவிட்டு கிளம்பச் செய்தான்.

"அடேய் அருணே, ஏன் சாமி! ஒருவா சாப்புட்டு போயா" என்று குடிசைக்குள் இருந்து அவனது அம்மாவின் குரல் வெளியே நன்றாகவே காதில் விழுந்தது. ஆனாலும் அதைப் பொருட்படுத்தாது நடந்து சென்றான் அருணாசலம்.

பார்ப்பதற்கு அழகு முகத்துடனும் வளர்த்தியாக காட்சியளிக்கும் அருணாசலம், மதுரையில் நிலாவூர் என்கிற சிறு கிராமத்தில் தன் தாய் தங்கையுடன் வாழ்ந்து வருகிறான். நிலாவூரில் பல குடிசைகள் உள்ளன. அதில் ஒரு குடிசை அருணாசலத்தின் குடும்பத்துடையது. தினமும் காலை நேரத்தில் பள்ளிக்கூடத்திற்கு செல்பவன், அதை முடித்துவிட்டு ஓர் இரும்புப் பட்டறையில் பணி செய்து அதில் கிடைக்கும் தினக் கூலியை அவன் தாயிடம் கொடுப்பதில் கோடி மகிழ்ச்சி அவனுக்கு. இன்று அவன் என்னமோ பள்ளிச் சீருடையில்தான் வீட்டிலிருந்து கிளம்பினான். ஆனால் வந்து சேர்ந்த இடமோ ஊர் மத்தியில் வளர்ந்து செழித்து கிடக்கும் ஆலமரத்திடம்.

பெரும்பாலும் வேலையற்ற உழைப்பாளிகள் தினம் அந்த ஆலமரத் திண்ணையில் அமர்ந்துக் கொண்டு பேசுவது வழக்கம். அன்று அதேபோல் பல பேர் அமர்ந்தபடியும் படுத்திருந்தபடியும் அங்கு நேரத்தை கடத்திக்கொண்டிருந்தார்கள். அவ்விடத்திற்கு வந்து சேர்ந்த அருணாசலம் உட்கார எங்கு இடமுள்ளது என்று கவனித்தான். இரு நபர்கள் இடையே சிறு இடம் கிடைக்க, அங்கு ஏறி அமர்ந்தான். இரு கைகளையும் ஊன்றி ஏறியதால் உள்ளங்கை சுருக்கென்று இருந்தது. மெல்ல கையைப் பார்த்தான். தினமும் இரும்புப் பட்டறையில் வேலை செய்து இரு கைகளும் காப்புக் காய்த்து புண்ணாகி கிடந்தன.

அந்நேரம், "ஏண்டா அருணாசலம், பள்ளிக்கூடம் போகலையா?" என அவன் அருகில் படுத்திருந்த பெரியவர் ஒருவர் எழுந்தமர்ந்து கேள்வி எழுப்பினார்.

"இல்ல தாத்தா, இன்னைக்கு நான் போகல!"

"இந்தக் கால பிள்ளைங்களே இப்படித்தான்!" என்றார் அவர். அச்சமயம் அவர்கள் முன் கீயாங் என்ற சத்தத்தை எழுப்பியபடி ஒரு சைக்கிள் வந்து நின்றது. அதன் மேல் அமர்ந்திருந்த இளைஞன் ஒருவன், "ஏன்டா மாப்புள நீயும் பள்ளிக்கூடத்துக்கு போகலயா?" என சைக்கிளில் இருந்து கீழே இறங்கி அருணாசலத்தை நெருங்கினான்.

“இல்லடா பாண்டி, மனசு சரியில்லை!”

“எது மனசு சரியில்லையா? ஒரு நிமிசம் இரு!” எனக்கூறிய அருணாசலத்தின் நண்பன் பாண்டி அருகில் அமர்ந்திருந்த பெரியவரிடம், “தாத்தா நீ இங்க என்ன செய்யுற? அங்கு பாட்டி உன்ன சீவகட்டையோடு தேடிட்டு இருக்கு. இங்க நீ ஒய்யாரம படுத்துருக்க!” என அவன் சொல்லியது தான் தாமதம்!

“அய்யய்யோ! என் பொஞ்சாதி தேடுறாளா?” எனப் பதறிய பெரியவர் அங்கிருந்து எழுந்து ஓடினார்.

அவ்விடத்தில் ஏறி அமர்ந்த பாண்டி,“தாத்தாவுக்கு பாட்டி மேல எவ்வளவு பயம் பாத்தியா மாப்புள?” என்றான் ஓடும் அவரைப் பார்த்தபடி. “ஏன்டா நிசமாவா? அவர தேடுராங்க!”

“இல்ல மாப்புள, இடம் பிடிக்க சின்ன பொய்ய சொன்னேன். கிழம் எப்பிடி ஓடுது பார்!”

“நீ திருந்தவே மாட்ட!” சிரித்தான் அருண்.

“அது இருக்கட்டும், நீ என்னமோ மனசு சரியில்லைனு சொன்னியே, ஏன் உனக்கும் உன் லவ்வருக்கும் ஏதா சண்டையா?”

“அது இல்லடா”

“வேற?”

“நா சிறுகதையெல்லாம் எழுதுவேன் இல்ல?”

“ஆமா நம்ப பள்ளிகூடத்துல கூட நிறைய பரிசு வாங்கிருக்கியே! என்ன அதுக்கு இப்ப?”

“இந்த முறை என் கதைய மெட்ராசுக்கு அனுப்பி இருக்கேன்!”

“மெட்ராசுக்கா ஏன்?”

“அது புகழ்பெற்ற ஒரு தமிழ் மாத இதழ் போட்டி ஒன்னு நடத்தது. அதுக்கு அனுப்பியிருக்கேன்’

“என்ன இப்போ நல்ல விசியம் தானே!”

“இல்ல மாப்புள, முந்திரிக் கொட்டை மாதிரி அனுப்பிட்டேன். ஆனா அத நினைச்சா பயமா இருக்கு!”

“ஏன் மாப்புள நீ நல்லதானே எழுதுவ. நம்ம பள்ளிகூட” எனப் பேச முற்பட்டவனை தடுத்தது அருணின் குரல். “நம்ப சின்ன கிராமத்துல என் எழுத்து நல்லதான்டா தெரியும். ஆனா இந்தப் போட்டில பல கைதேர்ந்த எழுத்தாளர்கள் கலந்துப்பாங்க. மெட்ராஸ்ல இருக்க பெரிய மாத இதழ் மாப்புள அது.”

“சிறுகதைய

அனுப்பிட்டியா?"

"ம்ம்ம்!"

"பிறவு என்ன பரிசு எதனா இருக்கா?"

"ஆமாடா பணப்பரிசு! அது மட்டும் கிடைச்சா என் ஆத்தாக்கு தோல் செருப்பும் என் தங்கைக்கு பாவாட சட்டையும் வாங்கித் தருவேன்" எனக் கூறிய அருணின் முகம் மகிழ்ந்தது. பிறகு சட்டென சோகமானான். "பாவம் மாப்புள, ஆத்தா சுள்ளி பொறுக்க போகும் போதெல்லாம் கால்ல முல்லு குத்துதாம்."

"நீ கவலைப்படாதே அருணே! பரிசு உனக்கே விழும்! நான் நம்ப கருப்பன் கிட்ட வேண்டிக்குறேன்! ஆனா ஒன்னு கருப்பனுக்கு காணிக்கையை நீதான் போடனும்."

"நிச்சயமாடா!"

"சரி சரி, பயலுக சில பேர் அங்க கபடி ஆடுறாயாங்க. வா போவோம்."

"சரி வா போவோம்" என்று சிரித்தான் அருண். இருவரும் பாண்டியின் சைக்கிளில் ஏறி மைதானத்தை நோக்கிச் சென்றார்கள்.

"அய்யா சொல்லியிருந்தா நானே வீட்டுக்கு கொண்டு அனுப்பியிருப்பேன். உங்களுக்கு ஏன் சிரமம்?" எனப் பணிவாகக் கூறினார் பெயர் போன பாளை தமிழ் மாத

இதழின் ஆசிரியர் சுகுமாரன். அவர் எதிரே அமர்ந்திருந்த மனிதர் பார்ப்பதற்கு வயதானவராக தெரிந்தாலும், அவரது உடல் இளமையைக் கக்கியது. நறைத்த தலை முடியை மூடியிருந்தது தொப்பி ஒன்று.

தன் தாடியைத் தடவிய எழுத்து சிகாமணி வேலுமணி புன்னகையுடன், "இதுல என்ன தம்பி இருக்கு? சும்மா பென்ஷன் வாங்குற கிழவன் நான். வேலையா வெட்டியா? உங்கள போல இதழ்கள் நடுவரா எப்போ அழைப்பாங்கனு காத்துக்கிட்டு இருக்க வேண்டி இருக்கு. இதோ செய்தி வந்தவுடனே சைக்கிள எடுத்துட்டு ஓடோடி வந்துட்டேன்."

"அய்யா உங்ககிட்ட அந்த எளிமையும் நகைச்சுவையும் அப்படியே இருக்கு. இத உங்க பல சரித்திர நாவல்ல கூட நான் கவனிச்சிருக்கேன். குறிப்பா சேர மன்னன பத்தி எழுதுனீங்க இல்ல, அது எத்தன வருசம் ஆனாலும் அப்படியே நிக்குதுங்கயா!"

"எத்தன வருசம் ஆச்சுனு எனக்கும் மறந்து போச்சு. ஒன்னா இரண்டா? பல குப்பைகள எழுதிருக்கேனே!"

'அதெல்லாம் எங்களுக்கு கிடச்ச புதையல் அய்யா. நம்ம தமிழ் சரித்திர நாவல் என்னாலே வேலுமணி அய்யாதானு ஊருக்கே தெரியும்!" என்று நகைத்தார் சுகுமாரன்.

"இதே நாற்காலியில பல வருசம் முன்னாடி அமர்ந்திருந்த உங்க அப்பாவும் இப்படித்தான் பேசுவாரு. அவரோட பேசிய பேச்சு ஒன்னா இரண்டா?" என்று பெருமூச்சு விட்ட எழுத்தாளர் வேலுமணி, "இப்போ எப்பிடி சுகுமாரா இருக்காரு அப்பா?

"இப்போ கொஞ்ச பரவாயில்லை அய்யா. இந்தாங்க, இதுதான் நம்ப இதழ் சிறுகதை போட்டிக்கு வந்துருக்க கதைங்க." என்று மேசையின் கீழிருந்து பேப்பர் கட்டு ஒன்றை எடுத்து மேசை மேல் வைத்தார் சுகுமாரன்.

"எத்தன பரிசு சுகுமாரா?"

“மூன்று பரிசுதான் அய்யா!”

“ஏன் எப்போமே பத்து பரிசுதானே வைப்பீங்க பாளை இதழ்ல?”

“இல்லைங்க அய்யா, இந்த முறை கொஞ்சம் பரிச குறைக்கலாம்னுஞ் அடுத்த போட்டி பத்து பரிசா இருக்கும் அய்யா!”

“ஓகோ! சரிப்பா, நான் குறிப்பிட்ட நாள்ல பரிசுக்குரிய மூன்று கதைகள தேர்ந்தெடுத்து சொல்றேன்.”

“அய்யா, வேற நடுவர் உதவி ஏதாச்சும்..”

“அட நீ வேற, இதுவே எனக்கு பத்தாது, நான்தான் முன்னமே சொன்னனே, வேலையா வெட்டியா?” என்று நகைத்த எழுத்தாளர் வேலுமணி எதிரே மேசையில் இருந்த பேப்பர் கட்டினை எடுத்துக்கொண்டு எழுந்தார்.

“அய்யா இருங்க. காபி சொல்லிருக்கேன். சாப்புட்டு போங்க.”

“என்ன சுகுமாரா, என்னயை வேலை இல்லாதவனு நினைச்சியா? இதோ பாரு!” என்று கையில் இருந்த பேப்பர் கட்டினைக் காட்டியவர் சிரிப்புடனே அங்கிருந்து கிளம்பினார்.

இந்த வயசுலையும் இவர மாதிரி ஒருத்தர் மகிழ்ச்சியா இருக்கமுடியுமா என்ற எண்ணத்துடனே அமர்ந்திருந்த ‘பாளை’ இதழ் ஆசிரியர் சுகுமாரன் அவர் செல்வதைப் புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

தன் சைக்கிளில் வீடு வந்து சேர்ந்த எழுத்தாளர் வேலுமணி சிறுகதைக் கட்டை எடுத்துக்கொண்டு உள் நுழைந்தார்.

“ஏன்மா கமலா, எங்க இருக்க?” என்று குரல் கொடுத்தவர் ஹாலில் உள்ள நாற்காலியில் அமர்ந்தார்.

அங்கு வந்த அவரது துணைவியாரிடம் சிறுகதைக் கட்டைக் கொடுத்தார்.

“இதை என் மேசை மேல வெச்சிடும்மா. இரவு வேலை இருக்கு.”

“ம்ம்ம்! நடுவரா கூப்பிட்டு இருக்காங்களோ?” என நகைத்தவர் சிறுகதைக் கட்டை வாங்கிக்கொண்டு உள்ளே சென்றார்.

சில நாட்களுக்கு பிறகு..

எழுத்தாளர் வேலுமணி சிறுகதைப் போட்டிக்கு வந்த அனைத்து கதைகளையும் திருத்தி வைத்திருந்தார். அதில் தனிப்பட்ட முறையில் அவருக்குப் பிடித்த சில சிறுகதைகளைக்கையில் வைத்துக்கொண்டு அதையே பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது அவர் பின் படுக்கையில் இருந்து எழுந்த அவரது துணைவி கமலா, “ஏங்க, மணி என்ன ஆகுது? இன்னும் இத வைச்சிட்டு இருக்கீங்க. படுத்து உறங்குங்க.”

அவரிடமிருந்து எந்த பதிலுமில்லை. எழுந்து அவர் முன் வந்த கமலா, சிலை போல் காகித்தைப் பார்த்தபடி அமர்ந்திருக்கும் எழுத்தாளர் வேலுமணியை அசைத்தார்.

கண்களின் ஓரம் தேங்கி நிற்கும் கண்ணீரைத் துடைத்தவர் “ஏன் கூப்பிட்டியா?” எனக் கேட்டார்.

“ஏங்க அப்படி மெய் மறந்து என்ன பாத்துட்டு இருக்கீங்க இந்த நடு சாமத்துல?”

“கமலா இந்தக் கதை என்ன ரொம்ப பாதிக்குதும்மா. நல்ல கதை. காட்டுல சுள்ளிப் பொறுக்க போகும் ஒரு பெண்ணோட கதை!”

“பிறகு என்ன பரிச இந்த கதைக்கே கொடுக்க வேண்டியது தானே?”

“அது என்னால முடியாதும்மா. போட்டிக்கான சட்டதிட்டத்தை இந்தக் கதை கடைபிடிக்கல. இதை நான் தேர்ந்தெடுத்தாலும் இதழ்ல ஏத்துக்க மாட்டாங்க.’

“அதான் நீங்க வழக்காம ஒன்னு பண்ணுவீங்களே! அதைப் பண்ணுங்க.” என சிரித்தபடி கூறிவிட்டு படுக்கையில் சென்று படுத்தார் கமலா. எழுத்தாளர் வேலுமணி, அருணாசலத்தின் கதையவே உற்று

நோக்கினார்.

"உச்சி வெயிலில் தன் கிராமத்தை நோக்கி நீளும் ஒத்தை அடிப் பாதை ஒன்றில் நடந்துக் கொண்டிருந்தான் அருணாசலம். அவனது முகம் வாடியிருந்தது. ஓர் கையில் பாளை இதழை இறுகப் பிடித்தபடி நடந்துக் கொண்டிருந்தவனை நோக்கி சைக்கிளை அதிவேகத்தில் ஓட்டிவந்த பாண்டி சட்டென அவன் முன் நிறுத்தினான்.

"டேய் மாப்புள. டவுனுக்குப் போனியே என்னாச்சு? மேகசீன வாங்குனியா? கதை என்னாச்சு?"

அதற்கு சோகத்துடன் "இல்லைடா" எனக்கூறிய

அருணாசலம் சைக்கிளை கடந்து நடந்தான்.

"டேய் மாப்புள விடுடா! அடுத்த முறை பார்த்துக்கலாம்." என அவன் பின்னரே சைக்கிளை தள்ளிக்கொண்டு நடந்தான் பாண்டி.

"டேய் அருணாசலம், நில்லு!" என்று ஒரு குரல் கேட்க, இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். இவர்களை நோக்கி சைக்கிளை ஓட்டிவந்தார் போஸ்ட் மேன். அருகில் நெருங்கிய போஸ்ட் மேன் சைக்கிள் ஸ்டாண்டை போட்டுவிட்டு, "அருணே உன் பேருக்கு கடிதாசி ஒன்னு வந்துருக்கு இந்தா!" என்று அந்தக் கடிதத்தை அவன் கையில் கொடுத்துவிட்டு கையொப்பம் பெற்றுக்கொண்டு சென்றார்.

"டேய் மாப்புள, உனக்கு யாருடா கடிதாசிலாம் அனுப்புறது?" என வியந்தான் அருகில் சைக்கிளுடன் நின்றிருந்த பாண்டி. "தெரியலடா!" என்று அந்தக் கடிதத்தைப் பிரித்தான் அருண். அதனுள் அவன் அம்மாவிற்கு தோல் செருப்பு வாங்குவதற்கும், தங்கைக்குப் பாவாடை சட்டை வாங்குவதற்கும் ஏற்ப பணம் இருந்தது. அதைப் பார்த்த இருவருமே வியந்தார்கள்.

"டேய் பாண்டி, என்னடா இது, பணம் இருக்கு!"

"அதான்டா எனக்கும் புரியல!"

"கடிதாசில என்ன எழுதியிருக்குனு படி!"

அருணாசலம் கடிதத்தைப் படிக்கத் தொடங்கினான்.

"அன்புள்ள அருணாசலத்திற்கு,

உங்கள் நலம் விரும்பி எழுதுவது. நான் உங்கள் கதையை முழுதுமாகப் படித்தேன். அருமையான கதை. ஆனால் எழுத்துநடை சிறிது முன்னேற வேண்டும். கையெழுத்தும் அருமை. உங்கள் எழுத்தை வைத்து பார்த்தால் புதிய எழுத்தாளர்போல் தெரிகிறது. மிக்க மகிழ்ச்சி! உங்கள் எழுத்து மேலும் மேம்பட என் வாழ்த்துக்கள்! இதில் நான் சேர்த்திருக்கும் பணம் தங்கள் கதைக்கான சிறப்புப் பரிசு! வாழ்க வளமுடன்!

இப்படிக்கு உங்கள் நலம் விரும்பி." என்று கடிதத்தைப் படித்து முடித்த அருணாசலத்தின் இதழ்கள் பூத்தது. பெரும் புன்னகையுடன் பாண்டியைப் பார்த்தான்.

"டேய் மாப்புள, அருமைடா!" என்று பாண்டியும் சிரித்தான்.

குதூகலம் அடைந்த அருணாசலம் "ஏய்!.." என்று கடிதத்தைக் காற்றில் ஆட்டியபடி ஓடினான்.

"டேய் மாப்புள நில்லுடா. முதல்ல கருப்பனுக்கு காணிக்கையைப் போட்டுட்டு போவோம்டா!" என்று கத்திக்கொண்டே சைக்கிளை தள்ளிக்கொண்டு அருணாசலத்தின் பின் ஓடினான் பாண்டி.

பாரத நாட்டியம்

நாட்டின் கோலம் மாறினாலும்
அவள் நாட்டியக் கோலம் மாறவில்லை!
முழங்கால் நாகரிகம் மாறினாலும்
அவள் ஐதிமுழக்கம் மாறவில்லை!
பைந்தமிழ் தேயக் கண்டாலும்
அவள் பைங்குணங்கள் தேயக் கண்டதில்லை!
இடைக்கால ஆளுமைச் சீக்குலைந்தாலும்
அவள் இடையாளுமை சீர் குலைவதில்லை!
மாநில மத்திய பிரிவினை கண்டாலும்
வன்மார்பக மத்தியில் பிரிவினை கண்டதில்லை!

கொடுங்கோல் ஆட்சி நடக்க கண்டேன்!
அவள் பூவிதழ் கடுவிதழாகக் கண்டேன்!
முப்புறமும் காவியகாவியம் பேசக்கண்டேன்!
நுனி மூக்கு கோபத்தில் சிவக்க கண்டேன்!
கண் மூடி அனேகர் நடக்க கண்டேன்!
அவள் கண்ணோரவழுகை மலரக் கண்டேன்!

மு.ரா.

கண்களும் காதுகளும்

மலை மலையே
நதி நதியே
பார்க்கப்படக்கூடிய நதியை காணமுடியாது
கேட்கப்படக்கூடிய நதியை செவியுறமுடியாது
எது பார்க்கப்படுகிறதோ அது நிழல் மாத்திரமே
எது கேட்கப்படுகிறதோ அது எதிரொலி மாத்திரமே
மலைக்கு அப்பால் காண்பது பார்க்கயியலாத கண்களால் பார்க்கயியலாததை பார்ப்பது
நதியை கேட்பது கேட்கயியலாத காதுகளால் கேட்கயியலாததை கேட்பது
மலை மலையல்ல
நதி நதியல்ல
ஒரு தேவாலயத்தை காணமுடிகிற கிராமத்திலோ
மணிச்சப்தத்தை கேட்கமுடிகிற நாட்டுப்புறத்திலோ
சில முடிவற்ற தொலைவிடங்களிலும்
சில ஆழமான இடங்களிலும்
ஏதோவொன்று பார்க்கப்படுகிறது
ஒரு சப்தம் கேட்கப்படுகிறது.

பார்க் யென்ஹூய்

தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

VARSHA™

திக்குதிக்கும்

தீபாவளி

நல்வாழ்த்துக்கள்

தலை

ஸ்ரீரங்கம்

ஏழாவது திருச்சுற்றை பூர்ணம் புஷ்கரன் என்னும் இரு துவாரபாலகர்கள் காவல் காக்கின்றனர். இதில் பாவனாச்சார், ஆஞ்சநேயர், ஸ்ரீ ஹயக்ரீவர், மகா தேசிகர், திருவரங்கத்தமுதனார், கூரத்தாழ்வார், முதலியாண்டான், பெரிய நம்பி சந்நிதிகளும், தேர், சித்திரை தேர்களும் இருக்கின்றன.

ஆறாவது திருச்சுற்றை சக்கரம் சங்கம் என்னும் இரு துவாரபாலகர்கள் காவல் புரிகின்றனர். இங்கு உத்தம நம்பி, எம்பார், ஹயக்ரீவர், பட்டர், ஆஞ்சநேயர், மணவாள முனிகள், கோயில் கந்தாடை அண்ணன் சன்னதிகளும் அகோபில மடம், புதிய தேசிகர் மடம், அரையரது மடங்களும் உள்ளன.

ஐந்தாவது திருச்சுற்றை தர்மாத்யக்ஷன், நியந்திர என்னும் இரு துவார பாலகர்கள் காவல் செய்கின்றனர்.

ஸ்ரீமத் நாதமுனி, ஆண்டாள், வேணுகோபாலன், அமுத கலச கருடன், சக்கரத்தாழ்வார், இவருக்கு பின்புறம் நரசிம்மர், தாயார் ஸ்ரீரங்க நாச்சியார், இவர் திருவரங்கக் கோயிலைத் தாண்டி வெளியே செல்லாத காரணத்தால் படிதாண்டா பத்தினி என்பர். தேசிகர், கோதண்டராமர், பிள்ளை லோகாச்சாரியார், பார்த்தசாரதி உடையவர், திருப்பாணாழ்வார், விட்டல் கிருஷ்ணன், தொண்டரடிப் பொடியாழ்வார், கூரத்தாழ்வார், ஆஞ்சநேயர் சன்னதிகள் உள்ளன.

இதில் கம்பர் ராமாயணத்தை அரங்கேற்றிய மண்டபமும், ஐந்து குழி மூன்று வாசல் மற்றும் ஆயிரம் கால் மண்டபமும் உள்ளன. இம்மண்டபத்தில் 95 தூண்கள்தான் உள்ளன. நேரமிருந்தால் எண்ணிப் பார்க்கலாம். மீதியுள்ள 49 தூண்கள் வைகுண்ட ஏகாதசி விழாவின்போது மணல்வெளியில் 49 மரத்தூண்கள் நடப்பட்டு ஆயிரம் தூணாக கருதி விழா நடக்கிறது.

நான்காவது திருச்சுற்றை கங்கை யமுனை என இரு துவாரம் பாலகிகள் காவல் புரிகின்றனர். கார்த்திகை கோபுர வாசல்.

இங்கு வேணுகானன், நம்மாழ்வார் (மதுரகவியாழ்வார்), முதலாழ்வார், தன்வந்திரி பெருமாள், சந்தான கோபால கிருஷ்ணன் — ராதா, வியாசர், வராக பெருமாள், வரதராஜ பெருமாள்,



புவனகிரி செயபாலன்

சொர்க்கவாசல் கோதண்டராமர், பரமபதநாதன், ஸ்ரீநிவாசர், திருமழிசை ஆழ்வார், கண்ணன், போஜ ராமர், திருக்கச்சி நம்பி, ஆளவந்தார், ஸ்ரீ வரதர், கருடாழ்வார் என சந்நிதிகளையும், பூச்சாத்து மண்டபம், நாலுகால் மண்டபம் இங்கு கண்ணன் சன்னிதி. இதற்கு எதிராக கம்பத்தில் விபீஷணன் ஸ்ரீரங்க விமானத்தை பெற்றுச் செல்லும் காட்சி உள்ளது. சூரிய புஷ்கரணி உள்ளன.

மூன்றாவது திருச்சுற்றில் சக்கர பெருமாள், கருட பிரான் என இருவர் காவல் செய்கின்றனர். இங்கு ஆரியபட்டான் திருவாசல், ஹயக்ரீவர், சரஸ்வதி சந்நிதிகள் உள்ளன. பரமபதவாசல் இதன் வழியே சந்திர புஷ்கரணி, தாயார் சந்நிதி செல்லலாம். வராகமூர்த்தி சன்னதியில் வந்து சென்றதை கைதட்டி தெரியப் படுத்துவது வழக்கம்! நெய் கிணறுகள், கொடியேற்ற மண்டபம், ஆஞ்சநேயர், பலிபீடம், கொடிமரம் துவஜஸ்தம்பம் உள்ளன.

இரண்டாவது திருச்சுற்றை பத்திரன் சுபத்திரன் என்ற இருவரும் துவார பாலகர்கள் முன்புறத்தில். இங்கு பெருமாள் தாயார் திருவாபரணங்கள் வைக்கும் அறை. இதற்கு 'தெக்கலறை' என்று பெயர்.

பெருமாளுக்கு சந்தனம் அரைக்கும் இடம், பரிவட்டங்கள் வைக்கும் இடம், மாலை கட்டும் இடம், பெருமாளுக்கு புனுகெண்ணைய், கஸ்தூரி திலகம் தயாரிப்பது, யாகசாலை என உள்ளன, விஷ்வக்சேனர், சேரகுலவல்லி, துலுக்க நாச்சியார், கருடன் சன்னிதிகள். கிளி மண்டபம் வாயிலிருந்து மேலே பார்த்தால் விமானத்தில் உள்ள பரவாசுதேவரைத் தரிசிக்கலாம். திருமஞ்சனக் காப்பு மண்டபம், ஸ்ரீ சைலேச தனியன் தோன்றிய இடம், விஸ்வரூபம் நடக்கும் இடம், கண்ணாடி அறை என உள்ளது.

முதலாவது திருச்சுற்றை ஐயன், விஜயன் என இரு துவாரபாலகர்கள் காவல் செய்கின்றனர். இவர்களை ஒருசமயம் துர்வாச முனிவர் சாபத்தினால் கிருதயுகத்தில் இரண்யன் இரண்யாட்சன், திரேதாயுகத்தில் ராவணன் கும்பகர்ணன், துவாபர யுகத்தில் கம்சன் சிசுபாலன் எனப் பிறந்து மகாவிஷ்ணுவால் வதம் செய்யப்பட்டவர்கள்.

கி.பி 1311—ல் அலாவுதீன் கில்ஜி தில்லியில் அரியணை ஏறியதும், தென் இந்தியா மீது படையெடுத்து வர, மாலிக் கபூரை அனுப்பினான், அவன்

காஞ்சிபுரம், கண்ணனூர், திருவரங்கம் கோயிலை சூறையாடினான். மதுரைக்குப் போகும் போது விக்கிரம பாண்டியன் மாலிக்காபூரை எதிர்த்துப் போரிட, மேற்கொண்டு போக முடியாமல் திரும்பும்போது,612 யானைகள் 20 ஆயிரம் குதிரைகள் 900 மணங்கு ரத்தினங்கள் இவற்றுடன் தங்க நகைகள் அடங்கிய இரு பெட்டிகள் கொண்டு சென்றான்.

ஸ்ரீரங்கத்தில் கருவூலத்தைக் கொள்ளை அடித்தான். கோயிலில் இருந்த அழகிய மணவாள பெருமாளையும் (அரங்கன்) சேரகுலவல்லி விக்ரகங்களையும் டில்லி கொண்டு போய் கொடுத்தான். அவற்றை அலாவுதீன் கில்ஜி தன் பிரபுக்களுக்கு பங்கிட்டுக் கொடுத்தான்.

அரங்கன் உற்சவமூர்த்தி அப்துல்லா உசேன் பாஷாவிடம் சென்றது. அவன் மகள் சுரதாணி விக்ரகத்தைப் பார்த்ததும் அதன் மீது அன்பு கொண்டு விளையாடும் பொருளாகக் கருதி தன் படுக்கை அறையில் வைத்துக் கொண்டாள்.

கரம்பனூரில் ஒரு அம்மையார் பெருமாளை சேவிக்காமல் ஒருநாளும் சாப்பிட மாட்டார். டில்லிக்கு விக்ரகத்தைக் கொண்டு செல்வதைக் கேள்விப்பட்டு தானும் அவர்களுடன் சென்று, மாறுவேடத்தில் அப்துல்லா உசேன் பாஷா மகளிடம் இருப்பதை தெரிந்து கொண்டாள்.

திருவரங்கம் வந்து அதனைத் தெரிவிக்க, அங்கிருந்தோர் அவளுக்குப் 'பின் சென்ற வள்ளி' எனப் பெயரிட்டு அழைத்ததுடன் சகல மரியாதையும் செய்தனர். ஸ்ரீரங்க நாச்சியாரை (தாயாரை) வில்வ மரத்தடியில் எழுந்தருளச் செய்துவிட்டு மூலவர் பெரிய பெருமாளை மூடி கல்லால் சுவர் எழுப்பினர். 'பின்சென்ற வள்ளியுடன்' 60 பேர் டெல்லி சென்றனர். தில்லியில் அவள் மட்டும் முன் போல் வேடமிட்டு அரண்மனையில் புகுந்து சுரதாணியுடன் விக்ரகம் இருப்பதைத் தெரிந்து உடன் வந்தவர்களிடம் தெரிவித்தார்.

அப்துல்லா உசேன் பாஷா முன் ஆடல் பாடல்களை நடத்தினர். மகிழ்ச்சி அடைந்த பாஷா பொன்னும் பொருள்களையும் அளித்தான். அவற்றை வாங்க மறுத்து அழகிய பெருமாள் விக்ரகத்தைத் தருமாறு வேண்ட, தன் சேவகர்களைக் கூப்பிட்டு "இவர்கள் விரும்பிய விக்ரகத்தை எடுத்து கொடு!" என உத்தரவிட்டான்.

மேலும் "சுரதாணி தூங்கும்போது எடுத்துப் போகலாம்" என்றான். அதன்படி அன்று இரவே விக்ரகத்துடன் வெளியேறினர். மறுநாள் காலை எழுந்த சுரதாணி விக்ரகத்தை தேடவும், அது இல்லாமல் போகவே மனம் கலங்கினாள். மகளின் கவலையை அறிந்த சுல்தான் தன் ஆட்களை அனுப்பி பறித்து வரச் சொன்னான்.

அவர்கள் முதல் நாள் இரவே புறப்பட்டுச் சென்றது தெரிந்ததும், சுரதாணியும் வீரர்களுடன் தேடிச் சென்றாள்.இவர்கள் தேடி வருவதைக் கேள்விப்பட்டதுமே விக்ரகத்துடன் 3 கொடவர்கள், மாப்பிள்ளையும் மருமகனுமாக திருமலைக்குச் சென்றனர். மற்ற 57 பேரும் வேறு வழியில்லாமல் பயணித்தனர். விக்கிரகத்தைத் தேடி திருவரங்கத்திற்கு சுரதாணி வந்தாள். பெருமாள் இல்லை என்று தெரிந்ததும் அங்கேயே உயிரை விட்டாள்.

ராஜமகேந்திரனின் திருவீதி வடகிழக்கு மூலையில் திருநடை மாளிகையில் அறையாகத் தடுத்து சுரதாணியை சித்திரமாக எழுதி பிரதிஷ்டை செய்துள்ளனர். பெருமாள் நியமனத்தினாலே நித்தியமாக (நிவேதனமாக) கோதுமை ரொட்டியும், மதுரா பருப்பு கிச்சடி, பொங்கலும் பெருமாளுக்கு செய்வர். இது துலுக்க நாச்சியார் சந்நிதி, பகல் பத்து திருநாளில் உற்சவப் பெருமாள் முஸ்லிம் போல் லுங்கி (கைலி) வஸ்திரம் அணிந்து துலுக்கநாச்சியாருக்கு காட்சி தருவது வழக்கம்!

மாலிக்காபூருக்குப் பின் முகமது பின் துக்ளக் (1325 முதல் 1351) ஆட்சியில் திருவரங்க ஆலயத்தை கொள்ளையடிக்கவந்தபோது வைணவ அடியார்கள்,

திருவரங்க நகரவாசிகள், தேவதாசிகள் நேருக்கு நேர் போர்புரிந்து தங்கள் இன்னுயிரைத் தந்து ஆலயத்திற்கு பெரும் சேதம் ஏற்படாமல் தடுத்தனர்.

திருவரங்கக் கோயிலின் மீது முஸ்லிம் படையெடுப்பை எதிர்பார்த்த கோயில் நிர்வாகிகள் கோயிலின் விலையுயர்ந்த அணிகலன்கள் வழிபாட்டிற்குரிய முக்கிய பொருட்கள் உற்சவ பெருமாள் எடுத்துச்சென்று திருகோஷ்டியூர், காளையார் கோயில், அழகர்மலை, திருநெல்வேலி, மதுரை, நாகர்கோயில், கோழிக்கோடு, குண்டலுபேட் வழியாக திருநாராயணபுரம், மேலக்கோட்டை, திருப்பதி என அலைந்து கடைசியாக கி.பி ஆயிரத்து 1371 வைகாசி 17ஆம்



நாள் திருவரங்கம் எழுந்தருளுகிறார். அரங்கன் திரும்பிவர ஆழ்வார்கள் செய்த தியாகங்கள், போர்கள், உயிர்ச் சேதங்கள் கணக்கிலடங்கா!

கர்ப்பக் கிரகம்

கர்ப்பக் கிரகத்திற்கு மேல் இருக்கும் விமானம் 'ஓம்' என்னும் பிரணவ மந்திரத்தின் வடிவில் இருக்கிறது. இதன் நான்கு பக்கமும் ரிக் யஜுர் சாமம் அதர்வணம் என்னும் நான்கு வேதங்களைக் குறிக்கும். 13 கலசங்களும் காயத்ரி மந்திரத்தை உணர்த்துகின்றன.

ரங்க மண்டபத்தில் இருக்கும் 24 தூண்களும் காயத்ரியின் 24 அட்சரங்களைக் குறிக்கும். வேதங்களின் தேவதைகள் ஒவ்வொரு கோபுரத்தின் மூலம் கோவிலைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது ஐதீகம்! மூலவருக்கு திருவரங்கன், ஸ்ரீ ரங்கராஜன், கொண்டல் வண்ணன், நம் பெருமாள், பெரிய பெருமாள் என்ற திருநாமங்கள்.

திருவரங்கன்: பரமபதத்தில் இருந்து வந்து பூலோகத்தில் அரவணை மேல் பள்ளி கொண்டு எல்லோரையும் காப்பதற்காகவே சயன கோலத்தில் இருந்து சேவை சாதிப்பதால் திருவரங்கன்.

ஸ்ரீ ரங்கராஜன்: ஸ்ரீரங்கத்தில் இருந்து கொண்டு எண்திசைக்கும், ஏழுலகுக்கும் மாமன்னனாக இருப்பதால் ஸ்ரீ ரங்கராஜன்.

கொண்டல் வண்ணன்: திருப்பாணாழ்வார் பாசுரத்தில் 'என் அமுதினைக் கண்ட கண்கள் மற்று ஒன்றினைக் காணாலே' என்பதால் கொண்டல் வண்ணன்.

நம்பெருமாள்: ரங்கா, ரங்கா என்று பேரனைக் கூப்பிட்டவளுக்கு பேரனாகவே வந்து கரையுடன் தயிர் அமுதை

உண்டதனால் நம்பெருமாள்.

பெரிய பெருமாள்: வலக்கையை திருமுடியில் படும்படி வைத்து இடக்கையை திருவடிப்புறமாக வைத்து துயில் கொண்டு சர்வ லோக சரண்யன் என்பதால் பெரிய பெருமாள்.

தாயார் அரங்கநாயகி. கருவறையில் நின்ற கோலத்தில் உற்சவர் அழகிய மாணவ பெருமாளுடன் ஸ்ரீதேவி, பூதேவி.

திருவரங்கன் ஸ்ரீதேவி, பூதேவி, ஸ்ரீரங்கநாயகி, உறையூர் கமலவல்லி, சேரகுலவல்லி, ஸ்ரீ ஆண்டாள், துலுக்க நாச்சியார் என எழுவரைத் துணையாகப் பெற்றவர்.

தலவிருட்சம் புன்னை. தீர்த்தம் சந்திர புஷ்கரணி, பிலவ தீர்த்தம் சம்பு தீர்த்தம் என 12 தீர்த்தங்கள்.

கல்வெட்டுகள்

சுமார் 400 சோழர் காலக் கல்வெட்டுகள் திருவரங்கத்தில் திருச்சுற்றுகளில் உள்ளன. கிருஷ்ண

தேவராயர் அளித்த 2 செப்புப் பட்டயங்கள் மற்றும் சில பட்டயங்களும் இருக்கின்றன. முதலாம் பராந்தக சோழன் கி.பி 953—ல் இக்கோயிலுக்கு வெள்ளி குத்து விளக்கு, கற்பூரம், பட்டு திரிநூல் வாங்குவதற்கும் இதரச் செலவினங்களுக்காக 51 பொற்காசுகள் தானமாக வழங்கியுள்ளான்.

கி.பி 1223 முதல் 1225 கங்க அரசர்கள் ஸ்ரீரங்கம் கோயிலைக் கொள்ளையடித்தார்கள். பிறகு 1825 முதல் 1828—ல் ஆட்சிக்கு வந்த மாறவர்மன் சுந்தரபாண்டியன் கங்ககர்களை தமிழ்நாட்டிலிருந்து விரட்டியதாக சொல்லப்படுகிறது.

கி.பி 1634 முதல் 1637 காலகட்டத்தில் ஹொய்சால அரசர்கள். அவர்களில் சோமேஸ்வரன் என்பவன் திருவரங்கம் கோயிலைச் சீர்செய்து மூன்றாம் சுற்றில் யாகசாலையை நிறுவினான். அவன் வழி வந்த தர்மதேவன் கோவிலுக்கு ஏராளமாக தானங்கள் வழங்கியதுடன் புனருத்தானம் செய்தவன். ஐந்தாவது திருச்சுற்றில் வேணுகோபாலகிருஷ்ண சந்நிதி கட்டியதாக சொல்லப்படுகிறது.

கி.பி 1768 முதல் 1308 வரை பாண்டிய அரசர்கள் மாறி மாறி ஆட்சி செய்தனர். மாறவர்மன் குலசேகரப் பாண்டியன் காலத்தில் தென்னகம் வந்த போர்த்துகீசிய மார்கோபோலோ இக்கோயிலையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளைப் பற்றிய குறிப்புகளை எழுதிச். சென்றதாகத் தெரிகிறது.

கி.பி 1565 வரை தலைக்கோட்டை யுத்தத்தில் விஜயநகரப் பேரரசு வீழ்ச்சி அடையும் வரை விஜயநகர அரசர்கள் கோயிலுக்கு ஏராளமான செல்வங்களைத் தந்ததுடன் அன்னியர் ஆக்கிரமிப்பால் திருவரங்கத்தில் நின்றுபோன விழாக்கள் மற்றும் உற்சவங்களை மீண்டும் தொடர ஏற்பாடு செய்தனர்.

நாயக்க மன்னர் (கி.பி 1659 முதல் 1682 வரை) காலங்களில் இக்கோயிலுக்கு ஏராளமான திருப்பணிகள் செய்துள்ளனர். சொக்கநாத நாயக்கர் ஆட்சியில் பல திசைகளிலிருந்தும் கோயிலுக்கு வர சாலைகள் அமைத்தார். எதிரிகள் எளிதில் வந்து தாக்க முடியாதபடி அரண் போன்ற கதவுகளை நுழைவு வாயிலில் பொருத்தினார். கோயிலின் மூன்றாம் திருச்சுற்றில் ஒரு மண்டபத்தையும் கண்ணாடி அறையையும் கட்டுவித்தார். கோயில் தூண்கள் பலவற்றில் நாயக்க மன்னர்கள் இறைவனைத் தொழுத வண்ணம் உள்ள சிற்பங்கள் பலவற்றை இன்றும் காணலாம்.

1809—ல் கர்நாடகம், ஆற்காடு நவாப்பின் ஆட்சிப் பகுதிகள் கிழக்கிந்திய கம்பெனியின் கீழ் வந்தது. அப்போது திருச்சி மாவட்ட ஆட்சியராக இங்கிலாந்தைச் சார்ந்த 'வேல்ஸ்' என்பவர் திருவரங்கக் கோயிலைப் பற்றி எழுதியிருந்த நூல்களைத் தொகுத்து ஒன்றாக்கி ஒரே நூலாக எழுதி வெளியிடுமாறு அதிகாரிகளை பணிக்க, அதன்படி எழுதப்பட்டது.

1875—ல் இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட ஏழாம் எட்வர்ட் அரசர் இக்கோயிலுக்கு மிகப்பெரிய பொற்குவளை ஒன்றைப் பரிசாகத் தந்தது இன்றும் கருவூலத்தில் உள்ளது.

திருவிழாக்கள்

ஒவ்வொரு தமிழ் மாதமும் வருடத்தில் 200 நாட்களுக்கு அதிகமான நாட்கள் உற்சவங்கள் நடக்கும். சித்திரை, தை, பங்குனி மாதங்களில் பிரம்மோற்சவம் நடக்கும். வருடத்திற்கு மூன்று பிரமோற்சவம் நடத்துவது வைணவக் கோயில்களில் இங்கு மட்டுமே!

சித்திரையில் விருப்பண உடையாரால் ஏற்படுத்தப்பட்ட விருப்பன் திருநாள் 10 நாள் பிரம்மோற்ஸவம்.

வைகாசியில் வசந்த உற்சவம் ஒன்பது நாட்கள். ஆனியில் நம் பெருமாளுக்கு அபிஷேகம் என்னும் திருமஞ்சன சேவை. எம்பெருமானின் திருப்பாதங்களை எல்லாம் களைந்த நிலையில் ஏகாந்த சேவை. அப்போது பெருமாளுக்கு தைலக்காப்பு. திருமுகத்தைத் தவிர மற்ற அவயங்களை சேவிக்க முடியாதபடி திரையிட்டு அழைப்பது வழக்கம்!

ஆடியில் ஆடிப்பெருக்கன்று பெருமாளைப் பல்லக்கில் அம்மா மண்டபத்திற்கு எழுந்தருளச் செய்து சேவை சாத்தி, காவிரிக்கு சீர் வரிசை, மாலை, தாலிப்பொட்டு, வெற்றிலைப் பாக்கு போன்ற பொருட்களுடன் காவிரி ஆற்றில் விடுவது.

ஆவணியில் கண்ணன் பிறந்த நாளில் ஸ்ரீ பண்டாரம் எழுந்தருளி பெரியாழ்வார் பாசுரங்களைக் கேட்டபின், திருமஞ்சனம் நடைபெறும். பிவித்ரோத்ஸ்தவம், சுக்கிலப் பட்சம் தசமியில் தொடங்கி ஒன்பது நாட்கள் நடைபெறும்.

புரட்டாசியில் நவராத்திரி உற்சவம் தொடர்ந்து 9 நாட்கள். விஜயதசமியன்று காட்டழகிய சிங்கர் சன்னிதி பக்கத்தில் உள்ள தோப்பிற்கு எழுந்தருளி மாலையில் குதிரை வாகனத்தில் திரும்புவார்.

ஐப்பசியில் பெருமாளின் ஊஞ்சல் விழா ஒன்பது நாட்கள். அரையர்கள் தாலாட்டு பாடுவர். தீபாவளி அன்று பெருமாளுக்கு எண்ணைக் காப்பிட்டு திருமஞ்சனம் செய்வர். ஆஸ்தான மண்டபத்தில் எழுந்தருளியபோது ஆயிரம் முழு ரூபாய்கள் கொண்டு இரு கைலிகளில் கட்டி பெருமாள் திருவடியில் மேளதாளம் முழங்க சமர்ப்பிப்பர்.

கார்த்திகையில் கைசிக ஏகாதசி புறப்பாடு. கைசிக புராணத்தையும் பாசுரங்களையும் பெருமாள் கேட்டு அருள்வார். சந்தன மரத்தின் கீழ் புறம் சுற்றிச் சுற்றி செல்லும் அமைப்பில் யாளி சிற்பத்துடன் கூடியசுருள் படிகள். இதன் வழியே அரங்கன் படியேறும் போது பச்சை கற்பூரம் தூவுவர். இதைப் படியேற்றம் என்கின்றனர். திருமஞ்சனத்துக்குப் பின் சன்னதிக்கு எழுந்தருளுவார். கார்த்திகை கோபுர வாசல் பக்கம் சொக்கப்பனை ஏற்றுவது கண்டருள்வார்.

மார்கழியில் பகல் பத்து தொடக்கத்தில் பெருமாளுக்கு எதிரில் அன்றிரவு அரையர்கள் திருமங்கையாழ் வாரின் பாசுரங்களைப் பாடி சேவிப்பது வழக்கம். பத்தாவது நாள் பெருமாளுக்கு நாச்சியார் திருக்கோலம் சாற்றப்படுகிறது. இதை மோகினி அவதாரம் என அழைப்பர்.

வைகுண்ட ஏகாதசியன்று இராப்பத்து தொடங்கி பரமபத வாசல் திறக்கப்படும். இந்நாளில் பரமபதவாசல் வழியாக ஆயிரங்கால் மண்டபத்திற்கு ரத்ன அங்கியுடன் எழுந்தருளி சேவிப்பவருக்கு அருள்வார். அவர்முன் அரையர்கள் திருவாய்மொழி இசைப்பர்.

தைமாதப் பிறப்பன்று நாச்சியாருடன் சங்கராந்தி மண்டபத்தில் எழுந்தருளுவார். பெருமாள் முன் அரையர்கள் திருப்பாவை முப்பது பாசுரங்களையும் இசைப்பர். ஒன்பதாம் நாள் நாச்சியாருடன் தேரில் எழுந்தருளி சேவை சாதித்த பின் தாயார் சன்னதிக்கு எழுந்தருளுவார். அங்கே குத்தகைக்கு விடப்பட்ட கோயில் நிலங்களில் இருந்து அறுவடை செய்து வரப்பட்ட நெற்கதிர்களை வெள்ளை பிள்ளை என்பவர் யானை மீது கொண்டுவந்து பெருமாள் முன் சமர்ப்பிப்பார். கோயில் சம்பந்தப்பட்ட கணக்குகளை பெருமாளே நேரில் தணிக்கை செய்வதாக ஐதீகம். இதற்கு கதிரலங்காரம் என்பர்.

மாசியில் தெப்போற்சவம் ஒன்பது நாட்கள். இந்த உற்சவத்தில் கருட வாகனத்தில் காட்சி அளிப்பார். மாசிக்கருடன் காசிக்குப் போனாலும் கிடைக்காது. ஒன்பதாவது நாள் சூரிய பிரபையில் சேவை சாதிப்பார். அப்போது ஏராளமான தீவட்டிகளை பெருமாளுக்கு அருகில் ஏந்தி செல்வதைப் பந்தக் காட்சி என்று அழைப்பர்.

பங்குனி மாதத்தில் நடக்கும் பிரம்மோற்சவத்தில் தினமும் ஒவ்வொரு வாகனத்தில் எழுந்தருளுவார். ஆறாம் நாள் திருவரங்கம் அருகிலுள்ள உறையூர் சென்று அங்குள்ள சோழர்குல நாச்சியாரைத் திருமணம் செய்துகொண்டு ஒரே ஆசனத்தில் நாச்சியாருடன் எழுந்தருள்வார். ஒன்பதாம் நாள்

திருவரங்கம் திரும்ப, பெருமாள் மீது பிணக்கு கொண்ட நாச்சியார் கதவை சாத்தி விடுவார். இதைப் பிரணயக் கலகம் என்று அழைப்பர்.. இருவருக்கும் உள்ள பிணக்கை நம்மாழ்வார் தீர்த்து வைப்பதாக ஐதீகம் அதன்பின் ஒருசேர காட்சியளிப்பர்.

பங்குனி உத்திரத்தன்று மட்டும் ஒரே சிம்மாசனத்தில் பெருமாளும் தாயாரும் மிக அருகருகே எழுந்தருளி இருப்பார்கள். இதற்கு சேர்த்தி சேவை என்று பெயர்

பூஜைகள்

எம்பெருமானுக்கு பஞ்சராத்ர ஆகம விதிகளின்படியும் தென்கலை சம்பிரதாயப் படியும் பூஜைகள் செய்யப்படுகின்றன.

பெருமாளுக்கு தினமும் காலை பூஜை காலத்தில் பொங்கல் தளிகை. மதியம் பெரிய அவசரம் பெரிய அண்டாவில். மாலையில் சீராணம் என்னும் பால் சாதம். இரவு செலவு சம்பா அரவணை அமுதும் நிவேதனம் செய்யப்படுகிறது. அரவணை செய்தபின் அமுது செய்விப்பர். அப்போது வேணு கானம் வாசிப்பர்.

நம்பெருமாளுக்கு சாத்தப்படும் மாலைகளைத் தொடுப்பதற்கு தொண்டரடிப் பொடியாழ்வார் நந்தவனத்தில் உள்ள பூக்களைத்தான் பயன்படுத்துவர். இந்தப் பூவை விற்க மாட்டார்கள். அவர்கள் தங்கள் வாய் மற்றும் மூக்கு பகுதிகளைத் வெள்ளை துணியால் மூடியபடி பூப்பறிப்பர். தும்மல் மூச்சுக்காற்று எச்சில் பூக்களின் மேல் பட்டுவிடக் கூடாது என்பதற்காக. பெருமாளுக்கு தினசரி பூஜை காலங்களுக்காக பிரசாதம் தயாரிப்பது மண்பாண்டங்களில்தான். ஒருமுறை பயன்படுத்தியதை மறுமுறை பயன்படுத்துவது கிடையாது.

திருமஞ்சனக் காலங்களில் உற்சவருக்கு பால், தயிர், இளநீர் மற்றும் திருமஞ்சன திரவியங்களைக் கொண்டு அபிஷேகம் செய்யப்படுவதில்லை, முக்கிய திருமஞ்சன நாட்களில் நம்பெருமாளுக்கு வெந்நீர் அபிஷேகம் செய்வர், வெந்நீர் கை பொறுக்கும் அளவுக்கு இளம் சூட்டில் இருக்க வேண்டும் வெந்நீரில் கை விரல் விட்டு சோதித்த பின்னரே அபிஷேகம் செய்வர். அபிஷேகத்தின்போது ஏழெட்டு முறை கைலி (லுங்கி) மாற்றிக்கொள்வார். எம்பெருமான் ஒவ்வொரு முறையும் ஈரமாகிப் போகும் கைலியைப் பிழிந்து அதில் இருக்கும் நீரைப் பக்தர்களுக்கு தீர்த்தமாக தருவார்கள் அரையர்கள். அதற்கு ஈரவாடை தீர்த்தம் என்பர்.

பூவுலகின் பேரழகன் நம்பெருமாள் உற்சவப் விழாக்களில் புறப்படும் சமயங்களில் பெருமாள் கன்னத்தில் திருஷ்டி பொட்டு வைப்பதை மறக்கமாட்டார்கள். சயனித்திருக்கும் மூலவரைத் தரிசிக்கும் போது முதலில் பாதத்தைக் கண்ணுற்ற பின்னரே திருமுகத்தைக் காண வேண்டும் என்பது வழக்கம்!

புத்தக விமர்சனம்

துருப்பிடித்த ஞாபகக் குறிப்புகள்

நூல் ஆசிரியர்:
வழிப்போக்கன்

வாசகசாலை

சென்னை –73

விலை : ரூ. 110



நீங்காத நினைவுகளில் மட்டுமே வாழ்பவர்களுக்கு சில நினைவுகள் மிகவும் கசப்பானவையாகவோ, சில நினைவுகள் மெய்மறக்கச் செய்யும் இனிமையானவைகளாகவோ இருக்கலாம். புதையுண்டு கிடக்கும் அந்த நினைவுகளிலிருந்தே கிளர்ந்தெழுகின்றன இந்தக் கவிதைகள்.

"நிறைய நியாயமான கவிதைகள் இதில் இருக்கின்றன. வார்த்தைகளுக்கு வலிக்காமல் சோகங்களைப் பகிர்கிறான், சொற்கள் தங்கள் நிறங்களை மாற்றிக்கொள்ளும் வேளையில் கோபப்படுகிறான், இரண்டையுமே ரசிக்கிறேன் நான். கோபத்திலும் சோகத்திலும் கூட சிரிக்கத் தெரிந்த கோட்டிக்காரன்தான் இந்த வழிப்போக்கன். வாழ்ந்து கொண்டிருப்பவனை வாழ்த்த என்ன இருக்கிறது? சோர்ந்து போகாமல் இருக்கட்டும் அவன் சோகங்களும் கோபங்களும்." என்கிறார் முன்னுரையில் கவிஞர் ஜெ.பிரான்சிஸ் கிருபா.

இவற்றில் உள்ள குளிர்ச்சியையும் வெப்பத்தையும் வைத்தே மிக எளிதாய் கணித்து விடலாம் அது எம்மாதிரியான நினைவுகளாய் இருக்குமென்று. மொழியிருந்தும் அவ்வப்போது கவிஞனுக்குள் ஏற்படும் பூகம்பங்களை யாரிடமும் பகிர்ந்துகொள்ளத் தெரியாதவனாய் தீவிரத்தின் பிடியில் சிக்கித் தவிக்கையில் இந்தச் சொற்களே கவிஞனுக்கு விடுதலையைத் தருகின்றன என்பதைப் படம்பிடிக்கும் கவிதைகள். ஆழமான அழுத்தமான வாசிப்புக்கு உகந்த கவிதைகளை வழங்கியிருக்கிறார் கவிஞர்.

சிறப்புச் சிறுகதை

வெல்லும் மானுட தர்மம்

புவனகிரி கல்யாண்

சித்திரை மாதத்திற்கே உரித்தான பத்து மணி வெய்யில் சுட்டெரிக்கத் துவங்கியிருந்தது.

தாம்பரம் சானிட்டோரியம் பேருந்து நிலையத்தில் ஒரு குடும்பத்தை இறக்கிவிட்டுவிட்டு திரும்பிக் கொண்டிருந்தான் ரவிச்சந்திரன்.

எதிர்சாரியில் நின்ற பெரியவர், கைத்தட்டி அழைத்தார். அரைவட்டமடித்து ஆட்டோவை திருப்பி நிறுத்தினான்.

பாய்ந்து ஏறிக்கொண்டவர், "அல்லி ஆஸ்பெட்டலுக்கு போப்பா" என்றார்.

துவைத்த வெள்ளை வேட்டி சட்டை. ஆனால் சலவை செய்யப்படாதது. நெற்றி நிறைய விபூதி, முகத்தில் ஒருவார தாடியிருக்கிறது. அறுபது அறுபத்தைந்து வயது மதிக்கலாம்.

இவனுடைய அனுமானத்தின்படி பெரியவர் ஓய்வு பெற்ற அரசு ஊழியராய் இருக்கவேண்டும். இல்லையென்றால் 'அல்லி' என்கிற பெயரை உச்சரிக்க தெம்பு வராது.

காசு மட்டும் இருந்தால்போதும், எமன் வாயிலிருந்துக்கூட மீட்டுக் கொண்டு வந்து விடுவார்கள்...

"கூட யாரும் வரலையா?" இவனுடைய கேள்விக்கு பதில் சொல்லும் நிலையில் அவர் இல்லை.

'கைக்கு அருகில் உள்ள கடமையை முதலில் செய். அடுத்த கடமை என்னவென்று தானாக புலப்படும்'.... மேல்நாட்டு அறிஞர் கார்லைல் சொன்ன வாசகம் இவன் நெஞ்சில் நிழலாடியது.

'ஆயிரம் விளக்குகள் தந்த ஒளி' ஏ.பி.ஜெ. அப்துல்கலாம் அய்யா, தனக்கு பிடித்த புத்தகங்களில் ஒன்றாக முன்மொழிந்திருந்ததில் படித்தது. எப்போதும் இவனோடே பயணப்படும் புத்தகம்.

ஆட்டோ ஸ்டாண்டில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதம். இவன் தனி ரகம்.

யாராவது சவாரிக்கு அழைத்தால்தான் நிமிர்ந்து பார்ப்பான். இல்லையென்றால் புத்தகத்தில் புதைந்து கிடப்பான்.

ஆண்டவன் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பரீட்சை வைப்பான். எது ஆத்ம பரீட்சை, எது விஷப் பரீட்சையென்று யாராலும் முன்கூட்டியே முடிவு பண்ணிவிட முடியாது.

ரவி திரும்பிப் பார்த்தான்... பின் ஸீட்டை முழுக்க ஆக்கிரமித்து, தலை தொங்கிக் கிடக்கிறார்.

கைக்கருகே கடமையான இவரை, முதலில் ஆஸ்பெட்டலில் சேர்க்க வேண்டும்.

பிரதான சாலையில் விரைந்து ஓட்டினான். சவ ஊர்வலம் எதிர்பட்டது.

ஆட்டோ உள்ளிட்ட எல்லா வாகனங்களுமே முன்னேற, திணற ஆரம்பித்தன...

தலை நரைத்த பெண் பிரேதம். நடுத்தர வயது ஆண் தீச்சட்டியோடு நடக்க... இதற்கு கொஞ் சமும் சம்மந்தமில்லாத இளவயதுக்காரார்கள் குடித்துவிட்டு ஆட்டம் போட்டுக் கொண்டு கடந்து போகிறார்கள்...

சாவு என்பது சம்மந்தப்பட்டவார்களுக்கு மட்டும்தான் இழப்பு! மற்றவர்களுக்கு கொண்டாட்டம் போல!

சாப்பாட்டுக்கே வழியில்லாமல் செத்தால்கூட... துணிப் பந்தல், ஐம்பது நூறு பிளாஸ்டிக் சேர்கள், சவத்தைப் பாதுகாக்க கண்ணாடிப் பெட்டி, பல்லக்கு, வாகனம், வாண வேடிக்கை இன்னும் இத்யாதி.

ஒருவன் ஆட்டோவை, தட்டிவிட்டுப் போனான்...

கவனித்துப் பார்த்தான் ரவிச்சந்திரன். தட்டியவன் மிக கவனமாய் ஒரு காரையும் தட்டவில்லை. அவனுக்குத் தெரிந்திருக்கிறது... காரைத் தட்டினால், கார்காரன் திருப்பி தன்னைத் தட்டுவானென்று!

பாடை வைக்கப்பட்டிருக்கும் வாகனத்தில் இருபுறமும் தொங்கவிடப் பட்டிருக்கும் பூமாலைகளை சில இளைஞர்கள் பிய்த்து பிய்த்து எறிந்து கொண்டே போனார்கள்.

சுற்றுச்சூழலைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாத இவர்களின் செய்கை, குரங்குக் கை பூமாலை என்ற சொற்தொடரை இவனுக்கு ஞாபகப்படுத்தியது.

இறந்தவார்கள் தெய்வத்திற்கு சமம்!
'தெய்வத்தின் மார்பில் சூடிய மாலை
தெருவினிலே விழலாமா?
தெருவினிலே விழுந்தாலும்
வேறோர் கைப்படலாமா?...' என்கிற கவிஞர்



கண்ணதாசனின் பாடலை, இந்தக் குரங்குக் கை இளைஞர்கள் கேட்டிருக்க வாய்ப்பில்லையோ?

வேறொரு கையே படக்கூடாது என்றால்... கால்களில் மிதிபட, இப்படி வீசி செல்லலாமா?

மற்றொரு கோணத்தில் இது ஆரோக்கிய குறைவான விஷயம். இறந்தவார்கள் மீதுள்ள கிருமி, இந்த மாலையின் மூலம் பரவக்கூடும்.

நம் முன்னோர்கள் தெளிவானவர்கள். இறந்தவர்களின் வீட்டிற்கு துக்கம் விசாரிப்பதற்கென்று சில

நியதிகளை வைத்திருந்திருக்கிறார்கள்.

இறப்பு சம்பவித்த வீட்டிற்கு, துக்கம் விசாரிக்க வரும் ஒவ்வொருவரும் ஒரு விறகு அல்லது ஒரு விராட்டி கொண்டு வந்து போடவேண்டும்!

எவ்வளவு பணக்காரார்களாக இருந்தாலும் ஊரார் கொண்டுவரும் விறகு அல்லது விராட்டியில்தான் தகனம் நடத்தியிருக்கிறார்கள்!

ஊரார் கைங்கர்யத்திலேயே இறுதிச்சடங்கு நடக்கவேண்டும் என்கிற உன்னதம்.

வளார்ந்து வந்த நாகரிகமும், பொருளாதாரமும் எல்லோர் கைகளிலும் பூமாலையைக் கொடுத்து, தாத்பார்யம் தெரியாத இளைஞர்களை குரங்குக் கை பூமாலையாக மாற்றிவிட்டிருக்கிறது.

'கண்டதைப் படித்தவன் பண்டிதன் ஆவான்!'

என்பது உண்மையோ இல்லையோ... நிறைய படித்தவன் மனஅமைதிக்கு ஆளாவான் என்பது மட்டும் உண்மை!

ரவி அதிகம் படித்ததனால், ஒரு விஷயத்தைச் சார்ந்து ஆழமாக சிந்திக்கவும், மனம் எழுப்பும் கேள்விகளுக்கு விடை காணவும் முடிகிறது.

என்ன படித்து என்ன... வயிறு இருக்கிறது! நடப்பு உலகை ஞாபகப்படுத்த...

ஒருவழியாய் ஊர்வலம் ஊர்ந்து செல்ல... இவன், இயல்புக்கு திரும்பி வாகனத்தை செலுத்தினான்.

ஆட்டோவை கொண்டுவந்து நிறுத்துவதற்குள்... பிலுபிலுவென்று நான்கைந்து பேர் வந்து, சூழ்ந்து கொண்டார்கள்.

இதுவே கவர்மெண்ட் ஆஸ்பத்திரியாயிருந்தா... வண்டியை நிறுத்திட்டு, ஸ்டெச்சர் தள்ளும் ஆளைத்தேடி அலையணும்.

தலையை உதறிக் கொண்டான்.

"என்னாப்பா"...

"நெஞ்சு வலி"...

நிமிடத்தில் ஸ்டெச்சரில் அள்ளிக்கொண்டு போக எத்தனித்தார்கள்.

"இந்தாப்பா... சட்டைப் பையில, கழுத்துல விரல்ல எதுனா இருந்தா எடுத்துக்கோ... அப்புறம் புகார் பண்ணாத"...

பையத் துழாவிப் பார்த்தான்... பாக்கெட்டில் ஒண்ணுமில்லை. விரலில் வெள்ளி மோதிரம் பல் இளித்தது. கழட்டவில்லை.

முதன் முறையாய்... இவனுக்கு பதட்டம் வந்தது. 'ஆட்டோவை ஓரமாய் நிறுத்தும் சாக்கில் கிளம்பி விடலாமா? வேண்டாம்'... இது விஷப் பரிட்சை என்பது ஊர்ஜிதம் ஆகிவிட்டது. எந்தளவு என்பதை தெரிந்து கொள்வோம்!'...

அவசரப் பிரிவுக்கு, கொண்டு போனார்கள்.

இவன் ஆட்டோவை, ஓரமாய் நிறுத்திவிட்டு உள்ளே நுழைகையில்... கண்ணாடி கதவு சாத்திக் கொண்டது. வட்டவடிவ இடைவெளி வழியே உற்றுப் பார்த்தான். சிகிச்சைக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள்.

"உங்கள ரிசப்ஷன்ல கூப்பிடுறாங்க..." என்ன நடக்கப் போகிறது... என்பது இவனுக்குத் தொரிந்துவிட்டது. விசாரிக்கப் போகிறார்கள். விபரம் அறிந்தவுடன் சிகிச்சையை நிறுத்தப்

போகிறார்கள்.

புழுக்கம் தாங்காமல் காக்கிச் சட்டையை கழற்றி, ஆட்டோ ஸீட்டில் போட்டிருந்ததனால்... இவனை நோயாளியின் உதவியாளார் என நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது இவனுக்கு, தெரிந்திருக்க நியாயமில்லை!

'வாய்மை எனப்படுவது யாதெனின்'... இவனுடைய மனசு, தன்னுடைய பேதனையை தொடங்கிவிட்டது...

கண்ணாடி கூண்டுக்கருகே நின்றான்.

"இந்த விண்ணப்பத்தை பூர்த்தி பண்ணுங்க"...

இறந்துபோன அப்பா பேரை எழுதி, இவன் வீட்டு உண்மையான முகவரியை எழுதினான்.

வாங்கிக் கொண்ட ரிசப்ஷனிஸ்ட், "பேஷண்ட் பேர் சிவராமனா?... வயது அறுபத்தைந்தா"... எனச் சந்தேகம் கேட்டாள்.

"ஆமாம்..." என்றான்.

"பணம் கட்டுங்க"... என்றாள், உரிமையாய்!

"எவ்வளவு?"...

"ஆஞ்சியோவா... பைபாஸா"...

"தெரியல"...

"வெயிட் பண்ணுங்க சொல்றேன்... யாருக்கோ போன் பண்ணி பேசினாள். இவன் பக்கம் திரும்பி, "ஐம்பதாயிரம் முதல்ல கட்டுங்க" என்றாள்.

"சரி" என்றான், ஒரு நிமிட யோசனைக்குப் பிறகு "இதோ வந்துடுறேன்"... என வெளியே நடந்தான்.

ஆட்டோ ஸ்டாண்டுக்கு வந்து, நண்பர்களோடு நடந்த அனைத்தையும் பகிர்ந்து கொண்டான்.

"விடு மாப்ளே... நூறு ரூபா சவாரி காசு வரலைன்னு நெனைச்சிக்கோ"

"எப்படி விடமுடியும்? அய்யாதான் தன்னோட உண்மையான அட்ரஸையும், போன் நம்பரையும் எழுதிக் கொடுத்துட்டு வந்துருக்காரே"...

"அது வேறயா"

"அப்ப வேற வழி ஒண்ணுமில்ல... பெண்டாட்டி புள்ளைகள ஒரு வாரம் மாமியார் வீட்டுக்கு அனுப்பு. நீயும் செல்போன சுட்ச் ஆப் பண்ணி வைச்சிட்டு, வேற ஏரியாவுல ஆட்டோ ஓட்டு"

ஆளாளுக்கு யோசனை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ரவியின் செல்போன் சிணுங்கியது. எல்லோரும் அமைதியானார்கள்.

"நா அல்லி ஆஸ்பெட்டலர்ந்து பேசறேன், சார்"...

"எங்க போனீங்க, ஒரு மணி நேரமா உங்கள காணாம தவிக்கிறோம்... உடனடியா ஆஞ்சியோ பண்ணனும்'னு டாக்டர் சொல்றாங்க. நீங்க வந்து கையெழுத்து போடணும்... உடனே வாங்க சார்"

"இப்ப என்னா செய்யப் போற"... எல்லோருடைய பார்வையிலும் இந்த கேள்வியே இருந்தது.

"சேட்டுக்கிட்ட போகப் போறேன்"...

நண்பர்களுக்கு புரிந்துவிட்டது. ஆட்டோ உரிமத்தை வைத்து உடனடியாய் பணம் பெறக்கூடிய இடம்.

"போன வாரம்தான மீட்ட. மறுபடியும் அடகு வைக்கணுமா? அதுவும் உனக்கு கொஞ்சமும் சம்மந்தமேயில்லாத காரணத்துக்கு!"

“ஒரு சம்மந்தமுமில்லைன்னு... எல்லாரையும் சுலபமா பதில் சொல்லி சமாளிச்சிடலாம்தான். ஆனா மனசாட்சிக்கு, என்ன பதில் சொல்றதுண்ணுதான் தெரியல” ரவியின் பேச்சுக்கு யாரிடத்திலும் பதில் இல்லை.

சேட்டுக் கடையை நோக்கி ஆட்டோ புறப்பட்டது.



ரவிக்கு ஆணொன்று, பெண்ணொன்று என இரண்டு குழந்தைகள்.

ஊரில் விவசாயம் பொய்த்துப்போக, இருபது ஆண்டுகளுக்கு முன்பு... பஞ்சம் பிழைக்க பட்டணம் வந்து சேர்ந்தவன். இவன் படித்திருந்த பனிரெண்டாம் வகுப்பு எதற்கும் ஆகவில்லை.

ஒரு ஓர்க்ஸ் ஷாப்பில் வேலைக்கு சோர்ந்தவன் தட்டுத்தடுமாறி ஆட்டோ கற்றுக் கொண்டான். இந்த இருபது வருடத்தில் குடியிருக்க, பழைய பெருங்களத்தூரில் கையகல வீடும், பசியில்லாமல் கஞ்சிக்குடிக்க ஆட்டோவுமாய் வளர்ந்திருக்கிறான். இவனோட வரவுக்குள் செலவு செய்யும் மனைவி, மூணாவது படிக்கும் மகள், ஐந்தாவது படிக்கும் மகன் என வாழ்ந்து வருகிறான்!.

எல்லாம் தருமம் மிகு சென்னையின் கைங்கர்யம்!... என்கிற பெருமிதம் இவனுக்கு எப்போதுமுண்டு...

கடந்த ஐந்தாறு வருடங்களாய் பள்ளி திறக்கும்போது.... ஆட்டோ புத்தகத்தை அடகு வைத்து, மகன் மகள் படிப்புச் செலவை பார்த்துக் கொள்வான்.

கோடை விடுமுறையில் மனைவி மகன், மகள் என எல்லோரும் சொந்தவூருக்கு சென்றுவிட, சிக்கனமாயிருந்து எப்படியும் ஆட்டோவை மீட்டு விடுவான்.

போனவாரம் ஆட்டோவை மீட்ட கையோடு பொண்டாட்டி பிள்ளைகளை அழைத்து வந்துவிட்டான்.

இப்போது ஆஸ்பத்திரி செலவுக்காக... அடமானம் வைப்பது, பெரியவர் குணமாகி பணம் வந்துவிட்டால், குழந்தைகளை கான்வெண்டில் தொடர்ந்து படிக்க வைப்பது, ஒருவேளை தாமதமானால் இருக்கவே இருக்கு கவர்மெண்ட் ஸ்கூல் என்கிற முடிவுக்கு வந்துவிட்டான்.

பட்டணத்து மனிதர்கள் தயவில் இந்தளவு உயர்ந்திருக்கிறோம்!... இவர்களின் பிரதிநிதியான, அந்தப் பெரியவருக்கு... இக்கட்டான நேரத்தில் செலவழிப்பதுதான் தர்மம் என மனசுக்குள் சொல்லிக் கொண்டான்.

தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
Happy
Diwali

கொலு

நவராத்திரியில் கொலு வைப்பதன் தத்துவம்

தமிழ் மாதங்கள் 12 மாதமும் பிரசித்தி பெற்ற மகத்துவம் நிறைந்த மகத்தான மாதங்கள்தான். புரட்டாசி மாதத்தில் வீடுகளில் வைக்கப்படும் கொலு வழிபாடு பிரசித்தி பெற்றதாகும்.

கொலு என்பது தெலுங்குச் சொல்லின் தமிழ் வடிவம். வீற்றிருத்தல் என்பது இதன் பொருளாகும். உலக உயிர்கள் அனைத்தும் தாங்களை தெய்வ நிலைக்கு உயர்த்திக்கொள்ளப் பாடுபட வேண்டும் என்பதே கொலுவின் தத்துவமாகும். புரட்டாசி அமாவாசை அன்றே கொலு வைப்பதற்குரிய செயல்கள் தொடங்கப் படுகின்றன.

வீட்டில் ஒரு அறையைத் தேர்ந்தெடுத்து அந்த அறையைச் சுத்தமாக்கிப் புனிதப் படுத்துகின்றனர். மூன்று அல்லது ஐந்து அல்லது ஏழு அல்லது ஒன்பது படிகளை வசதிக்கும், இடத்திற்கும் தகுந்தபடி அமைக்கின்றனர். சுத்தமான துணிகளால் அந்தப் படிகளைப் போற்றுகின்றனர்.

முதல் படியின் நடுவில் கலசத்தை வைக்கின்றனர். ஒரு கலசத்தில் பச்சரிசியை நிரப்பி, ஐந்து மாவிலைகளை வட்டமாக அடுக்கி, மஞ்சள், குங்குமம் பூசிய தேங்காயை அதில் பொருத்துகின்றனர். தீபாராதனை காண்பிக்கப்படுகிறது. அந்தக் கலசத்தில் தேவி பிரசன்னமாகிறாள். அப்போது முதல், நவராத்திரி வழிபாடும், கொலு வழிபாடும் தொடங்குகின்றன. கொலு வைக்கப்பட்டுள்ள அறையின் ஒரு பகுதியில் நவதானியங்களை விதைக்கின்றனர். அவைகள் முளை விட்டுச் செழித்து வளர்ந்தால், குடும்பமும் செழிப்புடன் விளங்கும் என்று நம்புகின்றனர்.

முதல் படியில் ...

புல், செடி, கொடி ஆகிய தாவர வகை

தார்ப்பரியம்

சோ. தெஷ்ணாமூர்த்தி

பொம்மைகளை வைக்க வேண்டும். இயற்கையைப் பாதுகாக்க வேண்டும். அதனுடன் ஒன்றி வாழ வேண்டும் என்பதை முதல் படியில் வைக்கப்பட்டுள்ள பொம்மைகள் உணர்த்துகின்றது.

இரண்டாம் படியில் ...

சங்கால் செய்யப்பட்ட பொம்மைகளை வைக்க வேண்டும். குறிப்பாக நத்தை பொம்மைகளை வைக்க வேண்டும். நத்தை பொம்மை போல நிதானமாக வாழ்க்கையை நடத்தி உயர்ந்த இடத்தைப் பிடிக்க வேண்டும் என்பதே இதன் பொருள்.

மூன்றாம் படியில் ...

எறும்பு, கரையான் புற்று பொம்மைகளை அவசியம் இருக்க வேண்டும். எத்தனை முறை உடைத்தாலும் கரையான் திரும்பத் திரும்ப புற்றைக் கட்டுவது போலவும், எத்தனை முறை கலைத்தாலும் எறும்புகள் ஒன்று சேர்ந்து சுறுசுறுப்பாக தங்கள் பணியைச் செய்வது

போலவும், மனிதனுக்குத் திடமனப்பான்மையுடன் சுறுசுறுப்பாகச் செயல்பட வேண்டும் என்பதை இந்த பொம்மைகள் உணர்த்தும்.

நான்காம் படியில் ...

நண்டு, வண்டு பொம்மைகளை வைக்க வேண்டும். நண்டுகளும், வண்டுகளும் ஆழமாக ஊடுருவிப் பார்க்கும் குணம் கொண்டவைகள். எந்த ஒரு விஷயமாக இருந்தாலும் ஆழமாகச் சிந்தித்துச் செயலாற்றுவதை இந்த பொம்மைகள் உணர்த்தும்.

ஐந்தாம் படியில் ...

மிருகங்கள், பறவைகள் உள்ளிட்ட பொம்மைகளை

வைக்க வேண்டும். மிருக குணத்தை விட வேண்டும். பறவைகள் போலக் கூடி வாழ வேண்டும் என்பது இதன் பொருளாகும்.

ஆறாம் படியில் ...

மனித பொம்மைகளை வைக்க வேண்டும். கீழே இருக்கும் கொடிய விலங்குகளின் குணங்களைத் தவிர்த்து,நல்ல விலங்குகளான பூச்சிகளிடம் இருந்தாவது நல்லதைக் கற்றுக் கொண்டு, மனித நேயத்துடன் வாழ வேண்டும் என்பதைத்தான் ஆறாவது படி உணர்த்துகிறது.

ஏழாவது படியில் ...

முனிவர்கள் மற்றும் மகான்களின் பொம்மைகளை வைக்க வேண்டும். மனித நிலையில் ஆன்மிக சாதனைகள் செய்து, மேல் நிலைக்கு உயர வேண்டும் என்பதை இது குறிக்கிறது.

எட்டாம் படியில் ....

தேவர்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள் பொம்மைகளை வைக்க வேண்டும். ஆன்மிக நிலையிலிருந்து படிப்படியாக உயர்ந்து உயர் நிலையை அடைவதாக இது காட்டுகிறது.

ஒன்பதாவது படியில் ...

பிரம்மா, விஷ்ணு, சிவன் மற்றும் அவரவர்களின் தேவியர்களின் சிலைகளுடன் கூடிய சிலைகளையும் வைக்க வேண்டும். தேவநிலையில் இருப்பவர்கள் தெய்வ நிலைக்கு உயர்த்துவதை இது காட்டுகிறது.

இந்த சிலைகளின் நடுவில் பெரிய அளவில் ஆதிபராசக்தி சிலையை வைக்க வேண்டும். தெய்வத்திடம் நிரந்தரமாக அடைக்கலம் புக வேண்டும் என்பதை இது குறிக்கிறது. குழந்தைகளிடம் பொம்மைகளைக் காட்டி மகிழ்ச்சிப்படுத்துவது மட்டும் கொலுவின் குறிக்கோள் இல்லை. இது போன்ற உயர்ந்த தத்துவங்களை அவர்களுக்குப் புரியும் வகையில் பக்குவமாக எடுத்துச் சொல்ல வேண்டும். இதுதான் கொலு வைப்பதன் இரகசியம்.

கொலுவில் மண், மரம், பீங்கான், பிளாஸ்டிக் உலோகங்களால் செய்யப்பட்ட பொம்மைகளை வரிசை, வரிசையாக அடுக்கி வைக்கலாம். தெய்வ வடிவங்கள், புராண வடிவங்கள் உள்ளிட்ட தெய்வத் தொடர்பான பொம்மைகளை உயரத்திலுள்ள படிகளில் வைக்கலாம். முதற்படியில் மரப்பாவைகளை வைப்பது மரபு. மளிகை வணிகரின் பொம்மை ஒன்று தகுந்த மளிகைப் பொருட்களுடன் கொலுவில் கட்டாயம் இடம் பெற்றிருக்க வேண்டும். இது நன்றாகச் சாப்பிட்டு ஆரோக்கியமாக வாழ வேண்டும் என்பதற்கான குறியீடு ஆகும். செயற்கை அருவி, ஆற்று நீரோட்டம், ரெயிலோட்டம் மற்றும் நிலக் கலர் தண்ணீருடன் கடலை ஏற்படுத்தி அதில் படகோட்டம் போன்ற தொழில் நுட்பங்களையும், அறிவியல் நுட்பங்களையும் பயன்படுத்தலாம். இவற்றை குழந்தைகள் மகிழ்ச்சியுடன் ரசிப்பார்கள்.

அந்தக் காலத்தில் பெண்கள் வீட்டுக்கு வீடு நேரில் சென்று எங்கள் வீட்டில் கொலு வைத்திருக்கிறோம் எல்லோரும் வாங்க என்று அழைப்பார்கள். காலப்போக்கில் பெண்கள் வரவேற்பு இதழ்களை அச்சடித்து கொலுவிற்கான அழைப்பு விடுத்தனர். கலியுக காலமான தற்போது, அலைபேசியில் அழைக்கிறார்கள். வாட்ஸ் ஆப்பில் வரவேற்கிறார்கள். பேஸ்புக்கில் பேசி அழைப்பு விடுக்கின்றனர்.

கொலுவைக் காண வந்தவர்களுக்கு, வசதிக்கேற்றபடி பரிசுப் பொருட்களை வழங்கி, மஞ்சள், குங்குமம் கொடுத்து, இனிப்புகள் வழியனுப்புவர். சிலர் பக்திப் பாடல்களைப் பாடி மகிழ்கின்றனர். பக்தி நூல்களை சிலர் படிக்கின்றனர். சிலர் தேவி பாகவதம் முழுவதையும் படித்து மகிழ்கின்றனர். சுருங்கச் சொன்னால் வீடு கொலுவின் போது, சிறந்த கலைக்கூடமாகவும், கோயிலாகவும் மாறி விடுகிறது.

விஜயதசமியன்று பால் நிவேதனம் படைத்து, தீபாராதனை காண்பித்து கொலு வைக்கப்படும் விழாவை முடித்து வைக்கின்றனர். படியிலுள்ள சில பொம்மைகளைப் படுக்க வைத்துக் கொலுவை முடிப்பது முறையாகும்.



அருமையான, பழமையான கொலுப் பொம்மைகளை மிக்க பாதுகாப்புடன் வைத்திருக்க வேண்டும். அவை குடும்பத்தின் சொத்து. பரம்பரைக் கருவூலம், கோயில்களில் நவராத்திரி விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. தினமும் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. தேவிகளைப் புதுப்புது கோலங்களில் அலங்கரித்துக் கொலு மண்டபத்தில் எழுந்தருளச் செய்கின்றனர்.

இத்தகைய அலங்காரங்கள் மிகுந்த தேவிகளை கொலுவின் போதுதான் தரிசிக்க முடியும்

இரண்டாம் பாகம் : காஞ்சி முற்றுகை

மகேந்திர பல்லவர் 48

தோல்வி

சிவகாமி வெகுண்ட கண்களுடன் அந்த நாகப் பிடி அமைந்த கத்தியைப் பார்த்தாள். குரல் நடுங்க, நாத் தழு தழுக்க விசித்திரசித்தரைப் பார்த்துக் கூறினாள்: "பல்லவேந்திரா! எந்தப் பாவியின் கரம் இந்த விஷக் கத்தியைப் பிடித்து மாமல்லருடைய முதுகில் செலுத்த யத்தனித்தது? கிருபை கூர்ந்து அதைச் சொல்லுங்கள். என்னால் இது நேர்ந்ததாயிருக்கும் பட்சத்தில்..." என்று மேலும் அவள் பேசுவதற்குள் சக்கரவர்த்தி குறுக்கிட்டார்!

"ஆத்திரப்பட்டுச் சபதம் ஒன்றும் செய்யவேண்டாம். சிவகாமி! இந்தப் பெரும் அபாயம் உன்னால் நேர்ந்ததுதான், ஆனால், நீ அறியாமல் நேர்ந்தது. இந்தக் கத்தி யாருடையதாயிருக்கும் என்று உனக்கு ஒன்றும் தெரியவில்லையா?" என்று கேட்டார்.

"இம்மாதிரி கத்தியை நான் பார்த்ததேயில்லை, பிரபு!"



"பெயரிலேயே பாம்பையுடைய மனிதர் ஒருவரை உனக்குத் தெரியாதா, அம்மா?"

"நாகநந்தியடிகளா?" என்று சிவகாமி கேட்டபோது, அவளுடைய குரலில் வியப்பும் பயமும் ததும்பின.

"ஆம்! அவரேதான்!"

"ஐயோ! அவர் எதற்காக மாமல்லரைக் கொல்ல முயல வேண்டும்? நம்ப முடியவில்லையே?"

"ஏன் நம்ப முடியவில்லை! இதைவிட அதிசயமான பயங்கரத் துவேஷங்களைப் பற்றி நீ கேட்டதில்லையா?"

"நாகநந்தி எதற்காக மாமல்லரைத் துவேஷிக்கிறார்? ஐயோ! காவித் துணி தரித்த புத்த பிக்ஷுவா இவ்விதம் ...."

"சிவகாமி! புத்த பிக்ஷுவாயிருந்தாலென்ன? யாராயிருந்தால் என்ன? ஸ்திரீ சௌந்தரியத்தினால் புத்த பிக்ஷுவின் மனம் கெட்டுப் போகாதா? விசுவாமித்திரருடைய கடுந்தவத்தையே மேனகையின் சௌந்தரியம் கலைத்து விட்டதே! புத்த சங்கங்கள் சீர் கெட்டுப் போயிருக்கும் இந்த நாளில் இது என்ன அதிசயம்?"

"என்ன சொல்கிறீர்கள்? எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே! நாகநந்தி எதற்காக மாமல்லரைக் கொல்லப் பார்த்தார்?"

"உன்னுடைய சௌந்தரியமாகிய விஷம் பிக்ஷுவின் தலைக் கேறியதனால்தான், அம்மா! வேறு என்ன இருக்க முடியும்? புத்த பிக்ஷுவின் கடின உள்ளத்தையும் உன் மேனி அழகு கவர்ந்தது. மாமல்லருடைய குழந்தை இருதயத்தையும் கவர்ந்தது. ஆனால், நீ உனது தூய உள்ளத்தை மாமல்லனுக்கே கொடுத்தாய். பிக்ஷுவின் துவேஷத்துக்கு அதுதான் காரணம். இந்தப் பாறையில் நீயும் மாமல்லனும் நேற்று இரவு பேசிக்கொண்டிருந்தபோது, இதே பாறைக்குப்

பின்னால் புத்த பிக்ஷு கையில் இந்த விஷக் கத்தியுடன் ஒளிந்திருந்தார். கிராமத்துக்கருகில் உள்ள கோயில் வரையில் உங்களைப் பின் தொடர்ந்து வந்தார். கடவுளின் அருளும் குண்டோதரனுடைய சர்வ ஜாக்கிரதையும் சேர்ந்துதான் மாமல்லனுடைய உயிரைக் காப்பாற்றின..”

“குண்டோ தரனா காப்பாற்றினான்? எப்படி, பிரபு?”

“உங்களுக்கும் பிக்ஷுவுக்கும் தெரியாமல் குண்டோ தரன் உங்களைப் பின் தொடர்ந்து வந்தான். பிக்ஷு கோயில் மதில் மேல் ஏறிக் குதித்தபோது இந்தக் கத்தி தவறிக் கீழே விழுந்தது. அதை அவன் எடுத்துக்கொண்டான். பிக்ஷுவை நள்ளிரவில் கோயில் மடைப்பள்ளியில் விட்டுக் கதவை தாழிட்டுக் கொண்டு வந்து எங்களிடம் எல்லா விவரங்களையும் சொன்னான். நாங்கள் வந்து பார்ப்பதற்குள் பிக்ஷு மடைப்பள்ளியிலிருந்து மாயமாகி விட்டார்.”

இவ்விதம் மகேந்திர பல்லவர் சொல்லியபோது சிவகாமியின் முகத்தில் அவ்வப்போது ஏற்பட்ட அதிசயமான மாறுதல்களையெல்லாம் அவர் கவனியாமல் இல்லை. உண்மையில் நாகநந்தியைப் பற்றி பேச்சு வந்ததிலிருந்து, சிவகாமியின் பாதி மனம் இங்கேயும் பாதி மனம் மடத்திலேயும் இருந்தது. மடத்து உள் அறையில் தூண் மறைவில் நாகநந்தி நின்ற தோற்றம் அவள் மனக்கண்முன் வந்து கொண்டேயிருந்தது. இன்னும் அந்தப் பாதக பிக்ஷு அங்கேயே இருப்பாரா! இருந்தால், சக்கரவர்த்தியின்

கையிலுள்ள கத்தியை வாங்கிக் கொண்டுபோய் அவரைத் தன் கையாலேயே கொன்றுவிட வேண்டும் என்று சிவகாமிக்கு ஆத்திரம் பொங்கிக்கொண்டு வந்தது.

"பல்லவேந்திரா! அப்பா எங்கே? நான் உடனே மடத்துக்குப் போக வேண்டும்!" என்றாள் சிவகாமி.

"தாயே! என் கோரிக்கையை இன்னும் நீ கேட்கவே இல்லையே? நான் கோரி வந்த வரத்தைக் கொடுக்கவில்லையே?"

"இப்படியெல்லாம் பேசி ஏன் என்னை வதைக்கிறீர்கள்! சிற்பியின் மகளுக்குக் கட்டளையிடுங்கள்!"

"கட்டளை இல்லை, அம்மா! உன்னிடம் வரந்தான் கோருகிறேன். அதுவும் எனக்காக கோரவில்லை. பல்லவ சாம்ராஜ்யத்திற்காகக் கோருகிறேன். இந்த சாம்ராஜ்யத்தைப் பெரும் விபத்திலிருந்து காப்பாற்றும் சக்தி இப்போது உன் கையில் இருக்கிறது."

"நான் என்ன செய்ய வேண்டும்?"

"மாமல்லனுக்கு ஓலை எழுதித் தரவேண்டும்!"

"என்ன ஓலை?" என்று சிவகாமி கேட்டாள்.

"மாமல்லனை நீ விடுதலை செய்வதாக எழுதவேண்டும். உன்னை மறந்துவிடும்படி எழுதவேண்டும்."

"பிரபு! இந்த ஏழைப் பெண்ணை ஏன் இப்படிச் சோதனை செய்கிறீர்கள்? மாமல்லரையாவது நான் விடுதலை செய்யவாவது? என்னை மறக்கும்படி அவருக்கு நான் எப்படி எழுதுவேன்? நான் சம்மதித்தாலும் இந்தக் கை சம்மதியாது, சுவாமி!"

"சிவகாமி! காஞ்சிக்கு மூன்று காத தூரத்தில் வாதாபியின் படைகள் வந்திருக்கின்றன. ஆயினும் நான் இங்கே உன்னுடன் வாதாடிக் கொண்டிருக்கிறேன். இதிலிருந்தே என்னுடைய கோரிக்கை முக்கியமானதென்று உனக்குத் தெரியவில்லையா? உண்மையை இன்னும் பட்டவர்த்தனமாய்ச் சொல்கிறேன், கேள்! வாதாபியின் சமுத்திரம் போன்ற சைனியங்களை எதிர்த்து நிற்பதற்கு வேண்டிய படைபலம் இப்போது பல்லவ இராஜ்யத்துக்கு இல்லை. இந்த நிலைமையில் தெற்கேயிருந்து பாண்டியனுடைய பெரும்படையும் பல்லவ இராஜ்யத்தைத் தாக்க வருகிறது. நீ மனம் வைத்து என் கோரிக்கையை நிறைவேற்றினால், பாண்டிய சைனியம் பல்லவ சைனியத்துடன் சேர்ந்துவிடும். இரண்டும் சேர்ந்தால் வாதாபிப் படைகளை வெற்றி கொள்ளலாம். சிவகாமி! பல்லவ இராஜ்யத்துக்கு இந்த மகத்தான உதவியை நீ செய்வாயா?"

"எனக்கும் பாண்டியர் படையெடுப்புக்கும் என்ன சம்பந்தம் பிரபு! பல்லவ இராஜ்யத்துக்கு இந்த ஏழைச் சிற்பியின் மகள் என்ன உதவியைச் செய்யமுடியும்?"

"உன் மனத்தைப் புண்படுத்த வேண்டாம் என்று பார்த்தால் நீ விடமாட்டேன் என்கிறாய். சிவகாமி! பாண்டிய இராஜகுமாரியை மாமல்லனுக்குக் கலியாணம் செய்து கொள்ளுமாறு தூது அனுப்பினார்கள். அதற்கு மாமல்லன் இணங்காதபடியால் பாண்டியனுடைய சைனியம் நம்மீது படையெடுத்து வருகிறது. கலியாணம் செய்து கொள்வதாகச் சம்மதம் தெரிவிக்க வேண்டியதுதான். உடனே பாண்டிய சைனியம் நம்முடன் சேர்ந்துவிடும். நீ மாமல்லனுக்கு விடுதலை கொடுத்தால், அவனை இதற்கு இணங்கச் செய்வேன் என்ன சொல்கிறாய், தாயே! பல்லவ இராஜ்யத்துக்கு உயிர்ப்பிச்சை அளிப்பாயா?" என்று மகேந்திரர் இறைஞ்சினார்.

சிவகாமி பூமியில் சட்டென்று உட்கார்ந்து, "மாட்டேன், மாட்டேன்! என்னால் முடியாது!" என்று அலறினாள்.

பின்னர் விம்மிக்கொண்டே, "பல்லவேந்திரா!

உங்களுடைய கையிலுள்ள விஷக் கத்தியை என் மார்பிலே பாய்ச்சிக் கொன்றுவிடுங்கள். தங்கள் குமாரருக்கு விடுதலை கிடைத்துவிடும். பல்லவ இராஜ்யமும் காப்பாற்றப்படும். ஒரு பெரிய இராஜ்யத்தைக் காப்பதற்காக ஓர் அபலைப் பெண்ணைக் கொன்றால் என்ன? கத்தியை எடுங்கள் பிரபு! தங்களுக்கு தைரியம் இல்லாவிட்டால் கத்தியை இங்கே கொடுங்கள் நானே என் மார்பில் செலுத்திக் கொள்கிறேன்!" என்றாள்.

"சிவகாமி! நீ ஜயித்தாய்! நான் தோற்றேன்" என்றார் மகேந்திர பல்லவ சக்கரவர்த்தி.

பாறையடியில் மேலே கூறிய சம்பாஷணை நடந்து ஒரு நாழிகைக்குப் பிறகு சிவகாமியும் ஆயனரும் மண்டபப்பட்டுக் கிராமத்தை அடைந்தார்கள்.

மடத்து வாசலை அணுகியதும் சிவகாமி மிகவும் பரபரப்புடன் முதலில் பிரவேசித்து அறைக்குள்ளே சென்று பார்த்தாள். தூண் மறைவில் பிக்ஷுவைக் காணவில்லை. மடத்திற்குள் வேறு எங்கேயும் அவரைக் காணவில்லை.

ஏதோ ஒரு சந்தேகம் உதிக்கவே, அவசரமாகச் சென்று தனது ஆடை ஆபரணப் பெட்டியைத் திறந்து பார்த்தாள். கையினால் பல முறை துழாவிப் பார்த்தாள். ஆடை ஆபரணங்களையெல்லாம் எடுத்து உதறிப் பார்த்தாள். எப்படிப் பார்த்தும் சக்கரவர்த்தி கொடுத்த சிங்க முத்திரையுள்ள இலச்சினையைக் காணவில்லை!

அதே சமயத்தில் வராக நதிக்கு அக்கரையில் ரதசாரதி கண்ணபிரானிடம் புத்த பிக்ஷு மேற்படி சிங்க இலச்சினையைக் காட்டிக் கொண்டிருந்தார். காட்டி, தன்னை அவனுடைய ரதத்தில் காஞ்சி மாநகருக்கு விரைவாக அழைத்துப் போகும்படி கட்டளையிட்டார். கண்ணபிரான் தயக்கத்துடன் அந்தக் கட்டளையை ஒப்புக்கொண்டு பிக்ஷுவை ரதத்தில் ஏறும்படி கூறினான்.

இதையெல்லாம் சற்றுத் தூரத்தில் மரங்களில் மறைவில் நின்று சக்கரவர்த்தியும் சத்ருக்னனும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். சத்ருக்னன் பாய்ந்து சென்று கண்ணபிரானைத் தடுப்பதற்கு யத்தனித்தபோது சக்கரவர்த்தி அவனுக்குச் சமிக்ஞை செய்து நிறுத்தினார்.

புத்த பிக்ஷு ரதத்தில் ஏறுவதையும், கண்ணபிரான் வேண்டா வெறுப்பாக ரதத்தின் குதிரைகளைத் தட்டிவிடுவதையும், வீரர்கள் ரதத்தைப் பின் தொடர்ந்து செல்வதையும் அவ்விருவரும் பார்த்துக் கொண்டு சும்மா நின்றார்கள்.

சத்ருக்னனுடைய முகத்தில் கோபம் கொதித்தது. சக்கரவர்த்தியின் முகத்திலோ புன்னகை தவழ்ந்தது.

(சபதம் தொடரும்)

பெரும்

வாழ்வியல் ஒருமையின் வடிவே வள்ளலார்

“பல்லாண்டுகளுக்கு முன்னர், சிறுவனாயிருந்த என்னிடம் பெரியவர் ஒருவர் ‘திடீரென்று கடவுள் உன்முன் தோன்றி உனக்கு என்ன வரம் வேண்டும் என்று கேட்டால் நீ என்ன கேட்பாய்?’ இப்படி ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டு அமைதியாக என்னைப் பார்த்தார்.

அவர் வாரத்திற்கு ஒருநாள் எங்கள் வீட்டிற்கு வந்து உணவு உண்ணும் ஒரு சாது. வெள்ளாடை உடுத்த துறவி. வள்ளலார் சீடர் என்பதைப் பின்னால் தெரிந்து கொண்டேன். முறைவைத்து அவருக்கு உணவு அளித்தலை எங்கள் ஊர் தன் கடமைகளுள் ஒன்றாகக் கொண்டிருந்தது.

பள்ளிக்குச் செல்வதற்கும் முந்தைய பால பருவம் அது என்பதால், நான் அவரிடம் என்னவெல்லாம் கேட்பேன் என்று சொன்னதெல்லாம் மறந்து போயிற்று. ஆனால், அவர் என்ன கேட்கவேண்டும் என்று சொல்லிக் கொடுத்ததுதான் இன்னும் என் நெஞ்சில் நிலைத்து, வழிபாட்டுக்குரிய துதிப்பாடல் ஆகியிருக்கிறது.

‘ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும்’ — என்று பாடிய வண்ணமே பாடவும் பழக்கினார். இப்போது அவர் உருவம் என் நினைவில் இல்லை. ஆனால், இந்தப் பாடல் வழியாக என்றும் என்னுள் நிறைந்து நிற்பது வள்ளல் பெருமானின் திருவுருவே.

வேண்டியது எது என்று கேட்பதுபோலவே, வேண்டாததையும் வேண்டாம் என்று சொல்லாமல், வேண்டாமையையும் வேண்டுதலாக்கிப் பாடுவதுதான் இப்பாடலின் சிறப்பு.

ஒன்று வந்தால் மற்றொன்று விலகும். விலக்க வேண்டியதையும் ஏற்க வேண்டியதையும் நிரல்படுத்திப் பாடி, முடிக்கிற வரைக்கும் இந்த ஒழுக்க முடிச்சு ஒன்றனோடு ஒன்று தொடர்புடையதாய்ப் பின்னிப் பிணைந்து நம்மைப் பேணிக்காக்கும் நற்சங்கிலியாவதைப் பாடுகிறபோதெல்லாம் அனுபவிக்க முடிகிறது.

கிருங்கை சேதுபதி

மனஒருமைப்பாட்டுக்கும் மனிதநேய ஒருமைப்பாட்டுக்கும் வழிகாட்டும் ஒருமையில் தொடங்கும் இப்பாடல், நிறைவாக, நம்மை நோயற்ற வாழ்வில் கொண்டுபோய் நிலைநிறுத்துகிறது.

இந்த வாழ்வு, நோய் பற்றும் வாழ்வுதான். இந்த உடம்பு நோய் தொற்றும் உடம்புதான். ஆனால், பற்றின் பற்றிடமாக இருக்கிற இந்த உடம்பின் உள் உறையும் ஆன்மாவைப் பற்றற்றானைப் பற்றிவிடச் செய்துவிட்டால், நோயற்ற வாழ்வு தானே சித்திக்கும்.

இந்த உயிராகிய ஆன்மா, நோயற்ற வாழ்வில் இருந்து உய்ய வேண்டுமானால், நாம் வேண்டிப் பெற வேண்டிய

வரங்கள் இவை என்பதை விட, நாம் கடைப்பிடித்து வாழ வேண்டிய ஒழுக்கங்கள் இவை என்று கொள்வதே பொருந்தும்.

அது ஒருநாளில் மட்டும் கடைப்பிடித்து ஒழுகுவது அல்ல. ஒவ்வொரு நாளும் கடைப்பிடிக்க வேண்டிய உயிர் அறம். ஒவ்வொரு நாள் பிறப்பது போலவே, ஒவ்வொரு நாளும் நாமும் பிறக்கிறோம். இவ்வாறு, பிறக்கிற உடம்பைப் பிணித்திருப்பதால்தான் நோய்க்குப் 'பிணி' என்று பெயர். அது பிறவிதோறும் தொடர்வது.

பிறப்பு முதல் இறப்பு வரை உயிர்களைப் பிணித்திருக்கும்

பிணியாவது பசி. அதனால்தான், 'பசிப்பிணி என்னும் பாவி' என்று மணிமேகலைக் காப்பியம் பெயரிட்டழைக்கிறது. எல்லாப் பாவங்களையும் செய்யத் தூண்டும் இந்தப் பிணியைப் போக்கினால், பிற பிணிகள் நீங்க வழிவகை கிட்டும். அதன் வழி, இந்த உயிரைப்பிணித்திருக்கும் பெரும்பிணியாகிய பிறவியை, மரணமிலாப் பெருவாழ்வால் நிறைவித்துவிட முடியும் என்று முயன்று வெற்றிகண்ட இராமலிங்கர், அதனைத் தனதுடைமையாகக் கொள்ளாமல், தரணிக்கு ஈந்ததனால்தான் 'வள்ளலார்' எனப் பெயர் பெற்றார்.

அதிலும் மதிப்பிற்குரிய 'ஆர்' விகுதியைத் தனக்குரியதாக்கிக் கொள்ள இசையவில்லை அவரது கருணையுள்ளம். திருவருட்பிரகாச வள்ளலாகிய இறைவனை 'ஆர்' எனக் காட்டும் அருட்பா அருளியவர் என்கிற நிலையில், 'திருவருட்பிரகாச வள்ளல் ஆர்' எனப் பிரித்து தன்னை எளிமைக்குள் நிறைத்துக் கொண்டார்.

தான் பெற்ற பேரின்பம் இந்தப் பேருலகு பெறவேண்டும் என்பதற்காக இவர் அருளிய வாக்கமுதம் ஒவ்வொன்றும் நோய் போக்கும் மாமருந்து. அந்த வகையில், திருவருட்பாவின் ஒவ்வோர் அடியும் வலியுறுத்துகிற அறம் நோயற்ற வாழ்வுக்கு நம்மை ஆயத்தப்படுத்தி, மரணமிலாப் பெருவாழ்வுக்கான மார்க்கத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கிறது.

அதனால்தான், 'நோயற்ற வாழ்வில் நான் வாழவேண்டும்' என்று பாடுகிறார். இந்த நான், வள்ளலார் மட்டுமல்ல, இந்தப் பாடலை எடுத்தேதாலும் எல்லாருக்குள்ளும் இருக்கின்ற அவரவருடைய சொந்த 'நான்'. அது உடம்பை மட்டுமல்ல, உயிராகிய ஆன்மாவையும் ஒன்றிணைத்துக் கொள்வது.

அந்த நான், நோயற்ற வாழ்வில் வாழவேண்டும் எனில், 'ஒருமையுடன் நினது திருமலரடி என்று தொடங்கும் பாடலின் ஒவ்வோர் அடியிலும் சொல்லப் பெறுகிற எளிய, இனிய, எல்லார்க்கும் பொதுவாகிய அறங்களைப் பின்பற்றி ஒழுகவேண்டும்.

அணையா அடுப்பினை மூட்டி, பசிப்பிணி போக்கிய வள்ளல் பெருமான், அழியாப் பெருவாழ்வுக்கு ஊறு செய்யும், 'நோய் நாடி நோய் முதல் நாடி அதுதணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செய்யும்' மருத்துவராகவும் விளங்கி, நமக்கு அறவழி காட்டுகிறார்.

அவர் 'மனிதனுக்கு நோயானது, இரண்டு வகையில் ஏற்படுகிறது' என்கிறார். முதலாவது, கொலை, கொள்ளை, களவு, கற்பழிப்பு, ஏமாற்றல், வஞ்சித்தல் இவற்றால் வினை உருவாகி அதனால் நோய் ஏற்படுகிறது; இரண்டாவது, முறையற்ற இன்பத் துய்ப்பு, முறையற்ற உணவு ஆகியவற்றால் வருகிறது.

இதனை ஒழிக்கத் தேவையானது ஒழுக்கம். அதனை நான்கு வகைப்படுத்திக் காட்டுவார் வள்ளல் பெருமான். அவற்றுள் முதலாவது இந்திரிய ஒழுக்கம். மெய், வாய், கண், காது, மூக்கு ஆகிய புறக்கருவிகளைப் பேணிக் காத்துக்கொள்ளல். 'பொறி வாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறிநின்றார் நீடுவாழ்வார்' என்பது வள்ளுவர் வகுத்த நெறி. அதுவே, வள்ளலார் விரித்துரைக்கும் வழி.

இரண்டாவது கரண ஒழுக்கம். மனத்தைச் சிற்சபையிலேயே இடைவிடாது நிற்கச்செய்தல். பூர்வத்தில் புருவமத்தியில் நிற்கச்செய்தல். இஃதன்றி துர்விஷயத்தைப் பற்றாதிருக்கச் செய்தல்; சீவதோஷம் விசாரியா திருத்தல்; தன்னை மதியாதிருத்தல். இராகாதி நீக்கி இயற்கைச் சத்துவமயமாதல், தனது தத்துவங்களை அக்கிரமத்திற் செல்லாது கண்டித்தல் ஆகியன இவ்வகை ஒழுக்கமாகும்.

மூன்றாவது, ஜீவ ஒழுக்கம். ஆண் மக்கள், பெண் மக்கள் முதலிய யாவர்களிடத்திலும், ஜாதி, சமயம், மதம், ஆசிரமம், சூத்திரம், கோத்திரம், குலம், சாஸ்திர சம்பந்தம், தேச மார்க்கம், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்னும் பேதம் நீங்கி, எல்லாரும் தம்மவர்களாய்ச் சமத்திற் கொள்ளுவது ஜீவ ஒழுக்கமாகும்.

அடுத்தது, ஆன்ம ஒழுக்கம். யானை முதல் எறும்பு வரை தோன்றிய ஜீவன்களின் ஆன்மாவே திருச்சபையாகவும், அதன் உள் ஒளியே பதியாகவும் அறிந்து நிற்பது. அந்த ஜீவன்கள் மேல் இரக்கம் வைத்து, எல்லாம் தாமாகவே கண்டு பேதமற்று பூரணமாக நிற்றலே ஆன்ம ஒழுக்கம்.

இவ்வகையாக ஒழுக்கங்களைக் கடைப்பிடித்து நின்றால், சாகாக்கல்வி, தத்துவ நிக்கிரகம் செய்தல், ஏம சித்தி, கடவுள் நிலை அறிந்து அம்மயமாதல் என்கிற நான்கு அரும் புருஷார்த்தங்கள் கைகூடும். இவை நான்கையும் பெறுவதற்கு ஒழுக்கத்தைச் சொல்லிக் கொடுக்கின்றார் வள்ளலார். 'ஒருமையென்பது தனது அறிவு, ஒழுக்கம் ஒத்த இடத்தில், தானே கூடும்; மற்ற இடத்தில், தன்னால் இதர ஜீவன்களுக்கு இம்சை இல்லாது அவர்கள் செய்யினும் தான் சகித்து அடங்கி நிற்க வேண்டும்.'

இது வள்ளலார் 'தருமச்சாலை' ஆரம்பிக்கும் தருணம் ஜீவகாருண்ய ஒழுக்கமாக வெளியிட்டதுதான் என்றாலும் இக்காலத்திற்கும் பொருத்தமுடையதாகிறது.

உலகமெலாம் தீநுண்மி நோய்த்தொற்றுக்கு ஆளாகியும் அஞ்சியும் தனித்திருக்கும் இந்த வேளையில், ஒப்பற்ற வாழ்வியல் அறத்தை உலகிற்கு முன்கூட்டியே உரைத்த வள்ளலார், 'பசித்திரு தனித்திரு விழித்திரு' என்ற படி நிலைகளை அருளினார். இதற்கு 'பட்டினி கிட' என்றும், 'யாருடனும் ஒட்டாது ஒதுங்கு' என்றும், 'தூங்காதே' என்றும் பொருள் கொள்ள இயலாது. குறியீட்டு நிலையில் அருள் வளர்க்கும் அறநெறிகளாக அவை ஒளிர்கின்றன.

வயிற்றுப் பசிக்கு உணவும், ஆன்மப் பசிக்கு ஞானமும் அருளி, உலகியல் தீமைகளில் கலந்து விடாது தனித்தன்மை பேணித் தனித்தவம் புரிவதற்கான விழிப்புணர்வை நல்கி உலகம் உய்யக் காட்டிய வள்ளலாரை எண்ணுந்தோறும் நம் சிந்தைக்கு வருவன திருநெறி சமரச சுத்த சன்மார்க்கமும் அருட்பெரும்சோதியெனும் அருள் வாசகமும்

சமரச சன்மார்க்கம் குறித்து வள்ளலார் குறிப்பிடும்போது,

திருநெறிஒன்றேஅதுதான் சமரசசன் மார்க்கச்

சிவநெறிஎன் றுணர்ந்(து)உலகீர் சேர்ந்திடுமின்!

என்று எளிமையுற எடுத்துரைத்து உலகத்தாரை உவந்து அழைக்கிறார்.

அருட்பெரும்சோதி என்றும் அருள் வாசகம் குறித்துக் கூறுகையில்

உடற்பிணி யனைத்தையும் உயிர்ப்பிணி யனைத்தையும்

அடர்ப்பறத் தவிர்த்த அருட்சிவ மருந்து

என்று குறிப்பிடுகின்றார்.

இப்படி, எந்தப் பாடலை எடுத்து இசைக்கத் தொடங்கினாலும், அவை எல்லாமும் ஒன்றிலேயே ஒன்றி நிற்கின்ற ஓர்மையை உணர்ந்து கொள்ள முடியும்.

'அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்திருந்த உலகர் அனைவரையும்

சகத்தே திருத்திச் சன்மார்க்க சங்கத்தில் அடைவித்திட அவரும்

இகத்தே பரத்தைப் பெற்று மகிழ்ந்திடுதற்கு என்றே எனை இந்த

உகத்தே இறைவன் வருவிக்க உற்றேன் அருளைப் பெற்றேனே'

என்று தன்னிலை விளக்கமாகத் தன்வரவைச் சொல்லிய வள்ளலார், தமிழைத் துணை கொண்டு இன்னிசைப் பாடல்களின் வழியாக இறையுண்மையையும், உரைநடை வாயிலாக உலகியல் ஞானத்தையும், நிறுவனங்கள் வாயிலாக தொண்டு மரபினையும் தந்து நிறைந்த வள்ளலார் அவதார நாள் இன்று என்று வரலாறு கூறினாலும் என்றென்றும் ஒன்றியிருந்து உலகத்தார் இன்பம் எய்த நன்றின்பால் உய்த்த நாயகர், தம் பாடல்களின் வழியாக என்றென்றும் அவதரிக்கிறார்; நம்மை உய்விக்கிறார் என்பது உணர்ந்தறிய வேண்டிய ஓர் உண்மை.

கடந்த காலக் கனவு

என்ன ஆகிறது அந்தக் கடந்தகாலக் கனவிற்கு ?

வெப்பத்தில் இட்ட திராட்சையைப் போல்
உலர்ந்திடுமோ ?
புரையோடிய புண்ணைப் போல்
சீழ் கோர்த்துக் கொள்ளுமோ ?
அழுகிய மாமிசம் போல்
நாறித் தொலைக்குமோ ?
இனிப்புப் பண்டம் போல்
சர்க்கரைத் துகள் படருமோ ?

சுமைமூட்டை போல
கனத்துத் தொங்குமோ ?

இல்லையேல் அது வெடித்துச் சிதறுமோ ?

லாங்ஸ்டன் ஹ்யூ
(தமிழில்: கோபால் ராஜாராம்)

கற்பனை செய்யுங்கள்

சொர்க்கம் இல்லையென்று கற்பனை செய்யுங்கள்
முயன்றால் சுலபம் தான் அந்தக் கற்பனை
நமக்குக் கீழே நரகமும் இல்லை
நமக்கு மேலே வெறும் வானம் தான்
கற்பனை செய்யுங்கள் எல்லா மனிதரும்
இன்றைப் பொழுதுக்கே வாழ்கிறார் என்று.
தேசங்கள் இல்லையென்று கற்பனை செய்யுங்கள்
கடினமில்லை அந்தக் கற்பனை

வாழ்வதற்கு எதுவுமில்லை
கொல்வதற்கும் எதுவுமில்லை.
மதமும் கூட இல்லவே இல்லை
கற்பனை செய்யுங்கள் எல்லா மனிதரும்
அமைதியாய் வாழ்க்கை வாழ்கிறார் என்று
கனவு காண்பவன் என்றென்னைச் சொல்லலாம்,
ஆனால் நான் மட்டுமல்ல —
நீங்களும் இணைவீர் ஒருநாள் என்றும்
உலகமே ஒன்றாய் வாழ்ந்திருக்கும் என்றும்
நம்புகிறேன் நான்.

உடைமைகள் எதுவுமில்லையென்று
கற்பனை செய்யுங்கள்
முடியுமா உங்களால் என்று வியக்கிறேன்.
பேராசைக்கும் இடமில்லை, பசிக்கும் இடமில்லை.
மனித சகோதரத்துவம்
உலகு முழுமையையும்
எல்லா மக்களும் பகிர்ந்து கொள்வதைக்
கற்பனை செய்யுங்கள்.

கனவு காண்பவன் என்றென்னைச் சொல்லலாம்,
ஆனால் நான் மட்டுமல்ல —
நீங்களும் இணைவீர் ஒரு நாள் என்றும்
உலகமே ஒன்றாய் வாழ்ந்திருக்கும் என்றும்
நம்புகிறேன் நான்.

ஜான் லென்னான்

(தமிழில்: கோபால் ராஜாராம்)

அணுவே

கடவுள் துகள்கள்' என்றால் என்ன?

'காட் பார்டிகிள்' எனும் பெயரை விஞ்ஞானிகள் தவிர்ப்பது ஏன்?

சுவிட்சர்லாந்து — பிரான்ஸ் எல்லையில் மலைக்கு அடியில் அமைக்கப்பட்டுள்ள 'லார்ஜ் ஹேட்ரான் கொலைடர்' மூலம் 2012இல் பேரண்டத்தில் ஹிக்ஸ் போசான் துகள்கள் இருப்பது உறுதியானது. சுவிட்சர்லாந்து — பிரான்ஸ் எல்லையில் மலைக்கு அடியில் அமைக்கப்பட்டுள்ள 'லார்ஜ் ஹேட்ரான் கொலைடர்' மூலம் 2012இல் பேரண்டத்தில் ஹிக்ஸ் போசான் துகள்கள் இருப்பது உறுதியானது.

(இணையதளத்திலும் சமூக ஊடகங்களிலும் பல தவறான கூற்றுகள், அறிவியல் ரீதியிலான காரணங்கள் எனும் பெயரில் உலா வருகின்றன. அவற்றில் சிலவற்றுக்கான உண்மையான காரணங்கள் என்ன என்பதை விளக்கி "Myth Buster" எனும் பெயரில், பிபிசி தமிழ் தொடராக வெளியிடுகிறது. அந்தத் தொடரின் இரண்டாம் பாகம் இது.)

பிரிட்டனில் உள்ள எடின்பர்க் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி வந்த காலகட்டத்தில், உலகப் புகழ்பெற்ற இயற்பியலாளர் பீட்டர் ஹிக்ஸ், 'நிறையின் தோற்றம்' என்று தமிழில் பொருள்படும் 'த ஆரிஜின் ஆஃப் மாஸ்' என்று ஓர் ஆய்வுக் கட்டுரையை வெளியிட்டார்.

சுமார் 1400 கோடி ஆண்டுகளுக்கு முன் இந்தப் பேரண்டம் உருவாகக் காரணம் என்று பெரும்பான்மையான அறிவியலாளர்களால் நம்பப்படும் 'பெரு வெடிப்பு' (Big Bang) நிகழ்ந்தது.அந்த வெடிப்பில் இருந்து சிதறிய கூறுகள், வெவ்வேறு திசைகளில் ஒளியின் வேகத்தைக் காட்டிலும் அதிகமான வேகத்தில் சிதறின. அவ்வாறு சிதறிய கூறுகளுக்கு நிறை கிடையாது.

நிறை இல்லாத அந்தக் கூறுகள் ஓர் ஆற்றல் புலத்தில் இணையும்போது அவை நிறை பெறுகின்றன என பீட்டர் ஹிக்ஸ் தனது ஆய்வுக் கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார். (ஒரு பண்டத்தில் எந்த அளவுக்கு பொருள் திணிக்கப்பட்டுள்ளது என்பதைக் குறிக்கும் நிறையானது 'பொருண்மை' அல்லது 'திணிவு' என்றும் வழங்கப்படுகிறது. அப்பண்டத்தின் நிறையுடன், அது இருக்கும்



ஆதாரம்

விக்னேஷ்.அ

இடத்தில் உள்ள ஈர்ப்பு விசையைப் பெருக்கினால், அதன் எடை கிடைக்கும். எடுத்துக்காட்டாக புவியிலும், நிலவிலும் ஒரே பொருள் அல்லது நபரின் எடை வேறுபடக் காரணம், இரண்டின் ஈர்ப்பு விசையும் வெவ்வேறாக இருப்பதே.)

அந்த ஆற்றல் புலம் அறிவியலாளர்களால் 'ஹிக்ஸ் புலம்' (பிவீரீரீவ திவீமீறீபீ) என்றும், அந்த ஆற்றல் புலத்தில் இருந்துகொண்டு, பிரபஞ்சத்தில் உள்ள பொருட்கள் அனைத்துக்கும் நிறையை வழங்கும் துகள்கள் 'ஹிக்ஸ் போசான்கள்' (Higgs Bosons) என்றும் அழைக்கப்படுகின்றன. நான் சொன்னதை யாருமே தீவிரமாக எடுத்துகொள்ளவில்லை, என்னுடன் யாரும் பணியாற்ற விரும்பாவில்லை என்று தனது ஆய்வுக் கட்டுரை குறித்து பிபிசி ரேடியோ— 4 நிகழ்ச்சி ஒன்றில் கூறினார் பீட்டர் ஹிக்ஸ் .

1960களில் பீட்டர் ஹிக்ஸ் அனுமானமாக முன்வைத்த இந்தத் துகள்களின் இருப்பு, 2012இல் பிரான்ஸ் — சுவிட்சர்லாந்து எல்லையில் ஐரோப்பிய அணு ஆராய்ச்சி மையம், பூமிக்கு அடியில் அமைத்துள்ள 'லார்ஜ் ஹேட்ரான் கொலைடர்' (Large Hadron Collider) எனும்



உலகின் மிகப்பெரிய மற்றும் உலகிலேயே மிகவும் அதிக திறன் மிக்க துகள் முடுக்கி (Particle Accelerator) மூலம் செய்யப்பட்ட சோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது.

அதுவரை கண்டுபிடிக்க முடியாத மற்றும் இயலாத ஒன்றாகவே இது கருதப்பட்டு வந்தது. இதுவே கடவுளுடன் இந்தத் துகள்கள் அடையாளப்படுத்தப்படக் காரணமானது என்பதைப் பற்றிப் பார்க்கும் முன், 'ஹிக்ஸ் போசான்' எனும் பெயருக்கு உள்ள இந்தியத் தொடர்பு குறித்துக் காண்போம்.

போசான் – இந்திய



விஞ்ஞானியின் பெயர்

இந்தப் பேரண்டத்தில் உள்ள பொருட்கள் அனைத்தும் அணுக்களால் ஆனவை. அந்த அணுக்கள் புரோட்டான், எலக்ட்ரான், நியூட்ரான் ஆகியவற்றால் ஆனவை.புரோட்டான், நியூட்டரான் போன்றவற்றையும் அணுவடித் துகள்களாகப் பிரிக்க இயலும். இந்த அணுவடித் துகள்கள் அடிப்படைத் துகள்கள், கூட்டுத் துகள்கள் என இரு வகைப்படும்.

அடிப்படைத் துகள்கள் போசான்கள் (Bosons), ஃபெர்மியான்கள் (Fermions) என இரு வகைப்படும். கல்கத்தா பல்கலைக்கழகம் மற்றும் டாக்கா பல்கலைக்கழத்தில் பேராசியராகப் பணியாற்றினார் சத்யேந்திரநாத் போஸ்.குவாண்டம் புள்ளியியலின் முக்கிய கோட்பாடுகளில் ஒன்றான போஸ் — ஐன்ஸ்டைன் புள்ளியியல் கோட்பாட்டை மேம்படுத்த இந்திய விஞ்ஞானி சத்யேந்திரநாத் போஸ் ஆற்றிய பங்களிப்பைபோற்றும் வகையில் பால் அட்ரியன் டிராக் எனும் அறிவியலாளரால், இந்தக் கோட்பாட்டின்படி அமைந்துள்ள அடிப்படைத் துகள்களுக்கு 'போசான்கள்' என்று பெயரிட்டார்.

ஹிக்ஸ் அனுமானித்த இந்த துகள்களும், ஒரே குவாண்டம் நிலையில் இயங்கும் பல துகள்கள் இருக்கும்படியான போஸ்—ஐன்ஸ்டைன் புள்ளியியல் கோட்பாட்டின்படி அமைந்துள்ளது என்பதால் இதற்கு 'ஹிக்ஸ் போசான்' என்று பெயர் வந்தது.

'கடவுள் துகள்கள்' என்று பெயர் வந்தது எப்படி?

1982ஆம் ஆண்டு இயற்பியலுக்கான நோபல் பரிசை வென்ற லியோன் மேக்ஸ் லேடர்மேன், எழுத்தாளர் டிக் தெரேசி உடன் இணைந்து எழுதிய நூல் 'The God Particle: If the Universe Is the Answer, What Is the Question?' என்பது.

1993இல் வெளியான இந்த நூலின் தலைப்பில் The Goddamn Particle என்று எழுதியிருந்தனர்.

'goddamn' எனும் ஆங்கில வார்த்தை சலிப்பு அல்லது வெறுப்பால் உண்டாகும் கோபத்தை வெளிப்படுத்த பயன்படுத்தப்படுவது. ஆய்வாளர்கள் கண்ணில் சிக்காமல் நழுவிக்கொண்டே போகும் அந்த 'போசான்' துகள்களை விளக்கும் வகையிலான அந்தத் தலைப்பை நூலின் பதிப்பாளர் விரும்பவில்லை.

இதன்காரணமாக இதன் பெயரை 'The God Particle' என்று மாற்றியதாக லியோன் மேக்ஸ் லேடர்மேன் மற்றும் டிக் தெரேசி அப்புத்தகத்திலேயே குறிப்பிட்டுள்ளனர்.'ஹிக்ஸ் போசான்' துகள் இருப்பதாக ஓர் அனுமானம் முன்வைக்கப்பட்டு, பல ஆண்டுகளாக நடத்தப்பட்ட, பல்வேறு ஆய்வுகளிலும் இதன் இருப்பு உறுதிசெய்யப்படாமல் இருந்தது. அதனால் உண்டான சலிப்பையே அவர்கள் 'ரீஷீபீணீனீஸீ' என்று எழுதியுள்ளனர்.

அதுவே 'கடவுள் துகள்கள்' என்று தமிழில் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளது. கடவுள்தான் இந்த உலகைப் படைத்தார் என்று மதங்கள் நம்புவதால், உலகில் உள்ள பொருட்கள் அனைத்துக்கும் நிறையைக் கொடுக்கும் இந்த துகளுக்கு 'கடவுள் துகள்' என்று ஒரு சாராரால் அழைப்புப் பெயர் வைக்கப்பட்டுள்ளது.ஆனால், அப்போது அறியப்படாத அந்தத் துகள்களை கடவுளாக சித்தரிப்பதையோ, குறிப்பதையோ பல மதகுருக்கள் கடுமையாக எதிர்த்துள்ளனர்.

இது அலுவல்பூர்வமான பெயர் அல்ல என்பதால் அறிவியல் ஆய்வாளர்கள் அவ்வாறு அதை அழைப்பதில்லை, என்று பல நாடுகளைச் சேர்ந்த பல்வேறு ஆய்வாளர்களும் தங்கள் பேட்டிகளிலும் உரைகளிலும், 'ஹிக்ஸ் போசான்' துகள்களை 'கடவுள் துகள்கள்' என்று அழைப்பது சரியானதல்ல என்று தெளிவு படுத்தியுள்ளனர்.

படைப்பாளிகளுக்கு...

* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!

* படைப்புகளை மின்னஞ்சலில் அனுப்புவது வரவேற்கப்படுகிறது.

*இதழில் வெளியாகிற
கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள்
யாவும் படைப்பாளிகளின்
பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!

தொடர்புகளுக்கு

editor@ithamil.com

அறிவோம் தமிழர்

நீழத் தமிழர்களின் பழங்கால குலதெய்வ வழிபாட்டின் தொல்லியல் ஆதாரங்கள்

இலங்கையின் வடக்கு பகுதியில் நாக வழிபாட்டை குலமரபுத் தெய்வ வழிபாடாக மக்கள் கொண்டிருந்தமை தொடர்பிலான தொல்லியல் ஆதாரங்கள் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறை, தொல்லியல் துறையின் மூத்த பேராசிரியர் புஷ்பரத்தினம் இதனை கண்டுபிடித்துள்ளார். இந்த நிலையில், நாகப் பாம்பை பானையில் வைத்து வழிபாடுகளை செய்தமைக்கான ஆதரங்களும் கிடைக்கப் பெற்றுள்ளதாக பேராசிரியர் புஷ்பரத்தினம் தெரிவிக்கின்றார்.

வட இலங்கை மக்களிடையே நாகத்தை பானைகளில் வைத்து வழிபாடு செய்த தொன்மையான வரலாறு தற்போது உறுதிப் படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிடுகின்றார். தெற்காசியாவில் தொன்மையான நாட்டுப்புற வழிபாடுகளில் ஒன்றாக நாக வழிபாடு காணப்படுகின்றது.

நாகங்கள் பூமிக்குள் இருந்து வந்து, மீண்டும் பூமிக்குள் மறைந்து போவதனால், ஆதி காலத்து மக்கள் அவற்றை மண் புற்றுக்குள் வைத்து வழிபாடுகளை நடத்தியுள்ளமைக்கான சான்றுகளும் காணப்படுவதாக அவர் கூறுகின்றார். கட்டுக்கரை மற்றும் நாகபடுவான் ஆகிய பகுதிகளில் நடத்தப்பட்ட தொல்லியல் ஆகழ்வாய்வுகளின் போதே இந்த விடயங்கள் கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.

இந்த ஆதாரங்களின் ஊடாக வட இலங்கை மக்கள், நாக வழிபாட்டை குல வழிபாடாக கொண்டிருந்தமை உறுதிப்படுத்தப்படுவதாகவும் கூறியுள்ளார்.கிளிநொச்சி — பூநகரி பகுதியிலுள்ள முழங்காவில் நகருக்கு அண்மையிலேயே இந்த பகுதிகளில் அமையப் பெற்றுள்ளன. நாகபடுவான் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட நாக வழிபாட்டு சான்றுகளில் சில, தெற்காசிய நாடுகளில் இதுவரை கிடைக்கவில்லை என பேராசிரியர் கூறுகின்றார்.

நாகபடுவான் — ஊரின் பெயர். நாகபடுவான் என்ற பெயரில் நாகம் இருப்பதுடன், படுவம், படுவான் என்றால் ஆழமான குளம் அல்லது பெரிய குளம் என பொருட்படுகின்றது என

ரஞ்ஜன் அருண் பிரசாத்

கூறப்படுகின்றது.இதன்படி, நாககுளம் என்ற பொருளைக் கொண்ட இந்த ஊரின் பெயர் மாற்றம் பெறாது, பண்டைய தமிழ்ச் சொல்லிலேயே நாகபடுவான் என அழைக்கப்படுவதாக பேராசிரியர் விளக்கமளிக்கின்றார். குறித்த இடத்திலிருந்து ஆதிகால பண்பாட்டுச் சின்னங்கள், சுடுமண்ணிலான நாகச் சின்னங்கள், பீடத்துடன் கூடிய நாகம், நாகினி சிலைகள், சிற்பங்கள், நாக கற்கள் உள்ளிட்ட பழமை வாய்ந்த அடையாள சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த ஆதாரங்கள், ஆதிகால மக்கள் நாகத்தை தமது குலமரபுச் சின்னமாகக் கொண்டிருந்தார்கள் என்பது உறுதிப்படுத்தப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டுகின்றார்.அத்துடன், நாகச் சிற்பத்தை பானையில் வைத்து வழிபட்டமைக்கான சான்றுகள் தொல்லியல் அறிஞர்களுக்கு புதிய விடயங்களாக உள்ளது எனவும் அவர் கூறுகின்றார்.

குறித்த அகழ்வு குழியொன்றிலிருந்து அகழ்ந்து எடுக்கப்பட்ட, அரைவட்ட வடிவில் செய்யப்பட்ட பெரிய பானை, மண்ணில் புதைக்கப்பட்டு, அதன் மேற்பகுதியில் பாம்பு வந்து போவதற்கான வாய்ப் பகுதி சய்யப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவிக்கின்றார். அத்துடன், அந்த பானையைச் சுற்றி மூடிய நிலையில் பாம்பு புற்றை அடையாளப்படுத்தும் 4 சிறு கலசங்களும் காணப்படவதாக அவர் குறிப்பிடுகின்றார். பானையிலிருந்து மண் அகற்றப்பட்டு ஆய்வு செய்யப்பட்ட போது, நாக பாம்பின் சிலை பானையால் மூடப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டுள்ளது. இந்த பானையின் மூன்று திசைகளிலும் தெய்வங்கள் அமர்ந்திருக்கும் பீடங்கள் காணப்படுகிறது. அவற்றில் அமர்ந்துள்ள தெய்வங்களின் இடது கால் பானையை முட்டியவாறு உள்ளது.

நான்காவது திசையில் மண் சட்டிகளின் விளிப்புப் பகுதியில் நான்கு திசைகளை நோக்கியவாறு நாகபாம்பு

நகருக்கு வட பகுதியிலுள்ள பிராந்தியம், நாகதீப(ம்), நாகநாடு என வரலாற்று மூலங்களில் தனித்து அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிடுகின்றார்.

இந்த பெயர்கள் கி.பி.13ஆம் நூற்றாண்டு வரை இப்பிராந்தியத்தில் வன்னி, வன்னிப்பற்று என்ற பெயர்களும், 15ஆம் நூற்றாண்டில் யாழ்பாணம், பட்டினம் என்ற பெயரும் தோன்றும்வரை தொடர்ச்சியாகப் பயன்பாட்டில் இருந்து வந்ததற்கான ஆதாரங்கள் காணப்படுவதாக அவர் கூறுகின்றார்.

பண்டைய இலங்கையில் நாக இனமக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் பல பிராந்தியங்களில் காணப்பட்டாலும், அது இலங்கையில் ஒரு பிராந்தியத்தின் பெயராக அடையாளப்படுத்திக் கூறப்பட்டு வந்ததற்கு தற்காலத்தில் வடஇலங்கையில் வாழும் தமிழ் மக்களின் பூர்வீக வரலாறு ஆதியிரும்புக்காலப் பண்பாட்டை அறிமுகப்படுத்திய நாக இனக்குழுவோடு தோன்றி வளர்ந்ததையே கட்டுக்கரை, நாகபடுவான் அகழ்வாய்வுகள் உறுதிப்படுத்துகின்றது எனலாம் என யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறை,தொல்லியல் பேராசிரியர் புஷ்பரத்தினம் தெரிவிக்கின்றார்.

படமெடுத்த நிலையில் இருக்க, அவற்றின் வால் பகுதிகள் சட்டிக்குள் இணைந்து சட்டியின் நடுமையத்தில் ஒரு வட்டமாகக் காணப்படுகின்றது.

இந்த ஆதாரங்கள் பாம்பு புற்று வழிபாடு தோன்றுவதற்கு முன்னோடியாக ஆதியிரும்புக்காலப் பண்பாட்டுடன் தோன்றிய தொன்மையான வழிபாட்டு மரபு எனக் கூறலாம் என பேராசிரியர் குறிப்பிடுகின்றார்.

அத்துடன், ஒன்று மேற்பட்ட நாக வடிவங்கள், மண் சட்டிகளில் வைக்கப்பட்டமைக்கான ஆதாரங்களும் இங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவிக்கின்றார்.

நாக வழிபாட்டு ஆலயங்களில் நாகதோஷம் நீங்க செப்பு அல்லது மண் பாத்திரங்களில் நாக பாம்பை வைத்து ஆலயங்களுக்கு கொடுக்கும் மரபு ஆதிகாலத்திலிருந்து தோன்றியிருக்கலாம் என பேராசிரியர் கருதுகிறார்.

திருகோணமலை உள்ளிட்ட அநுராதபுரம்

நதியும் நானும்

பார்வையின் எல்லைக்குள் எங்கும் மழையேயில்லை
எரியும் மனதை ஆன்மீகத்தால் குளிர்விக்க
ப்ரிய நேசத்தால் நிறைந்த இன்னுமொரு மழை

அவசியமெனக் கருதுகிறேன் நான்
சற்று நீண்டது பகல் இன்னும்
மேற்கு வாயிலால் உள்ளே எட்டிப் பார்க்கும் பாவங்களை
அதற்கேற்ப கரைத்து அனுப்பிவிடத் தோன்றுகிறது

வாழ்நாள் முழுவதற்குமாக
சுமந்து வந்த அழுக்குகள் அநேகம்
வந்த தூரமும் அதிகம்

எல்லையற்றது மிதந்து அசையும் திசை
இன்னும் நிச்சலனத்திலிருக்கிறது நதி
எனினும்

கணத்துக்குக் கணம் மாறியபடியும்
ஆழத்தில் அதிர்ந்தபடியும் கிடக்கிறோம்
நதியும் நானும்

ரொஷான் தேல பண்டார
(தமிழில்: எம்.ரிஷான் ஷெரீப்)

அதிகாலை வெந்நீர், ஆஹா பலன்கள்!

குளிர்ந்த நீரைக் குடிப்பது இப்போதெல்லாம் ஒரு ஃபேஷன் ஆகிவிட்டது. காய்ச்சல், சளி என்றால் மட்டுமே வெந்நீர் அருந்துவது பலரின் வழக்கம். உடல் எடையைக் குறைக்க நினைக்கும் சிலர் காலையில் மட்டும் வெந்நீர் குடிப்பது உண்டு. 'எடையைக் குறைக்க மட்டும் அல்ல, வெந்நீர் அருந்துவது உடலின் ஒட்டுமொத்த ஆரோக்கியம் மேம்படவும் உதவும்' எனச் சொல்கிறார்கள் மருத்துவர்கள்.

உணவு, உடை, இருப்பிடம்போலவே நம் அன்றாட வாழ்வுக்கு தண்ணீர் மிக அவசியம். உடல் வெப்பநிலையைப் பராமரிக்க, ஊட்டச்சத்துக்களை உடலில் சேர்க்க, நச்சுக்களை அகற்ற... என நீர் ஏராளமான வேலைகளை நமக்குள் செய்கிறது. இரண்டு ஆக்ஸஜனும் ஒரு ஹைட்ரஜனும் சேர்ந்தது நீர் எனப் படித்திருப்போம். அது மட்டுமல்ல, நாம் அருந்தும் நீரில் சோடியம், கால்சியம், மக்னீசியம், தாமிரம் எனப் பல்வேறு தாதுஉப்புக்கள் கலந்திருக்கின்றன. இப்படி, பல நன்மைகளை அள்ளித் தரும் நீரைக் கொதிக்கவைத்து அருந்தலாமா, எவ்வளவு சூடாக அருந்தலாம், அதனால், ஏற்படும் நன்மைகள் என்னென்ன என்று பார்ப்போம்.

கழிவுகளை நீக்கும் வெந்நீர்

காலை எழுந்ததும் வெந்நீர் குடிக்கும் பழக்கம், நம் உடல் எதிர்கொள்ளும் பெரும்பான்மையான நோய்களுக்குக் காரணமான வாய்ப்புகளைக் குறைக்கிறது. வயிற்றைச் சுத்தப்படுத்துவதில், வெந்நீருக்கு இணை எதுவும் இல்லை. வெந்நீரோ, சூடான பொருளோ நம் உடலுக்குள் செல்லும்போது, அதிகமாக வியர்க்கும்; உடலின் வெப்பநிலை அதிகரிக்கும். இப்படி அதிகரித்த வெப்பநிலையைக் குறைத்து, நம் உடல் வெப்பத்தை சமநிலையில் வைத்திருக்கத்தான் வியர்வை உற்பத்தியாகிறது. இதனால், நம் உடலின் செல்களில் உள்ள நீர், உப்பு முதலான கழிவுகள் வெளியேறுகின்றன.

வெந்நீர் குடிக்க உகந்த நேரம்

எல்லா நேரமும் வெந்நீர் அருந்தலாம். இருப்பினும், அதிகாலையில் அருந்துவது மிகவும் நல்லது. அதிகாலையில், வெந்நீரை ஆற்றும்போது, காற்றில் கலந்திருக்கும் ஓசோன் வாயு, வெந்நீருடன் கலக்கும். ஓசோன் என்பது, சூப்பர் ஆக்சிஜன். அது நம் உடலின் சக்தியைத் தூண்டிவிடும். சாப்பிடுவதற்கு அரை மணி நேரத்துக்கு முன்பு குடித்தால், செரிமானத்தைத் தூண்டும்.

செரிமான மண்டலம் மேம்பட...

நமது இரைப்பையானது, புரத செரிமானத்துக்குத் தேவையான பெப்ஸின், ரெனின் முதலான

ச.ஆனந்தப்பிரியா

என்சைம்களைக் கொண்டுள்ளது. இவை இரைப்பையில் இருக்கும். தினமும் காலை இரண்டு டம்ளர் வெந்நீர் குடிப்பதால், பழைய என்சைம்கள் வெளியேற்றப்பட்டு, புது அமிலங்கள் உற்பத்தியாகின்றன. அன்றைய தினம் முழுக்க செரிமான மண்டலம் திறனுடன் வேலை செய்ய இது உதவுகிறது.

மலச்சிக்கலால் அவதிப்படுபவர்களுக்கு வெந்நீர் ஒரு அருமருந்து. மலச்சிக்கல் ஏற்படுவதற்கு முக்கியக் காரணம் அதிகமான கழிவுப் பொருட்கள், நம் குடலில் தங்குவதுதான். இதனால், வயிற்று வலி, உப்புசம் முதலானவை உண்டாகி தொந்தரவு செய்யும். வெந்நீர் அருந்தும்போது, அது உணவுப் பொருட்களை எளிதில் செரிமானம் செய்து, வெளியேற்ற உதவுகிறது.

செல்கள் புத்துணர்வு பெறும்

வெந்நீர் அருந்தும்போது, ரத்தக் குழாய்கள் விரிவுபடுத்தப்படும். இதனால், உடல் முழுக்க நல்ல ரத்த ஓட்டம் கிடைக்கும். செல்களுக்கு ஊட்டச்சத்து மற்றும் ஆக்சிஜன் சீராகக் கிடைக்கும். செல்கள் புத்துணர்வுடன் இருக்கும். இதனால் நம் உடல், பலவிதமான தீங்கு விளைவிக்கும் நோய்களில் இருந்தும் தன்னைத் தற்காத்துக்கொள்கிறது.போதுமான அளவு வெந்நீர் அருந்திவந்தால் சருமம் பொலிவடையும்.

வெந்நீரும் உலோகங்களும்!

வெண்கலம்,தாமிரப் பாத்திரங்களில் வெந்நீர் காய்ச்சி அருந்துவது நல்லது. இந்தப் பாத்திரங்கள்

இல்லாதவர்கள்,எவர்சில்வர் பாத்திரத்தில், நான்கு டம்ளர் தண்ணீர்விட்டு, 60 கிராம் தாமிரத்தட்டு / கட்டியைப் போட்டு, நன்கு கொதிக்கவிட்டு அருந்தலாம் அல்லது தாமிர டம்ளரில் அருந்தலாம். இதேபோல, வெள்ளி, தங்கத்தைப் போட்டும் தண்ணீரைக் காய்ச்சி அருந்தலாம். இதனால்...

- நரம்பு சம்பந்தப்பட்ட நோய்கள் குணமாகும். உயர் ரத்த அழுத்தம், கீழ் வாதம், மன அழுத்தம் போன்றவை கட்டுப்படும்.

- உணவு மண்டலம், சிறுநீரகம் தொடர்புடைய நோய்கள் குணமாகும்.

• சுவாச மண்டலம், நுரையீரல், இதயம், மூளை போன்றவற்றில் உள்ள கோளாறுகள் சரியாகும்.

மற்ற பயன்கள்!

இருமல் மற்றும் சளி ஏற்பட்டால், நம் தொண்டையின் டான்சிலில் அதிக வலி ஏற்படும். அப்போது, வெந்நீர் குடிப்பது தொண்டை வலியைக் குறைக்கும்; நீர்மமாக உள்ள சளியைக் கெட்டியாக்கி வெளியேற்றும். நம் உடலில் உள்ள தேவையற்ற கொழுப்புகள் கரைந்து, ரத்தக் குழாய்கள் சற்று விரிவடைந்து, உடலின் ரத்த ஓட்டமும் மேம்படும். அதனால் தினமும் மூன்றரை லிட்டர் தண்ணீரை மறக்காமல், மறுக்காமல் குடிக்க வேண்டியது கட்டாயம். இதனை குளிர்ந்த நீராக எடுத்துக் கொள்வதைவிட, வெந்நீராக எடுத்துக்கொள்வது சிறந்தது. ஏனெனில் வெந்நீர் ஓர் உணவுப் பொருளாக இருப்பதைக் காட்டிலும் சிறந்த மருந்துப் பொருளாக இருக்கிறது. தினமும் காலையில் எழுந்தவுடன் 2 டம்ளர் வெந்நீர் குடிப்பது நல்லது. இதனை இயற்கை மருத்துவத்தில் `உஷா பானம்' என்பார்கள்.

காலை நேரத்தில் 5—7 மணியளவில் நம் பெருங்குடல் முழு இயக்கத்தில் இருக்கும். இந்த நேரத்தில் வெந்நீர் எடுத்துக்கொண்டால் செரிமானம் மற்றும் மலச்சிக்கல் சார்ந்த பிரச்னைகள் ஏற்படவே செய்யாது. மலச்சிக்கலால் அவதிப்படுபவர்களுக்கு வெந்நீர் ஒரு அருமருந்து. மலச்சிக்கல் ஏற்படுவதற்கு முக்கியக் காரணம் அதிகமான கழிவுப் பொருள்கள், நம் குடலில் தங்குவதுதான். இதனால், வயிற்று வலி, உப்புசம் முதலானவை உண்டாகி தொந்தரவு ஏற்படும். வெந்நீர் அருந்தும்போது, அது உணவுப் பொருள்களை எளிதில் செரிமானம் செய்து, வெளியேற்ற உதவுகிறது. இரவு தூங்கச் செல்வதற்கு முன்பும் ஒரு டம்ளர் வெந்நீர் எடுத்துக்கொள்ள வேண்டும்.

காலையில் குடிக்கும் வெந்நீரில் கொஞ்சம் எலுமிச்சை சாறு கலந்து அதனுடன் சில துளிகள் தேனோ அல்லது சிறிதளவு சர்க்கரையோ கலந்து அருந்தினால் நம் உடலுக்குத் தேவையான வைட்டமின்—சியும், இரும்புச்சத்தும் கிடைக்கும். இதன் காரணமாக உடலின் நோய் எதிர்ப்புத்திறனும் மேம்படும்.

நம் தொண்டை அல்லது உணவுக் குழலில் ஏதேனும் நோய்க் கிருமிகள் இருந்தால் அவற்றால் ஏற்படும் பாதிப்பின் தீவிரத்தன்மை வெந்நீர் அருந்துவதால் ஓரளவு குறைகிறது.

வெந்நீர் அருந்துவதால் உணவுக்குழல், குடல்பகுதி விரிவடைந்து, நாம் உண்ணும் உணவுப் பொருள் எந்தவித சிக்கலும் இன்றி சுமுகமாக உள் செல்கிறது.

வெந்நீர் அருந்தும்போது, ரத்தக் குழாய்கள் விரிவுபடுத்தப்படும். இதனால், உடல் முழுக்க நல்ல ரத்த ஓட்டம் கிடைக்கும். செல்களுக்கு ஊட்டச்சத்து மற்றும் ஆக்ஸிஜன் சீராகக் கிடைக்கும். செல்கள் புத்துணர்வுடன் இருக்கும். இதனால் நம் உடல், பலவிதமான தீங்கு விளைவிக்கும் நோய்களிலிருந்தும் தன்னைத் தற்காத்துக்கொள்கிறது. போதுமான அளவு வெந்நீர் அருந்திவந்தால் சருமம் பொலிவடையும்.

நன்றாகக் கொதிக்கவைக்கப்பட்ட வெந்நீரை அப்படியே சுடச்சுடக் குடிக்காமல், ஆறவைத்துக் குடிக்கும் பதத்திற்கு வந்த பிறகே எடுத்துக்கொள்ள வேண்டும். கொதிக்கக் கொதிக்க இருக்கும் வெந்நீரை ஆற வைப்பதற்காக அதனுடன் கொதிக்கவைக்கப்படாத குளிர்ந்த நீரைச் சேர்க்கக் கூடாது.

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் வெந்நீர் அருந்தலாம். அதுவும் இந்த கோவிட் நேரத்தில் குளிர்ந்த நீரை அருந்துவதைக் காட்டிலும் வெந்நீர் அருந்துவது ஆரோக்கியமானது .எளிமையான `வெந்நீர் மருந்தால்' பெறக்கூடிய ஆரோக்கிய பலன்களை இனி தவறாமல் பெறுவோம்!

தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
Happy
Diwali

இணையம் கவனம்

இணையம்: நில் கவனி செல்!

இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சி, நமது தகவல் பரிமாற்றங்களை சுலபமாக்கி விட்டது. நம் கைக்குள் உலகையே சுருக்கிக் கொடுத்து விட்டது. புகைப்படம், காணொலி உள்ளிட்ட மின்னணு ஆவணங்களை அதி விரைவாக பிறருக்குப் பரிமாற இயலுகிறது. ஒருவருடன் ஒருவா உரையாடிக் கொள்ள மட்டுமே அலைபேசி என்றிருந்த நிலை மாறி, இன்று அது பல அவதாரங்களை எடுத்து விஸ்வரூபமாகக் காட்சி அளிக்கிறது.

கணினி, இணையம் தொடர்பான மின்வெளித் தாக்குதல்கள் அதிகரித்துள்ள நிலையில் அவற்றை எதிர்கொள்ளும் வகையில் தகவல் பாதுகாப்பு விழிப்புணர்வு நமக்கு மிக அவசியம். அந்த வகையில் தேசிய இணையப் பாதுகாப்பு விழிப்புணர்வு மாதமாக இந்த அக்டோபர் மாதத்தை அறிவித்துள்ளது நம் இந்திய அரசு. புதுப்புது செயலிகளின் வரவினால் இணையப் பயன்பாட்டில் விழிப்புணர்வுடன் இயங்க வேண்டிய காலமிது.

கரோனாவிற்குப் பிறகு முனைவர் பட்ட வாய்மொழித் தேர்வுகள் கூட இன்று செயலி வழியிலேயே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எண்ணற்ற கருத்தரங்கங்கள், நூல் வெளியீடுகள், விமர்சனங்கள், பட்டி மன்றங்கள், கவியரங்கங்கள் என பெரும்பாலான நிகழ்ச்சிகள் இன்று நேரலையில் செயலி வழியாக நடைபெறுகின்றன. அடையாள எண் மற்றும் கடவுச்சொல் அடங்கிய தகவலையும் நாம் உடன் பெறுகிறோம். உலகின் எந்த மூலையிலிருந்தும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்றனர்.

இப்படி மின்னஞ்சல் மற்றும் கட்செவி அஞ்சல் வழியாகப் பகிரப்படும் வலை இணைப்பை நாம் தொட்டால் போதும். நம்மை அது அந்தத் தளத்திற்குக் கடத்திக் கொண்டு சென்று விடும். இது மிகச் சுலபமாக இருப்பதால் அனைவரும் இதையே பின்பற்றுகிறோம். நம்முடைய அலைபேசியாகவே இருந்தாலும் மின்னஞ்சல் சேவைகள் எப்போதும் அதில் திறந்த நிலையிலேயே இருக்கின்றன.

ஒரு சில போலி இணைப்புகள், நம்மை மெய்யான தளம் போல தோற்றமளிக்கும் ஒரு மோசடி தளத்திற்கு அழைத்துச் செல்லக் கூடும். அதனால் இணைப்பு எண்ணையும், கடவுச் சொல்லையும் தனியே முகவரிப் பட்டியலில் தட்டச்சு செய்து பிரதான வலைதளத்திற்குச் செல்வதுதான் பாதுகாப்பானது.

இன்று பலர் தங்கள் சிந்தனைகளை படைப்பாக்கி சமூக வலைதளங்களில் பதிவிடுகின்றனர். குறிப்பாக வலைப்பதிவு எழுதுபவர்கள் தங்களது



பவித்ரா நந்தகுமார்

கட்டுரைகளை இணையத்தில் பதிவு செய்கின்றனர். இந்தக் கட்டுரைகளுக்கு காப்புரிமை பெறாத பட்சத்தில் எவரேனும் இத்தகவல்களைத் திருடி விற்று பணம் ஈட்ட வாய்ப்புள்ளது. கட்டுரைகளை இணையத்தில் பதிவிடுவதற்கு முன்பாக காப்புரிமை பெறுவது நல்லது.

இந்தியாவில் இணையம் சார்ந்த குற்றங்களில் அதிகம் பாதிக்கப்படுவது பெண்களே. இத்தகைய குற்றங்கள் எவருக்கு வேண்டுமானாலும் நடக்கலாம். கணினியைப் பயன்படுத்தும் பல பெண்கள், வலை இணைப்பைப் பயன்படுத்துவது பற்றி முழுமையாக அறிந்திருப்பதில்லை. கோடிக்கணக்கான மக்கள் அன்றாடம் இணையத்தைப் பயன்படுத்துகிறார்கள்.

இதில் நாம் தேடுவதையெல்லாம் யார் வந்து பார்த்துக் கொண்டிருக்கப் போகிறார்கள் என்று பெரும்பாலான பெண்கள் எண்ணுகிறார்கள்.



அதோடு உயர் பதவிகளில் வகிப்பவர்கள்தான் இதைப்பற்றி அதிகம் கவலைப்பட வேண்டும் என்றும் கருதுகிறார்கள். இது முற்றிலும் தவறான எண்ணம்.

சாலையில் செல்லும்போது எப்படி நாம் போக்குவரத்தை கவனித்து பொறுப்புடன் செல்கிறோமோ அதுபோலவே இணையவெளியைப் பயன்படுத்தும்போதும் மிக மிக கவனத்துடன் பயணம்செய்யவேண்டும். அப்போதுதான் பாதிப்புகளில் இருந்து தப்ப முடியும்.

எனக்குத் தெரிந்த பெண் ஒருவர் வெளியிடங்களுக்குச் செல்ல சர்வசாதாரணமாக வாடகை வண்டியைப் பயன்படுத்துவார். இதற்காக சில செயலிகளைப் பயன்படுத்த நமது பெயர், அலைபேசி எண், மற்றும் மின்னஞ்சல் முகவரிகளைக் கொடுக்க வேண்டியுள்ளது. அதுமட்டுமல்ல, நாம் வண்டி பதிவு

செய்யும்போது வாடகை ஓட்டுனருக்கு நமக்கு அலைபேசி எண் பகிரப்படுகிறது. ஒரு முறை அந்த பெண்ணிற்கு ஓட்டுநரால் பிரச்னை வந்தது. எப்படியோ சமாளித்தார்.

இப்படிப்பட்ட பிரச்னைகளை சமாளிக்க ஒரே வழி, பெண்கள், இணையப் பயன்பாட்டிற்கென தனி அலைபேசி எண்ணும் தனிப்பட்ட அழைப்புகளுக்காக தனி அலைபேசி எண்ணும் கையாள்வதுதான். இதன் மூலம் தேவையற்ற சங்கடங்களை தவிர்க்கலாம்.

வாழ்வியல் மாற்றம் காரணமாக இன்று பெரும்பாலான திருமணங்கள் இணைய திருமண தகவல் தளங்கள் மூலம் நடைபெறுகின்றன. இதிலும் ஏகப்பட்ட மோசடிகள் நடைபெறுவதாக வாடிக்கையாளர்கள் புலம்புகிறார்கள். பொய்யான புகைப்படங்களையும் சம்பள விவரங்களையுமே பெரும்பாலானோர் பதிவிடுகின்றனராம். இத்தளங்களில் பதிவு செய்தால் நம் அனைத்து தகவல்களும் பொதுவெளியில் பரிமாறப்படுகிறது. அவர்கள் அளிக்கும் தகவல்கள் உண்மைதானா என உறுதிபடுத்திக் கொள்வது சிறந்தது.

எடைக் குறைப்பு மற்றும் அழகுக் குறிப்பு முன்பதிவு செய்யும் போலி செயலிகள் பெண்களை குறி வைத்து கவர்ச்சிகரமான இலவச சலுகைகளை வாரி வழங்குகின்றன. பயணம் மற்றும் விடுதிகள் முன்பதிவு செயலிகளோ அதிரடியான தள்ளுபடிகளை அறிவித்து, தங்களின் செயலிகளை பதிவிறக்கம் செய்யத் தூண்டுகின்றன. நன்கு படித்த பெண்களே இவற்றில் பதிவு செய்து தங்கள் பணத்தை இழந்துள்ளனர் என்பதுதான் அதிர்ச்சிகரமான செய்தி.

பணப் பரிமாற்றத்திற்கு முன்பாக அது சார்ந்த விவரங்களை அந்தந்த வலைதளங்களில் சரிபார்த்து உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். வீட்டிலிருந்தே வேலை பார்க்கும் வாய்ப்புகள் சார்ந்த ஊழல்கள் பெரும்பாலும் இல்லத்தரசிகளை குறிவைத்தே நடக்கின்றன. என் தோழி ஒருவர் வேலை வாய்ப்புப் தளம் ஒன்றில் பதிவு செய்திருந்தார். அவருடைய தகவல்களைத் திருடிய நபர் அவருக்கு வேலை வாய்ப்பை வழங்குவதாக பேசி நம்ப வைத்து முன்பணமும் பெற்றார்.

அவரும் நம்பி அவர்களுக்கான பணியை செய்து

While the Internet holds many potential opportunities for children, there is also a tremendous danger of online predators.

இணைய பிரௌஸர்களில் உள் நுழைந்து, இதை நம்மிடமிருந்து சற்று விலக்கி வைத்துக் கொள்ள வேண்டும். இணையப் பாதுகாப்பை உறுதிபடுத்துவதில், பிரௌஸர் பாதுகாப்புதான் முதல் படி. நாம் மட்டுமே பயன்படுத்தக்கூடிய கணினியாக இருந்தால், இதனால் பிரச்னை ஏதுமில்லை. ஆனால் வேலை பார்க்கும் இடம், இணைய சேவை மையங்கள் உள்ளிட்ட பொது இடங்களில் பயன்படுத்தும்போது நிச்சயம் இது பற்றிய புரிதல் அவசியம்.

இணையத்திலும், சமூக,வலைதளங்களிலும் பெண்களை பாலியல் ரீதியாக தொந்தரவு செய்வதும் அவர்கள் மீது வன்முறையைத் தூண்டுவதும் பெண்களின் புகைப்படங்களை ஆபாசமாக சித்தரித்து வெளியிடுவதும் தற்போது அதிகரித்து வருகிறது.

கொடுத்தார். ஒரு மாதம் மட்டுமே ஊதியம் வழங்கிய நிலையில், அடுத்த ஆறு மாதங்களுக்கு மொத்தமாக தருகிறேன் என வேலை வாங்கிக் கொண்டு இறுதியில் பணம் கொடுக்காமல் தொடர்பையும் துண்டித்துக் கொண்டனர். நம் தகவல்களும் உழைப்பும் சுரண்டப்பட்டு விட்டதே என்ற அதிர்ச்சி பல பெண்களுக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்திவிடுகிறது.

வீடுகளில், தாய் தன் பிள்ளைகளின் விருப்பு வெறுப்புகளை நன்கு தெரிந்து வைத்திருப்பாள். இந்த புரிதலில் ஒரு பெருமையுண்டு. ஆனால், இதைப்போன்றே இணையத்தில் நாம் எதைத் தேடுகிறோம், எதெதில் நம் விருப்பம் அதிகம் என்பதை நமக்கே தெரியாமல் வேறொருவர் அறிந்து வைத்திருந்தால் அவரை நாம் 'வேவு பார்ப்பவர்' என்றுச் சொல்வோம். இப்படிப்பட்ட வேலைகளை இணையத்தில் கச்சிதமாக செய்வது 'குக்கீஸ்'.

உதாரணமாக நாம் ஒருதிரைப்பட வலைதளத்தைப் பார்வையிடும்போது நமக்கு அடிதடி படங்களை கண்டுகளிக்க ஆர்வம் இருப்பதாக சுட்டிக்காட்டினால் இந்த 'குக்கீஸ்' நம்முடைய விருப்பத்தை நினைவில் கொண்டு அடுத்த முறை அந்த வலைதளத்தைப் பார்வையிடும்போது அடிதடி படங்களை வரிசையாக காண்பிக்கும். நமக்குப் பிடித்தமானவர்கள் இப்படிச் செய்தால் உண்மையில் உள்ளம் மகிழ்வோம். ஆனால் நமக்காக சேவை புரியும் இந்த 'குக்கீஸ்'களை ரசிக்கவா முடியும்?

அதனால், சமூக வலைதளங்களில் பெண்கள் தங்கள் புகைப்படங்களைப் பகிராது இருப்பதே பாதுகாப்பானது எனச் சொல்வது பெண்கள் வெளி உலகிற்கு வருவதே ஆபத்தானது என்று கூறுவதற்கு ஒப்பானது. இது பெண்களை இன்னும் இன்னும் பின்னோக்கி இழுத்துச் செல்லும். பள்ளியில் சேர்வது முதற்கொண்டு கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிப்பது வரை அனைத்து இடங்களிலும் இன்று புகைப்படம் தேவைப்படுகிறது.

'பெண்களே! பாதுகாப்பில்லை, பதிவிடாதீர்கள்' என உரக்கக் குரல் கொடுத்துக் கொண்டே இருந்தால் பெண்கள் மீண்டும் கற்காலத்திற்கே செல்ல வேண்டியதுதான்.

துரதிருஷ்டவசமாக இன்று பள்ளி, கல்லூரி மாணவர்கள் தொழில்நுட்ப சாதனங்கள் முன்பே பழியாய் கிடக்க வேண்டிய நிலை. அதனால் பெற்றோர், பிள்ளைகள் மீது கவனமாக இருந்து பாதுகாப்பு அம்சம் குறித்து அவ்வப்போது அவர்களுடன் அளவளாவி விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும். இப்படி இருந்தால்தான் பல விபரீதங்களைத் தவிர்க்க முடியும்.

தமிழ் 2020

நற்றமிழரின் நாடித்துடிப்பு

JANUARY

FEBRUARY

MARCH

APRIL

MAY

JUNE

JULY

AUGUST

SEPTEMBER

OCTOBER

NOVEMBER

Su	Mo	Tu	We	Th	Fr	Sa
1	2	3	4	5	6	7
8	9	10	11	12	13	14
15	16	17	18	19	20	21
22	23	24	25	26	27	28
29	30					

DECEMBER

Su	Mo	Tu	We	Th	Fr
		1	2	3	4
6	7	8	9	10	11
13	14	15	16	17	18
20	21	22	23	24	25
27	28	29	30	31	

அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com



editor@ithamil.com

அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com

VARSHA™

IDLI/DOSA BATTER

Let's eat the Best!